வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 04 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 184 பக்கங்கள் : 20



07 ரயில் விபத்து: நவீனத்திலும் விஞ்சும் பரிதாபம்!



08 மதநிந்தனைப் பேச்சுக்கள் தோற்றுவிக்கும் சர்ச்சைகள்



09 சம்பந்தனுக்கு வந்தது பொல்லாத கோபம்! ரணிலுக்கு எச்சரிக்கை; குகதாசனுக்கு கல்தா!



10 சாதி பாகுபாட்டிற்கு எதிராக மசோதா நிறைவேற்றிய அமெரிக்க மாகாணம்:

# இந்தியாவின் அழுத்தத்தால் விரைவில் மாகாண தேர்தல்!

## தயாராகுமாறு சகாக்களுக்கு பஸில் பணிப்பு



கொழும்பு, ஜூன் 11

**இந்தியாவின் அழுத் தம் காரணமாக முதலில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தா பகரும், முன்னாள் அமைச்சரு மான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார் என சிங்கள இணைய ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பொதுஜன பெரமுன வின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் மொட்டு கட்சி தலை மைய கத்தில் நேற்று முன் தினம் கலந்துரையாட லின் போதே பஸில் ராஜ பக்ஷ இவ்வாறு தெரிவித் துள்ளார் என தெரியவரு கின்றது. .இந்தியாவின் அழுத்தத்தால் மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்த வாய்ப்புள்ளதால், அதனை எதிர்கொள் வதற்கு தயாராகுமாறு கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு பஸில் ராஜபக்ஷ ஆலோ சனை வழங்கியுள் ளார்.

19

# கொழும்பு மாவட்டத்தில் அதிகளவு எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூன் 11

பெறப்பட்டுள்ள புதிய வாக்காளர்களின் பெயர்ப் பட்டியலின் அடிப்படை யில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்கான பாராளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறிப்பாக 2023ஆம் ஆண்டு பதிவு செய்யப் பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின்படி, கொழும்பு மாவட்டத்தில் இருந்து அதிகள வான அதாவது 19 பாராளுமன்ற

19



# 33 வருடங்களின் பின் விடுவிக்கப்படும் மாங்கொல்லை வைரவர் ஆலயப் பகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 11

கடந்த 33 வருடங்க ளாக இராணுவக் கட்டுப் பாட்டில் இருந்த காங்கே சன்துறை மாங்கொல்லை வைரவர் ஆலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள சில பகுதிகள் மீண்டும் அப் பகுதி மக்களிடம் கைய ளிக்கப்படவுள்ளன.

33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்த ஜே/233 கிராம சேவையாளர் பிரி வில் உள்ள மாங்

19

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு பெரமுன ஆதரவா?

## அப்படி முடிவேதும் இல்லை என்கிறார் சாகர காரியவசம்



கொழும்பு, ஜூன் 11

அடுத்த ஜனாதிபதித் தேர் தலில் தற்போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமது கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி உறுப்பினர் ஒருவரே ஜனாதி பதித் தேர்தலில் களமிறங்கவேண்டும் என்பதே கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப் பாடாகும் எனவும், தனிப்பட்ட நபர்கள் வெளியி டும் கருத்துகள் கட்சியின் நிலைப்பாடு அல்லவென வும் சாகர குறிப்பிட்டார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போ தைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை

19

# 300 இற்கு மேற்பட்ட பொருள்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கம்!

கொழும்பு, ஜூன் 11

பல பொருள்களுக் கான இறக்குமதி கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டுள்ள தாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டா ளர் நாயகம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறி வித்துள்ளார்.

இதன்படி, நேற்று முன் தினம் அமுலுக்கு வரும் வகையில் குறித்த கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டுள் ளன.

இலத்திரனியல் பொருட்கள், சுகா

19

# அரசியல் ஆயுதமாக ஒருபோதும் பௌத்தத்தை பயன்படுத்தாதீர்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 11

புத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் நம் அனைவரின தும் பொறுப்பாகும். இதற்காக புத்தசாசன அமைச்சு,பௌத்த நிதியம் மற்றும் பல சாசன ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடை முறைப்படுத்தப்பட்ட

19

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன் 11

எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் எந்தவொரு தேர்தலை யும் எதிர்கொள்ள தமது கட்சி தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19

# தமிழர் பிரச்னை தீர்க்காமல் நாட்டை முன்னேற்றமுடியாது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 11

தமிழ் மக்களின் பல் வேறு விதமான பிரச்னை களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்காமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியாது என முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க தெரி வித்துள்ளார்.

சமகால அரசியல் நில வரம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி

19

# ஜனாதிபதியின் ஆலோசனைக்குழுவால் மாகாண சபைத் தேர்தலுக்குக் குந்தகம்!

## சுட்டிக்காட்டுகின்றது ரெலோ

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஜனாதிபதியால் பரிந் துரைக்கப்பட்டு அல்லது முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்கான ஆலோசனைக்குழு ஒன்றை அமைக்கும் ஏற் பாடானது, ஏற்கனவே நாங்கள் கோரிக்கை வைத் திருக்கும், மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண் டும் என்ற நிலைப்பாட் டுக்கு குந்தகம் விளைவிப் பதாக அமைகிறது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி தெரிவித்துள்ளார்.

ஊடகங்க ளுக்கு அனுப்பி வைத்த ஊடக

19

# சுவிஸ் பாதுகாப்பு ஆலோசகருடன் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 11

சுவிஸ் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கும் சுவிற்சர்லாந்திற்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இராணுவ ஒத்துழைப்பு மற்றும் இந்நாட்டு படைகளுக்கு வழங்கக்கூடிய பயிற்சி வாய்ப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத போதைப்பொருள் நாட்டுக்குள் செல்வதைத் தடுப்பதற்கு சட்டத்தை அமுல்படுத்தும் முகவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் சுவிஸ் பாதுகாப்பு ஆலோசகருக்கு கமல் குணரத்ன அறிவித்துள்ளார். (அ)

# பிரித்தானியா செல்லும் இலங்கையர்கள் இந்நாட்டு லைசென்ஸ் பயன்படுத்தலாம்

கொழும்பு, ஜூன் 11

பிரித்தானியாவுக்கு தொழில் நிமித்தம் செல்லும் இலங்கையர்களும் அங்கிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளும் தத்தமது நாடுகளில் வழங்கப்பட சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நாடுகளிலேயே வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தும் வகையிலான ஒரு இணக்கப்பாடு இரு நாடுகளுக்கும் இடையில் எட்டப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டால் பயிற்சிப் பரீட்சைக்கு தோற்றாமல் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் வசந்த ஆரியரத்ன தெரிவித்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இதேபோன்ற முறையின் கீழ் இத்தாலியில் பணிபுரியும் இலங்கையர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தியதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் வசந்த ஆரியரத்ன தெரிவித்தார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் தானியங்கி குடிவரவுக் கட்டுப்பாடு!

## சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஜூன் 11

**பயணிகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தானியங்கி குடிவரவு கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவ, சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

அதன்படி, ஆரம்ப கட்டத்தில், புறப்பாட்டு முனையத்தில் இரண்டு தானியங்கி குடிவரவு செக்-இன் கவுண்டர்கள் நிறுவவும் 8 மாதங்களின் பின்னர் வருகை முனையத்திலும் இரண்டு கவுண்டர்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை குடிவரவுத்துறையும், விமான நிலைய மற்றும் ஏவியேஷன் சேர்வீசஸ் நிறுவனமும் நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கும்.

சிங்கப்பூர் நிறுவனமான தேல்ஸ் டிஸ் தயாரித்த உபகரணங்களோடு இந்த வகையான தானியங்கி குடியேற்றக் கட்டுப்பாட்டு அமைப்புகள் உலகின் பல விமான நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன. (அ)

# கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறைக்கப்படும்



கொழும்பு, ஜூன் 11

எதிர்காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை குறைந்த விலையில் மக்களுக்கு வழங்குவதற்கான விதிமுறைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மீன்களின் விலை அதிகரிப்பு காரணமாக கோழிப்பண்ணை வியாபாரிகள் முறையற்ற இலாபம் பெறும் நோக்கில் விலையை அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களுடன் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைக் கூறினார்.

# வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்கள் மூலம் இலங்கைக்கு 2 பில்லியன் டொலர் பணம்!

## கடந்த ஆறு மாதங்களில் மட்டும்

கொழும்பு, ஜூன் 11

2023 ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

மே மாதத்தில் வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களிடமிருந்து 479.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 2022 ஆம் ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 175 மில்லியன் டொலர்கள் அதிகம் என்றும் 2022 மே மாதத்தில் இலங்கைக்கு 304.1 மில்லியன் டொலர் கிடைத்ததாகவும் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான மொத்தம் 2,346.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

பகிடிவதை விவகாரம்

# பேராதனை மாணவர் 11 பேர் இடைநீக்கம்!

கொழும்பு, ஜூன் 11

பகிடிவதை சம்பவம் தொடர்பில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேர் கற்றல் நடவடிக்கையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் குழுவே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விடுதியில் புதிய மாணவர்களிடைம் இருந்து பொருட்களை பெற்றுள்ளதாகவும் மேலும் அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சட்டவிரோதமாக பீடி இலை கடத்த முற்பட்ட மூவர் கைது!



கொழும்பு, ஜூன் 11

சட்டவிரோதமாக பீடி இலைகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட மூவர், நேற்று அதிகாலை பாலாவி பகுதியில் வைத்து புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பீடி இலைகளைக் கடத்திச் செல்வதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய, புத்தளம் பொலிஸ் விஷேட அதிரப்படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், பீடி இலைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 36 பொதிகள் அடங்கிய 1100 கிலோ கிராம் பீடி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், லுனுவில பகுதியைச் சேர்ந்த 34, 25 வயதுடைய இருவரும் கற்பிட்டி பள்ளிவாசல்துறை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கற்பிட்டிக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியென பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (அ)

# பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி மிக அவசியம்

## இராஜாங்க அமைச்சர் முன்மொழிவு




கொழும்பு, ஜூன் 11

பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை உள்ளடக்கவேண்டும் என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே முன்மொழிந்துள்ளார்.

இன்றைய சிறுவர்களுக்கு பாலியல் பற்றிய உண்மையான தகவல்கள் தெரியாது என்பதனால் பல்வேறு பிரச்னைகளுக்கு சிறுவர்கள் ஆளாகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

சில பாடசாலை மாணவர்களுக்கு சமூக நோய் என்றால் என்ன என்று தெரியாது. என்றும் சில சிறுவர்கள் இந்த நோய்களைப் பற்றி அறியாததால் அவர்களும் பாதிக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே கோரினார். (அ)

# முதலாம் தரத்துக்கு மாணவரை அனுமதிக்க புதிய விதிமுறைகள்

கொழும்பு, ஜூன் 11

அடுத்த வருடம் (2024) முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக தயாரிக்கப்பட்ட புதிய விதிமுறைகள் வெளியிடப்படவுள்ளன.

மேலும், இது தொடர்பிலான சுற்றறிக்கை நாளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மாற்றுத்திறனாளிச் சிறுவர்களை முதலாம் தரத்தில் சேர்ப்பது தொடர்பான ஏற்பாடுகளும் இவ்வருட சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு மூன்று வீதத்தை ஒதுக்குவதற்கு முன்மொழியப்பட்ட போதிலும், குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்காமல் அவ்வாறான சிறுவர்களை முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து சுற்றறிக்கையில் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உறுதிபடுத்தியுள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் முதலாம் தர மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் உடனடியாக அழைக்கப்படும் எனவும் அதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

முதலாம் தர மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பொதுவாக ஜூன் முதல் வாரத்தில் அழைக்கப்படும்.

அடுத்த வருடம் முதலாம் தரத்திற்கு சிறுவர்களை அனுமதிப்பது குறைந்தது பெப்ரவரி மாதம் வரை தாமதமாகும் என்பதால் விண்ணப்பங்கள் கோருவதில் தாமதம் ஏற்படுவது பிரச்னையில்லை என வும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# இன, மத மோதல்களுக்குள் நாட்டைத் தள்ள முயற்சி!

## அனுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 11**

**இலங்கை வரலாற்றில் கடந்த 10 தசாப்தங்களாக பெரும் அழிவுகளை ஏற்படுத்திய பழைய இன வாத, மத வாத மோதல்களுக்கு நாட்டைத் தள்ளும் பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

மக்கள் இந்த அரசியல் சூதாட்டத்திற்கு ஏமாறாது உண்மை நிலைமையை புரிந்துக்கொள்ளவேண்டும்.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை.

இதனால், தேர்தலுக்கு பயந்து பல கதைகளை கூறி வருகிறார். தற்போது நடத்தப்படவேண்டிய தேர்தலை கூட ஒத்திவைத்துள்ளனர்.

குறிப்பாக சமூகத்தில் பல்வேறு மோதல்களை உருவாக்கி, தேர்தலை ஒத்திவைக்கும் பழைய ராஜபக்ஷ கோட்பாடுகளுக்கு செல்வதை தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த சில வாரங்கள் முழுவதும் பழைய இனவாதத்தை தூண்டும் அணிகளை நாங்கள் பார்த்தோம்.

அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டவர்கள் மீண்டும் களத்திற்கு வந்துள்ளனர் என்பது தெளிவாக தெரிகின்றது.

அதேபோல் வடக்கில் அடிக்கடி ஏற்படும் சமய ரீதியான பதற்றங்களை அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்து வதை காண முடிகிறது.

இதனால், அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளும் மோசமான அரசியல் சூதாட்டத்திற்கும், இன வாத, மதவாத மோதல்களுக்கும் ஆதரவளிக்காது செயற்படுமாறு நாங்கள் பொது மக்களை கேட்டுக்கொள்கிறோம்- என்றார். (அ)

# பேராதனை பல்கலைக்கழகத்தை பார்வையிட மக்களுக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 11

பேராதனை பல்கலைக் கழகத்தை பொதுமக்கள் நேரில் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜூலை முதலாம் திகதியை திறந்த நாளாக பிரகடனப்படுத்தி பல்கலைக்கழகத்திற்கு பொது மக்களை அனுமதிப்பதற்கு பேராதனை பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

வரலாற்றில் ஒரு பல்கலைக் கழகம் பொதுமக்களின் சார்பில் திறந்த நாள் தினத்தை அறிவித்தது இதுவே முதல் முறை.

பல்கலைக்கழக வளாகம் மற்றும் ஆய்வு நடைமுறைகள், சுற்றுச்சூழல் பொதுமக்கள் நேரில் சென்று பார்வையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களும் ஜூலை முதலாம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆளும் தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் இணைந்து பயணிப்பது மிக அவசியம்!

## கிழக்கு ஆளுநர் செந்தில் வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூன் 11

ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் ஒன்றாக இணைந்து பயணிப்பதன் மூலம் மாகாணங்களை முதல்நிலைக்கு கொண்டு வரமுடியும் என்பது உணரப்பட்டுள்ளதன் காரணமாக இன்று அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஏற்றுமதியை நோக் காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக் கல் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் வாழை மற்றும் மாதுளை உற்பத்தியாளர்களுக்கான நீர்ப்பம்பிகள் வழங்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.



மட்டக்களப்பு, கல்லடி சன் சைன் கிறான்ட் மண்டபத்தில் மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ் வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

நவீனமயமாக்கல் திட்டத்தின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளரும் முன்னாள் மட்டக்களப்பு அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்,தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்தன், மற்றும் விவசாய நவீனமயமாக் கல் திட்டத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் மாதுளை மற்றும் வாழை உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள 350 பயனாளிகளுக்கு நீர்ப்பம்பிகள் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர்,

விவசாயிகளின் உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலமே அவர்களை அடுத்தகட்டத்திற்கு கொண்டுசெல்லமுடியும்.எந்த துறையானாலும் அவர்கள் சாதனைகள் படைப்பதற்கு போசாக்கான உணவு அவசியமாகும்.அதனை எல்லோராலும் வழங்கமுடியாது. விவசாயிகளால் மட்டும்தான் வழங்கமுடியும்.அவ்வாறான அங்கீகரிக்கப்படாத விவசாயிகளை நாங்கள் அடையாளம் கண்டு நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

விவசாயிகளுக்கான உதவிகளை மேலதிகமாக வழங்கும் போது விவசாயிகளின் உற்பத்திகளும் அதிகளவில் கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எப்போது ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாக செயற்படுகின்றார்களோ அன்று இலங்கையில் முதல் மாவட்டமாக இது மாறும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதற்கு இந்த மேடையானது நல்லமுன்னு தாரணமாகும். இங்குள்ள அனைவரும் விவசாயிகளினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளையே முன்னெடுத்து வருகின்றனர்-என்றார். (அ)

# வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய வயோதிபத் தம்பதி விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 11

வாகன விபத்தில் வயோதிபத் தம்பதியினர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவுடன் லொறி மோதியதில் ஏற்பட்ட விபத்திலேயே குறித்த தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் அம்பாந்தோட்டை, வலஸ்முல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபத் தம்பதியினர் ஓட்டோவில் வைத்தி யசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை விபத் தில் சிக்கியுள்ளனர்.

விபத்தில் 77 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், 75 வயதுடைய மனைவி வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த ஓட்டோச் சாரதியான 26 வயதுடைய இளைஞர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவுடன் மோதிய லொறியின் சாரதியான 35 வயதுடைய குடும்பஸ்தர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# இணையத்தளம் வழியாக வாக்காளர் பதிவை மேற்கொள்வதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 11

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கு இணையத்தளம் வழியாக விண்ணப்பிக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

www.elections.gov.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்காளர்கள் தம்மை பதிவு செய்துக்கொள்ளலாம் என தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்களை திருத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்காளர் கணக்கெடுப்பு விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்த கணக்கெடுப்புப் படிவங்களை பூர்த்தி செய்ய ஒத்துழைப்பை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு பொது மக்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் ரத்நாயக்க மேலும் கூறினார்.

வாக்காளர் பட்டியல்களை திருத்தும் பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளன. (அ)



# 6 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருள் சிக்கியது!

கொழும்பு, ஜூன் 11

கொஸ்கொட பிரதேசத்தில் ஆறு கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது .

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றுவளைப்பு நடவடிக்கையின் போது இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

குறித்த போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

போதைப்பொருளை வைத்திருந்த இளைஞர்கள் இருவரும் கொஸ்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொஸ்கொட பகுதியில் இருந்து இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களில் அதிக பெறுமதியான போதைப் பொருள் தொகை இதுவாகும் எனவும் கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கடலில் மூழ்கிய மூவரை உயிருடன் மீட்ட எஸ்.ரி.எப்.

கொழும்பு, ஜூன் 11

அறுகம்பை கடற்கரையில் நீராடச் சென்ற மூவர் காணாமல்போன நிலையில் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

மகியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த மூவரை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

40 வயதுடைய பெண் ஒருவரும், 11 வயதுடைய சிறுவனும், 17வயதுடைய இளைஞரும் கடலில் மூழ்கி இன்று காணாமல்போன நிலையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வெள்ளவத்தையில் ரயிலில் மோதுண்டு ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு, வெள்ளவத்தையில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோட்டையில் இருந்து தெஹிவளையை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும், சடலம் களுபோவில வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் வெள்ளவத்தைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# தேசிய வைத்தியசாலைகளில் இன்சுலின் மருந்து தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் இன்சுலின் மருந்திற்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சுலின் தட்டுப்பாட்டினால் மருத்துவர்கள் இன்சுலினை வெளியில் வாங்குமாறு தெரிவிப்பதால் நோயாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய வைத்தியசாலைகளின் நீரிழிவு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பலர் இவ்வாறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (அ)

# கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தென் பகுதிக்கு நேரடிப் பயணம்

*குறைபாடுகளை தீர்த்து வைக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை*

கொழும்பு, ஜூன் 11

**தென்பகுதி மீன்பிடித் துறைமுகங்களுக்கான கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததுடன் அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.**

தென் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களான கிரிந்த, அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில, கலமெட்டிய, ரெக்காவ, தங்காலை, மாவெல்ல, கந்தர, பேருவளை ஆகிய மீன்பிடித் துறைமுகங்களின் நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட குறித்த விஜயத்தின் போது பல்வேறு விடயங்கள் கடற்றொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக, மீன்பிடித் துறைமுகப் பகுதிகளில் மணல் அகழப்பட வேண்டுமெனவும் மணல் அரிப்பைத் தடுப்பதற்கான கல் அணைகள் அமைப்பது, மலசலகூட வசதிகள் உட்பட்ட அத்தியாவசிய பிரச்னைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற கோரிக்கைகள் கடற்றொழில் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

மேலும், சில துறைமுகங்களில் மணல் குவிந்து காணப்படுவதால், ஆழ்கடல் பலநாள் மீன்பிடிப் படகுகள் கரைக்கு வரமுடியாத நிலையில் அவை தரைதட்டுவதாகவும் இதன் காரணமாக அப்படகுகள் வேறு துறைமுகங்களில் நிறுத்தி வைப்பதாகவும், அதனால் அப்பகுதி மீனவர்களுடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் கடற்றொழிலாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

கடற்றொழிலாளர்களின் வேண்டுகோளை ஏற்ற அமைச்சர், கடற்றொழில் அமைச்சினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆழப்படுத்தும் பணிகளை விரைவு படுத்தி முடிக்குமாறும், சில துறைமுகங்களினுள் நீண்ட காலமாகப் பயன்பாடு இல்லாமல் இருக்கும் பழுதடைந்துள்ள படகுகளை அப்புறப்படுத்த வேண்டும் எனவுமம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.



கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

இதேவேளை, கிரிந்த மீன்பிடித்துறைமுகத்தில் படகுகளுக்கு எரிபொருள் நிரப்பும் உத்தியோகஸ்தர்கள் மற்றும் பணியாளர்கள் தாமதமாக கடமைக்கு வருவதால் எரிபொருளுக்காக நீண்ட நேரத்தை செலவிடுவதாகவும், இதனால் தொழிலுக்குச் செல்வதில் தாமதப்படுவதாகவும் அமைச்சரிடம் முறையிடப்பட்டது. இது தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர் சம்மந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களுடன் உரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இதன்போது சில நிகழ்வுகளிலும் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தங்காலை கடற்றொழில் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இலவச மண்ணெண்ணெய் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு, சம்பிரதாயபூர்வமாக 15 பேருக்கான மண்ணெண்ணெய் அனுமதி கூப்பன்களை வழங்கினார்.

மிரிஜ்ஜவில பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், பிரதேச கடற்றொழிலாளர்களினால் இறங்குதுறை அமைக்க வேண்டும் என அடையாளம் காட்டப்பட பகுதியையும் பார்வையிட்டார்.

அமைச்சரின் தென் பகுதிக்கான கண்காணிப்பு விஜயத்தின் போது அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க உட்பட கடற்றொழில் அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நாட்டில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கிறார்கள் 75 இலட்சம் மக்கள்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் 75 இலட்சம் மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

இது மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 33 வீதம் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பற்ற 23 நாடுகளில் இலங்கை 20ஆவது இடத்தில் உள்ளமை ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள 57 இலட்சம் குடும்பங்களில் 37 இலட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் ஏதாவது ஒரு உதவியை கோரியுள்ளன.

மேலும், மொத்தக் குடும்பங்களில் 65 வீதமான குடும்பங்கள் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதில் பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றன-என்றார். (அ)

# வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 11

ஜப்பானில் வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி, பண மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவர், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண், ஜப்பானில் வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக தெரிவித்து, 10 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு, வேலைவாய்ப்பை பெற்றுத்தரவில்லை என பாதிக்கப்பட்ட இருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதற்கமைய பணியக அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 65 வயதான பெண் கைது செய்யப்பட்டார். (அ)

# தந்தையும் மகனும் காட்டில் யானை தாக்கி பரிதாப பலி!

கொழும்பு, ஜூன் 11

காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த தந்தையும், மகனும் யானை தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டம், பிபிலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இருவரினதும் சடலங்கள் நேற் றுக் காலை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

49 வயதுடைய தந்தையும், 20 வயதுடைய மகனும் யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர்.

சடலங்களை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
11.06.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# தேவை வெறும் சொற்கள் அல்ல - செயலாகும்?

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு காலக்கெடுவை விதித் திருப்பதாகவும் - ஜுலை 10ஆம், திகதிக்கு முன்பதாக அரசியல் தீர்வை உறுதிப்படுத்தாவிட்டால், சர்வதேசத்திடம் செல்லவுள்ளதாகவும் குறிப் பிட்டிருக்கின்றார். சர்வதேசத்திடம் செல்லும் கதையைக் கூறி, ரணில் விக் கிரமசிங்கவை விரட்ட முடியுமா என்பதற்கப்பால், இன்னும் எவ்வளவு காலத்திற்கு இதனைக் கூறிக்கொண்டிருப்பது? செய்யும் வல்லமையுள் ளவர்கள் ஒருபோதும் இவ்வாறு, சொல்லிக் கொண்டிருக்கமாட்டார்கள் - அவர்கள் செயலில் தங்களின் ஆற்றலை நிரூபிப்பார்கள்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததற்குப் பின்னரான, கடந்த 14 வருடங்களில் சர்வதேசத்திடம் முறையிடும் கோரிக்கையுடன்தான், தமிழர் அரசியல் முன்னெடுக்கப்பட்டது. இன்றுவரை ஒரு மந்திரம் போன்று, அனைத்து கட்சிகளின் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், அதனை உச்சரித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அரசாங்கமோ, அதன் செயற்பாடுகளை எவ்வித அச்சமுமின்றி முன்னெடுத்துக் கொண்டே செல்கின்றது. கொழும்பின் ஆளும் வர்க்கம் பிராந்திய சர்வதேச அரசியல் ஒழுங்கை நன்கு புரிந்துகொண்டு, விடயங்களைக் கச்சிதமாக முன்னெடுத்து வருகின்றது. ஆனால் தமிழர் தரப்போ, சர்வதேச சமூகம் என்பதை, ஒரு சர்வலோக நிவாரணி போன்ற கற்பனையுடன் மக்களுக்கு போலியான நம்பிக்கையை ஊட்டிவருகின்றது.

தமிழர் தரப்பு சர்தேச அழுத்தங்களை ஏற்படுத்தியிருப்பதாக கூறிவந்த கடந்த 14 வருடங்களில், வடக்கு-கிழக்கின் மீதான அரச செயற்பாடுகள் எவ்விதத்திலும் நிறுத்தப்படவில்லை. பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சிநிரலை எந்த ஆட்சியாளரும் கைவிடவில்லை. அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஒரு சிறிதளவு கூட முன்நகரவில்லை. ஒற்றையாட்சி நிலைப் பாட்டை எவருமே கைவிடவில்லை. ஆகக் குறைந்தது அரசியலமைப்பிலுள்ள விடயங்களைக்கூட, அமுல்படுத்த முயற்சிக்கவில்லை.

இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் மட்டுமே வலியுறுத்தி வருகின்ற நிலையில், அமெரிக்க மற்றும் மேற்குலக தரப்புகளோ, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வாய் திறப்பதேயில்லை. மேற்குலகமோ, அரசியல் மறுசீரமைப்பு, நல்லாட்சி என்னும் சொற்களை மட்டுமே மீண்டும், மீண்டும் கூறிவருகின்றது. மனித உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் கரிசனையை காண்பித்தபோதிலும் கூட, இதுவரையில் அழுத்தங்களுக்கு அஞ்சி, அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. உண்மையில் மேற்குலக அழுத்தங்களை அரசாங்கம் பாரதூரமான ஒன்றாக நோக்க வில்லை. பிராந்திய மற்றும் சீனாவுடனான இராஜதந்திர உறவுகளை கொண்டு, சர்வதேச அழுத்தங்களை சமநிலைப்படுத்த முடியுமென்று அரசாங்கம் நம்புகின்றது. அந்த நம்பிக்கை இதுவரையில் அராசாங்கத்தை கைவிடவில்லை.

இதனால் அவர்கள் தொடர்ந்தும் தங்களின் இராஜதந்திர வழிமுறையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையுடனேயே செயற்பட்டு வருகின்றனர். அரசாங்கத்தின் இராஜதந்திர நகர்வுகளுக்கு சமதையான இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க தமிழர் தரப்புக்களால் இயலவில்லை. அது இலகுவில் இயலக்கூடிய காரியமும் அல்ல. ஏனெனில் - ஒரு அரசிற்கு இருக்கின்ற இராஜதந்திர வாய்ப்புக்கள், அரசல்லாத சமூகமொன்றிற்கு ஒருபோதும் சாத்தியப்படாது.

ஆனால் யூத சமூகம் வீழ்ச்சியை சந்தித்தபோது, தனது ஆற்றல் முழுவற்றையும் திரட்டி மேலேழுந்தது. தனக்கான நாடு ஒன்றை உருவாக்கியது. அவ்வாறான ஆளுமையை நிரூபிக்கக்கூடிய சமூகமாக இதுவரையில் தமிழ் சமூகம் தன்னை நிரூபிக்கவில்லை. இந்த நிலையில் வெறும் அரசியல் சுலோகங்களுக்கு அப்பால், எதனையும் தமிழர் அரசியல் பரப்பில் காணமுடியவில்லை.

# பாலேந்திரா நேர் காணல்கள் நூல் வெளியீடு யாழ்.நகரில்




*யாழ்ப்பானம், ஜூன் 11*

*ஈழத்து நாடகத் துறையில் ஐம்பது ஆண்டு களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வரும் ஆளுமை பாலேந்திராவின் நேர் காணல்கள் தொகுப்பு நூல் வெளியீடும் அறிமுகமும் எதிர் வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணியில் இருந்து 5.30 மணி வரை யாழ். திரு மறைக் கலா மன்ற கலைத் தூது கலையகத்தில் இடம் பெறும்.*

*இந்த நிகழ்வுக்காக லண்டனில் இருந்து பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோர் யாழ். நகர் வந்து சிறப்பு நிகழ்வாக “அரங்க நினைவ லைகள்”நிகழ்வை வழங்கவுள்ளனர்.*

*இத்துடன் அண்மையில் கொழும்பு நகரிலும் கனடாவிலும் வெளியிடப்பட்ட “பாலேந்தி ராவின் அரங்கக் கட்டுரைகள்” நூலும் அறிமுகப் படுத்தப்படும்.*

*இந்த நிகழ்வில் யாழ்.நகரில் உள்ள கலை இலக்கிய ஆளுமைகள், ஆர்வலர்கள் நூல் இந்த நூல்களை அறிமுகப் படுத்தி உரையாற்றுவர்.*

*“பாலேந்திரா நேர் காணல்கள்” இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் எழுத்து ஊடகங்களுக்காக எடுக்கப் பட்ட நேர்காணல் கள் இடம் பெற்றுள்ளன.*

*1979 இல் இருந்து 2015 வரையில் பாலேந் திரா மேற்கொண்ட அரங்கப் பயணத்தில் அவர் எதிர் கொண்ட சவால்களையும் சாத னைகளையும் அடக்கிய ஈழத்து நாடக வர லாற்றில் ஒரு முக்கியமான ஆவணத் தொகுப்பு இந்த நூல்.*

*ஈழத்தில் நாடகத் துறையில் பயணிக்கும் இளையவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த இரு நூல்கள் அமைந்துள்ளன. (அ)*

# நாடு மீண்டெழுவதற்கு கால அவகாசம் தேவை

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

*கொழும்பு, ஜூன் 11*

*இலங்கை மீள்வதற்கு கால அவகாசம் தேவை என்றும், முறையான நிதி முகாமைத் துவம் சார்ந்து அரசாங்கத்தை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்கத்திற்குத் தேவையான ஆலோ சனைகளை வழங்கவேண்டும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதியிடம் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.*



*ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட குழுவி னர் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து கலந்துரையாடினர்.*

*இலங்கை தற்போது முகம்கொடுத்து வரும் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டதோடு, இலங்கையைக் கட்டியெழுப்பு வதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்கு மாறு எதிர்க்கட்சித் தலைவர், தூதுக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.*

*வீழ்ச்சி கண்டுள்ள துறைகள் குறித்து தனித் தனியாக விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலை வர், இந்நிலையில் இருந்து இலங்கை மீள்வ தற்கு கால அவகாசம் தேவை என்றும், முறை யான நிதி முகாமைத்துவம் சார்ந்து அரசாங் கத்தை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்கத்திற் குத் தேவையான ஆலோசனைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத் தினார்.*

*ஆசிய அபிவிருத்தி வங்கி பல்வேறு துறை களை இலக்காகக் கொண்டு இலங்கைக்கு ஒத்துழைப்பை நல்க எதிர்பார்பதாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழு எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தது.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -81

# துயரப் பகிர்வு

**கணபதி சர்வானந்தா**

பாடசாலை இறுதி நாளன்று அதைக் “கொண்டாடுவதற்கு” சில மாணவச் செல்வங்கள் செய்த அருஞ்செயல்கள் தான் இவை. - எனச் சொல்லி “இதயம் வலிக்கிறது...” என்ற தலைப்பிட்ட முகநூல் பதிவொன்றை கண்டேன். அதனை முகநூல் நண்பர் பிரவீணன் விழி மைந்தன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

அவர் தனது பதிவுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இரண்டு புகைப்படங்களை அதில் இணைத்திருந்தார். அதில் ஒன்று, மாணவர்கள் மாறி மாறிப் போனா மையினால் தமது சீருடைகளை நனைத்திருந்தனர். அடுத்த படம் தான் துயர் மிக்கதாகக் காணப்பட்டது. அக் காட்சி என்னை 1983 இனக்கலவரத்தின் காட்சிகளை ஞாபகப்படுத்தியது. கலவரக் காரர்கள் தமிழர் வீடுகளில் புகுந்து இப்படித்தான் பொருட்களைச் சேதப்படுத்தியிருந்தனர்.

பாடசாலை வகுப்பினுள் காணப்பட்ட காற்றாடி சிறகுகள் மடிந்து வளைந்து காணப்பட்டன. அதிலே இரண்டு மூன்று கதிரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மிகவும் அருவருக்கத்தக்க காட்சி அது. அதுவும் பாடசாலை மாணவர்களால்... ஏற்க முடியவில்லை. இதற்கு அவர்களைக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். அந்த மாணவர்களின் பெற்றோரிடம் தான் என்ன பதில் உண்டு?

வாழ்வில் மகிழ்வோடு இருக்கக் கொண்டாட்டங்கள் தேவை. அவை வாழ்வை மேம்படுத்துவதாக இருக்க வேண்டுமேயொழிய... சமூகத்தை வளப்படுத்துவதாக இருக்க வேண்டுமேயொழிய, இப்படிப் பலவீப்படுத்துவதாக இருக்கக் கூடாது.

எமது அயல் நாடு ஒரு தமிழ்நாடு என்று பெருமைப் பட்டோம். ஆனால் அங்கிருந்து வந்த சினிமாக்களும், தொலைக்காட்சி அலைவரிசைகளும் எமது சமூகத்தைப் பல வழிகளில் சீரழித்திருக்கிறது. பொதுவாக மாணவர்கள் மத்தியில் காணப்படும் இது போன்ற ஒழுக்கக் கேடுகளுக்கும் அவை தான் காரணம் என்று எண்ண! இனி பிரவீணன் விழி மைந்தனின் பதிவைப் பார்ப்போம்.

நாங்கள் படித்தபோதும் குழப்படிகார மாணவர்கள் இருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் நாங்களும் சில குழப்படிகள் செய்தோம். நாங்கள் செய்த குழப்படிகள் பாடசாலை என்ற நிறுவனத்தின் மீதும் பாடசாலை வாழ்க்கையின் மீதும் இருந்த அதீத பிடிப்பின் வெளிப்பாடுகள். ஆகவே, அந்த நிறுவனத்தை அவமதிப்பது பற்றி எந்தக் குழப்படிகார மாணவனும் கனவில் கூட நினைத்ததில்லை.

கடும்போரின் மத்தியில் கூட பாடசாலை வாழ்வு என்பது மிக மகிழ்வான அனுபவமாக இருந்தது.... கல்லூரியில் படித்த ஏழு ஆண்டுகளில் .... கல்லூரியில் படிக்காதவன் நான். அதாவது இடம்பெயர்ந்திருந்த நிலையில் தற்காலிக வளாகத்திலேயே அந்த ஏழு ஆண்டுகளும் கழிந்தன. ஒருநாள் கூட தெல்லிப்பழை வளாகத்தில் கற்றதில்லை.

ஆனால், சொந்தமற்ற அந்த வளாகமோ எவ்வளவோ நேசமானதாக இருந்தது. விளையாட்டுப் போட்டிகளின் போதும், பரிசளிப்பு விழாக்களின் போதும், உயர்தர மாணவர் ஒன்றுகூடல்களின் போதும் இரவிரவாக விழித்திருந்து எமது கல்விக் கோயிலை அலங்கரித்திருக்கிறோம். அங்கேயே படுத்துத் தூங்கி, அதிகாலையில் எழுந்து வீட்டுக்குச் சென்று உடை மாற்றிக்கொண்டு மீண்டும் நிகழ்வுக்கு வந்திருக்கிறோம். ஒரு மாணவன் கூட பாடசாலையை அசிங்கம் செய்ததில்லை. செய்திருந்தால் மற்ற மாணவர்களே அவனைக் கைநீட்டி அடித்திருப்பார்கள்.

நல்ல கட்டட வசதிகள், மின்விசிறிகள், தளபாட வசதிகள் உள்ள பாடசாலை வாழ்வு நாம் காணாதது. கொட்டில் வகுப்புகளும் ஓட்டடைத் தூசும் உடைந்த கதிரைகளும் தான் நாம் கண்டவை.

காலை அணிந்து கொண்டு வருகிற வெள்ளைச் சீருடை, மாலை வீட்டுக்குப் போகும் போது புழுதி நிறமாக இருக்கும். ஏனென்றால் கொட்டில்களின் தரையில் தளம் கிடையாது. வெறும் புழுதி மண்.

படிக்கும் காலத்திலேயே பௌதீக வசதிகளை அதிகரிப்பதற்காக விழாக்கள் நடாத்தியும், லொத்தர் சீட்டு விற்றும் பணம் சேர்த்துப் பாடசாலைக்குக் கொடுத்தவர்கள். இதனாலெல்லாம் படிப்புப் பாழாகவில்லை. மாறாக, கல்வித் தேவி இரங்கி அருள் செய்தாள். என்னைப்பொறுத்தவரை, மின்சாரமற்ற விளக்கற்ற விசிறியற்ற கீழே மண் நிலமும் மேலே கிடுகுக் கூரையும் உள்ள ... கல்லூரி தற்காலிக வகுப்பறைக்கும், பூரண புலமைப்பரிசிலுடனான அடிலெய்ட் பல்கலைக்கழக நுழைவுக்கும் வெறும் ஆறு மாதம் தான் வித்தியாசம்.

இப்போது கூட, பாடசாலைக்குச் செல்லும்போது ஒரு கட்டிடத்தில் மின்விசிறி இல்லாமல் இருப்பது அல்லது விளக்கு எரியாமல் இருப்பது கண்டால் பணம் சேர்த்து அதைத் திருத்திக் கொடுப்போம். இன்றைய சந்ததி வசதியோடு படிக்க வேண்டும் என்பதற்காக. எந்தப் பாடசாலையில் நீங்கள் இதையெல்லாம் செய்து வைத்திருக்கிறீர்களோ அதன் பழைய மாணவர்களும் இதேமாதிரி அக்கறையோடுதான் உங்களுக்கு இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருப்பார்கள்.

பாடசாலை வாழ்வில் எப்படிப்பட்ட கோபம் இருந்தால் நீங்கள் அதை இறுதிநாளில் இப்படி வெளிப்படுத்தி இருக்க வேண்டும்? எவ்வளவு வன்மத்தோடு உங்கள் கல்விக் கோயிலை இப்படி அவமரியாதை செய்திருக்க வேண்டும்?

தெற்கிலுள்ள உங்கள் சகோதரர்கள் கற்ற பாடசாலையை விழுந்து வணங்குகிறார்கள். நாங்கள் வீழ்ந்து வணங்கவில்லை. செயற்பாட்டால் பாடசாலையை அர்ச்சித்தோம்.

இப்படிச் செய்யாதே என்று உங்களைத் தடுத்தது நிறுத்துவதற்கு நேரான ஆண்மகன் ஒருவன் உங்கள் மத்தியில் இருக்கவில்லையா? அல்லது அவனை அடித்துப் போட்டு விட்டுத்தான் இந்த இழிவை அரங்கேற்றினீர்களா?

உங்களுக்கு வந்து குவியும் வெளிநாட்டுப் பணம் உங்களை உடலால் மட்டும் வளர்ந்த, மூளையால் வளராத மந்தைக் கூட்டமாக ஆக்கி வைத்திருக்கிறது.

தவறு செய்து விட்டீர்கள்.தருமம் கொன்று விட்டீர்கள்.(பதிவு முற்றிற்று)

இரு தினங்களுக்கு முன்னர் பேனா மையில் தோய்ந்த பல மாணவர்களைச் சீருடைகளோடு பல இடங்களில் கண்டேன். என்ன கொண்டாட்டம் அது? அதில் என்ன மகிழ்ச்சியைக் அவர்கள் காண்கிறார்கள்? ஒருவர் மற்றவரை அசிங்கப்படுத்திப் பார்ப்பதிலுள்ள மகிழ்ச்சியைத் தவிர... அதில் வேறு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. •

# இந்தவார ராசிபலன் 04.06.2023 - 10.06.2023

ஞாயிற்றுக்கிழமை

சோபகிருது வருடம் - வைகாசி 21

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 9.00 - 10.00 திதி : பௌர்ணமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திராஷ்டமம் உள்ளதால் பயணத்தில் கவனம் தேவை. நெருங்கிய வயதான உறவினர் மூலம் நன்மைகள் உண்டாகும். பழைய பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள். இதுவரை மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட தடைகள் விலகும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணவரவு சற்று தாமதமாகும். செலவும் வழக்கம் போல் இருக்கும். தொழிலில் சங்கடம் ஏற்பட்டாலும், முடிவில் நன்மை உண்டாகும். தற்போது யோக திசை நடப்பவர்களுக்கு பதவி உயர்வு, திருமண வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். வடக்கு திசையில் இருந்து நல்ல செய்தி ஒன்றை எதிர்பார்க்கலாம்.பெண்கள் குடும்பத்தில் புகழ் அடைவார்கள். பூமி சம்பந்தமான விஷயங்களை தற்போது ஒதுக்கி வைப்பது நலம் பயக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பூமி சம்பந்தமான கடன் தொல்லைகள் மனக்கவலை தரும். உங்களிடம் இருக்கும் தன்னம்பிக்கையும் தைரியமும், அதில் இருந்து விடுபட வழி கொடுக்கும். கடன் தொல்லையில் இருந்து விடுபட நண்பர்கள் உதவுவார்கள். கணினி தொடர்பான வேலை பார்ப்பவர்களுக்கு, பதவி உயர்வு தேடி வரும். அந்த வாய்ப்பை நழுவ விட வேண்டாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எதையும் நிதானித்து செய்வதால், நன்மை அடைய முடியும். நல்ல நோக்கத்துடன் எடுக்கும் முடிவுகள் கூட, மற்றவர்களால் விமர்சிக்கப்படலாம். எழுத்துத் துறையில் இருப்போருக்கு புதிய வாய்ப்பு கிடைக்கும். அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு முன்னேற முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் உங்களது இளைய சகோதர, சகோதரிகளால் கவலை உண்டாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நினைத்த காரியத்தை நடத்தி முடிக்க, நெருங்கிய நண்பர் ஒருவர் கைகொடுப்பார். புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரலாம். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். சுப விரயம் அதிகரிக்கும் நேரம் இது. திருமணம் ஆகாத பெண்களுக்கு விவாகம் கூடி வரும். எந்தவித பிரச்னைகளையும் சமாளிக்கும் திறமை உங்களிடம் உண்டு.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கொடுக்கல் - வாங்கலில் அவசர முடிவு எடுக்காமல் இருப்பது நல்லது. புதிய தொழில் செய்யும் எண்ணம் சிலருக்கு உண்டாகலாம். வயதானவர்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. பயணங்களால் ஓரளவு ஆதாயம் உண்டு. சிலர் அடமானம் வைத்த நகையை மீட்க போராடுவர். நிலம், பூமி சம்பந்தமான விஷயம் ஒரு தீர்வுக்கு வரும். தம்பதிகளுக்குள் சிறிது மனக்கசப்பு உண்டாகலாம்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். உறவினரிடையே இருந்த பகை, உங்கள் முயற்சியால் தீரும். நீண்ட காலமாக துன்பத்தை அனுபவித்தவர்களுக்கு, அதில் இருந்து விடுபடும் வேளை வந்துவிட்டது. பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற துறைகளில் பணிபுரிவோருக்கு ஓரளவு ஏற்றம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். கணவன் - மனைவி இடையே இருந்த பிரச்னைகள் நீங்கி, நெருக்கம் அதிகரிக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

செய்யும் காரியங்களில் சாதகமான சூழ்நிலை உண்டாகும். மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படும்போது அதை ஒதுக்கி விடுங்கள். தொல்லைகளை விலக்கினால் விரயங்கள் சுபமாக மாறும். ஒரு சிலருக்கு தாங்கள் குடியிருக்கும் வீட்டை இடித்து புதுப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். சிலருக்கு மகான்களின் ஆசியால் மன அமைதி கிடைக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எந்த காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், அதற்கு அதிக முயற்சி தேவைப்படும். யாருக்காவது வாக்குறுதி கொடுப்பது அல்லது ஜாமீன் கையெழுத்து போடுவது போன்றவற்றை தவிர்த்து விடுங்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், பொருளாதார விஷயத்தில் ஓரளவு திருப்தி காண்பர். பங்குச்சந்தையில் ஈடுபட்டு தளர்ச்சி கண்டோர், மீண்டும் முதலீடு செய்ய அவசரம் காட்டாதீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சற்று பரபரப்பாகவும், சுறுசுறுப்பாகவும் செயலாற்றுவீர்கள். நண்பர்கள் வலிய வந்து உதவி செய்வார்கள். பிரிந்த கணவன்- மனைவி மீண்டும் ஒன்றுசேர வாய்ப்புண்டு. உயர் பதவியில் இருப்பவர்கள் கட்டளைகள் இடுவதன் மூலமும், திட்டமிட்டு செயல்படுவதாலும் உங்கள் செயல்திறன் அதிகரிக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர். நட்பு வட்டாரங்களால் ஓரளவு ஆதாயம் உண்டு. ஒருசிலர் வார்த்தை ஜாலங்களால் உங்களிடம் திறமையாக பேசுவார்கள். அதை நம்பி அவர்களுக்கு எந்த வாக்குறுதியும் கொடுத்து விடாதீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, நினைத்த காரியம் நிறைவேறுவதில் சிரமம் ஏற்படும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்த்த விஷயங்களில் சற்று தளர்ச்சி தோன்றும். நினைத்த காரியத்தை சாதிக்க, உறவினர்கள் கைகொடுத்து உதவுவர். சுபகாரியம் சம்பந்தமாக எடுத்த முயற்சி நல்ல திருப்பத்தைத் தரும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு பாராட்டும், புகழும் கிடைக்கும். குடும்பத்தில் மூத்தவர்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். எதிர்பாராத வகையில் மகான்களின் தரிசனம் உண்டாகும். பழைய கடன்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். காவல் துறையில் உள்ளவர்களுக்கு, பெயர், புகழ், கவுரவம் தேடி வரும்.

# ரயில் விபத்து: நவீனத்திலும் விஞ்சும் பரிதாபம்!

## ராகுல் காந்தி பொது வேட்பாளராவாரா?

ஜூன் 3ஆம் திகதி அன்று ஒரு சுபமுகூர்த்தத்தில் பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் ரயில் கட்டமைப்பை நவீனமயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, மேற்குக் கடற்கரையோரம், கோவா-மும்பை இடையிலான அதிவேக ரயில் சேவையைத் தொடங்கிவைக்க இருந்தார். இந் நிகழ்ச்சி, அதி வேக ரயில்களை அறிமுகப்படுத்தும் திட்டங்களை ஒவ்வொன்றாக நாட்டுக்கு அர்ப்பணித்துவரும் மோடியின் மகுடத்தில் மற்றுமொரு வைரமாக ஜொலித்திருக்கும். 1.21 லட்சம் கிலோமீற்றர் மொத்த ரயில் பாதை நீளமும் 67,000 கிலோமீற்றர் வழித்தடமும்கொண்ட இந்தியாவின் ரயில் கட்டமைப்பு உலகிலேயே மிகப் பெரும் அமைப்பாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, நேர் எதிர்த்திசையில், நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரிசா மாநிலத்தில் கோரமான ரயில் விபத்தொன்றில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, சம்பவ இடத்தைப் பார்வையிடுவதில் தான் அவர் அந்த நாளைக் கழிக்கவேண்டியிருந்தது. 275 முதல் 288 பேர் வரை உயிரிழந்தும் 1000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும் உள்ளார்கள்.

ஜூன் 2ஆம் திகதி மாலை, ஹௌராவிலிருந்து (ஹூக்ளி நதிப் பாலத்தின் ஒரு தரப்பில் கொல்கத்தாவும் மறு தரப்பில் ஹௌராவும் உள்ளன) சென்னை வந்துகொண்டிருந்த கொரமாண்டல் எக்ஸ்பிரஸ், ஒரிசாவின் பாலாசோர் மாவட்டத்தில் உள்ள பஹானாகா பஜார் ரயில் நிலையத்திற்கு அருகில், தவறான தண்டவாளத்தில் சென்று, சரக்கு ரயில் ஒன்றின்மீது மோதியது. சற்று நேரத்திற்கெல்லாம், அந்த வழித்தடத்தில் எதிர்த் திசையில் வந்த பெங்களூரு-ஹௌரா சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் இந்த இரு ரயில்களுடன் மோதியது.

எனது 'ஈழநாடு' வாசகர்கள் அனேகமாக இந்த விபத்து குறித்த செய்திகள், படங்கள் மற்றும் வீடியோக்களைப் பார்த்திருக்கலாம். இந்தியாவில் நடந்துள்ள ரயில் விபத்துகளில் மிகவும் மோசமானவற்றுள் இந்த விபத்தும் ஒன்று. இந்த விபத்து நடந்த விதத்தையும், சிதைந்த ரயில் பெட்டிகளையும், இருப்புப் பாதைகளையும் பார்த்தால், என்னதான் போக்குவரத்துத் துறை நவீனமயமாகி வருவதாக நாம் பெருமை பேசிக்கொண்டாலும், இன்னும் நாம் இதுபோன்ற நிகழ்வுகளுக்குப் பலியாகும் பரிதாபகரமான நிலையில்தான் இருக்கிறோமா என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகிறது.

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்திய ரயில் கட்டமைப்பில் மேலும் பல புதிய அதிவேக ரயில்களை அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு முன்னர், பாதுகாப்பு அம்சத்தைச் சீர்செய்ய அதிக தூரம் பயணிக்கவேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

நவீனமயமாக்கலில் அடுத்தடுத்த அரசுகள் அதிக அக்கறை காட்டியிருக்கின்றன. ஆனால், அவற்றின் கவனம் பெரும்பாலும் ரயில் இணைப்புகளையும் மணிக்கு 130 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் அதிவேக ரயில்களை அறிமுகப்படுத்துவதிலும்தான் இருந்துள்ளது. வேகத்தைவிட ரயில் பயணங்களின் பாதுகாப்புத் தன்மைதான் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஜெர்மனி சென்றிருந்தபோது, ஒரு ரயில் பயணம் மேற்கொண்டது எனக்கு நினைவில் இருக்கிறது. பிராங்போர்டிலிருந்து ஒரு சிறிய நகரத்துக்குச் சென்றுகொண்டிருந்தேன். அந்த நகரத்தின் பெயர் நினைவிலில்லை,

ஆனால், உலகின் பெரிய மருந்து உற்பத்தி நிறுவனங்களின் தலை நகரமாக அது கருதப்படுகிறது. அது சுமார் நான்கு மணி நேர ரயில் பயணம். உலகின் மிகப் பெரிய, மிகப் பரபரப்பான ரயில் நிலையங்களில் ஒன்றான பிராங்போர்டிலிருந்து, குறிப்பிட்ட நேரத்தில் துல்லியமாகப் புறப்பட்டு, குறிப்பிட்ட வினாடி தவறாத துல்லியத்துடன் அந்தச் சிறிய நகரத்தை வந்தடைந்தது அந்த ரயில். அதைவிட, தெற்காசிய பத்திரிகையாளர்கள் குழுவான எங்களுடன் துணைவந்த ஜெர்மானியர் அந்த ரயிலில் செய்ததுதான் எனக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது.

கண்ணாடி ஜன்னல்களின் வழியே மரங்களும் புல்வெளிகளும் மிக வேகமாக நகர்வதைக் கண்டுதான் எங்கள் ரயிலின் வேகம் எங்களுக்குப் புரிந்தது. அத்தனை வேகத்திலும் ரயிலின் ஓட்டத்தில் ஓர் அதிர்வோ குலுக்கலோ இல்லாமல், மிகச் சீராக ஓடிக்கொண்டிருந்தது. இதை மேலும் காட்ட, அந்த ஜெர்மானியர் இரு பக்க இருக்கைகளுக்கு இடையிலிருந்த மேஜையில் ஒரு கிளாஸில் தண்ணீரை வைத்தார். அந்தத் தண்ணீர் கொஞ்சமும் அசையாமல் இருந்தது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே ஜெர்மானியரின் உயர்தர தொழில்நுட்பத்தின் சான்று அது. நாங்கள் அந்த நாட்டுக்குச் செல்வதற்கு வெகுகாலத்திற்கு முன்பே இது செயல்பாட்டில் இருந்திருக்கக்கூடும்.



ஜப்பானிய ரயில் அமைப்பு இன்னும் மேம்பட்டது என்று நான் படித்திருக்கிறேன். 50 ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து ஜப்பானின் புல்லட் ரயில்கள், ஆயிரம் கோடி பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளன. ஆனால், ஒரு விபத்தோ தடம் புரளலோ ஏற்பட்டதில்லை. மைய, தானியங்கி போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்குத் துணைசெய்யும் வகையில், ரயில் இருப்புப்பாதை அருகில் உள்ள சிக்னல்கள் அகற்றப்பட்டு, தானியங்கிக் கட்டுப்பாட்டு முறையில் செயல்படுகின்றன. சாதாரணமாக மணிக்கு 350 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய ஜப்பானிய ரயில்களில் சென்ஸார்கள் பொருத்தப்பட்டிருக்கும். அவை, இருப்புப்பாதையில் எதிர்வரக்கூடிய தடைகளையும் மோதல்களையும் கண்டறிந்து தானாகவே 'பிரேக்' பிடித்து, அதிவேக ரயிலையும் 300 மீட்டருக்குள் நிறுத்தக்கூடியவை. நில அதிர்வுகளுக்குப் பெயர்போன அந்த நாட்டில், சுவர்களுடன் மோதாமல் இருக்கவும், நில அதிர்வால் கவிழாமல் தடுக்கவும் ரயில்களிலும் இருப்புப் பாதைகளிலும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும்.


இன்னொரு ரயில் பயணமும் நினைவுக்கு வருகிறது. ஈழப்போர் முடிவுக்கு வந்த சில ஆண்டுகளில் கொழும்பு - யாழ்ப்பாணம் செல்லும் 'யாழ்தேவி'யில் நான் சென்றிருந்தேன். ஒரு காலத்தில் புலிகளின் கோட்டையாக இருந்த பகுதிகளுக்குப் பல சிங்களக் குடும்பங்கள் அதில் சுற்றுலா சென்றனர். ரயில் வேகம் பிடிக்க, உட்கார இடம் இல்லாத பயணிகள் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு இங்கும் அங்கும் ஆடிக்கொண்டே வந்தனர். புகைப்படங்கள் எடுக்க, கதவருகில் செல்ல முயன்ற நான்,

மீண்டும் இருக்கையை நோக்கித் தாவினேன். காரணம், ரயில் ஆட்டத்தில் வெளியில் வீசப்பட்டுவிடுவேனோ என்று பயந்துபோனேன். தங்களின் இலங்கைச் சகோதரர்களுக்கு இப்படி ஓர் அருமையான பரிசைத் தந்த இந்திய ரயில்வே பொறியாளர்களின் தொழில்நுட்பத் திறனை நான் வியந்தேன். இன்று, 'யாழ்தேவி' சீராக, சாந்தமான வேகத்துடன் செல்கிறாள் என்று நம்புகிறேன்!

## சம்பந்தர் கர்ஜித்தாலும் பிரித்தாளும் உத்திக்கு உதவுகிறார்?

இந்திய ரயில்வே, இருப்புப் பாதைகளில் தடைகளைக் கண்டறிந்தால், தானியங்கி பிரேக் இயக்கும் தொழில்நுட்பம் ஒன்று உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டு, மோதலைத்தடுக்கும் 'கவச்' திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியிருப்பதாகச் சில மாதங்களுக்குமுன் ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கூறியிருந்தார். எதிர்வரும் ரயில் உட்பட, அந்த இருப்புப்பாதையில் இருக்கும் தடைகளைக் கண்டறிந்து, 300 மீற்றர் தொலைவில் ரயிலை நிறுத்தும் தொழில்நுட்பம் இது.

ஆனால், இந்த 'கவச்' தொழில்நுட்பம் இந்திய ரயில்வே கட்டமைப்பில் 2 வித இருப்புப் பாதை நீளத்தில் மட்டுமே செயல்படுகிறது. அதிவேக விரைவு ரயில்களை அறிமுகப்படுத்துவதில் நிதியையும் உழைப்பையும் செலவிடும் முன்னர், இந்திய அரசு, இதுபோன்ற பாதுகாப்பு அமைப்புகளை, அதிகபட்ச ரயில் பாதைகளிலும், தொலைதூர இடங்களிலும் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் குறிப்பிட இதுவே காரணம். வேகமாக முன்னேறும் சமுதாயத்தில், ரயில்களின் வேகத்தை அதிகரிப்பது அவசியம்தான். ஆனால், ஒரு வளர்ந்துவரும் நாட்டில், வளங்கள் அளவாக இருக்கும்



சென்னை மடல்
-பகவான் சிங்-

நிலையில், முன்னுரிமைகளைச் சரியாகத் திட்டமிடுவது ஆட்சியாளர்களின் கடமை.

ரயில்வே துறை சார்ந்த விசாரணை மட்டுமன்றி, நாட்டின் முக்கிய புலனாய்வு அமைப்பான சிபிஐ, இந்த பாலாசோர் விபத்து குறித்து விசாரிக்க பிரதமர் மோடி உத்தரவிட்டார்.

அரசியல் ரீதியாக, அண்மை கர்நாடக தேர்தல் தோல்வியை அடுத்து, இந்த ரயில் விபத்து மோடிக்கு மிகப்பெரிய சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்கட்சிகள் எதிரில் பின்னடைவைச் சந்தித்துள்ள மோடியும் அவரது கட்சி, ஆட்சித் தளபதிகளும் கடும் உழைப்பை மேற்கொள்ளவேண்டிய தருணம் இது. எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்காகச் சில தலைவர்கள் எடுக்கும் முயற்சிகள் இன்னும் வெற்றிகரமாக அமையவில்லை என்பது மோடி அணிக்கு ஒரு நல்வாய்ப்பாகவே உள்ளது.

என்னுடைய அண்மை 'ஈழநாடு' கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்ததுபோல், கர்நாடக தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைவர் ராகுல் காந்திக்கும் மிகப்பெரிய ஊக்கத்தைக் கொடுத்துள்ளன. ஆனால், 2024 ஏப்ரல்-மே மாதங்களில் வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் மோடியைத் தோற்கடிக்க இது மட்டும் போதாது. அதற்கு பாஜக எதிர்ப்புக் கட்சிகளில் ஒரு கணிசமானவற்றையாவது, தனது குடைக்குள் கொண்டுவரவேண்டியது அவசியம். அதாவது, பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை அந்தக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இப்போதுள்ள சூழலில் இது எட்டாக்கனியாகவே எனக்குத் தோன்றுகிறது.

ஆனால், ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கர்நாடகா மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தில் பெற்ற வெற்றிகளுக்கு பிரியங்கா காந்தியின் பிரச்சாரமே காரணம் என்று போற்றிவரும் சில மூத்த காங்கிரஸ் தலைவர்கள், அவரை நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் குழுவின் தலைவராக நியமிக்க வேண்டும் என்று கோரிவருகின்றனர். அவரது சகோதரர் ராகுல் காந்தி தற்சமயம், வெளிநாடுகளுக்குச் சென்று, மோடியை அவமானப்படுத்தி உரையாற்றி வருகிறார். இதனால், அவர் நாடு திரும்பியதும் அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாஜகவும் அதன் ஆதரவாளர்களும் கோரிவருகின்றனர். அது போல, தேவையற்ற அவசரம் காட்டி, ராகுலை ஒரு பெரிய 'ஹீரோ'வாக்க இவர்கள் துணியமாட்டார்கள் என்று நம்புகிறேன். ஏற்கெனவே, மார்ச் மாதத்தில் ஓர் அவதூறு வழக்கில் ராகுலின் எம். பி. தகுதியிழப்பு என்ற ஒரு முட்டாள்தனத்தைச் செய்துவிட்டனர்.

உங்கள் ஞாயிறு காலை உணவு ஆறும் முன்னர், வியாழனன்று ஜனாதிபதி செயலகத்தில் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த நமது மரியாதைக்குரிய தலைவர் இரா. சம்பந்தர் செய்த சிம்ம கர்ஜனம் குறித்த என் ஆழ்ந்த பெருமையை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். "தமிழர்கள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுக்கான உங்கள் வாக்குறுதிகளிலிருந்து நீங்கள் பின்வாங்கி, எங்களைத் தொடர்ந்து ஏமாற்ற அனுமதிக்க மாட்டோம்" என்று அவர் கர்ஜித்திருக்கிறார். இருப்பினும், ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளின் சிறிய குழு மட்டுமல்லாமல், தமிழ், இஸ்லாமிய முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒட்டுமொத்தமாகக் கலந்துகொண்டிருக்கலாமே என்பது நமது கேள்வி.

பல ஆண்டுகளுக்கு முன், சம்பந்தர் ஐயா தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர மிக அவசியமான ஒற்றுமைக்குத் தான் பாடுபடப்போவதாக அளித்த வாக்குறுதியை காப்பாற்றுவதற்கு மாறாக, பிரித்தாளும் உத்தியுடன் தமிழர்களை ஒடுக்கி வைக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவி வருகிறாரோ என்ற ஆதங்கமும் ஏற்படுகிறது. அதேநேரத்தில், மற்ற தமிழ்த் தலைவர்களும் தன்னல நோக்கங்களை விடுத்து, ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்குத்

தகுந்த ஒத்துழைப்பு தரவில்லை என்பதும் ஒரு கவலை. எல்லாவற்றையும் மீறி, மக்கள், என் நண்பர்கள், ஏன் இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் மௌனம் காக்கிறார்கள் என்பது எமது சோகம். அடுத்த ஞாயிறு நாம் சந்திக்கும்போது இந்தச் சாபம் குறித்துச் சிந்திப்போம்.

# மதநிந்தனைப் பேச்சுக்கள் தோற்றுவிக்கும் சர்ச்சைகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

**வெறுப்புப்பேச்சுக்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைககளை எடுப்பதில் அரசாங்கம் குறிப்பிட்ட சிலரை தெரிவுசெய்து இலக்குவைத்து பாரபட்சமாக செயற்படுவதாக அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களிடம் இருந்து விமர்சனங்கள்.**

இலங்கையில் அண்மைக்காலமாக மதநிந்தனைப் பேச்சுக்கள் தொடர்பில் அடிக்கடி சர்ச்சைகள் கிளம்புகின்றன.



முதலாவதாக, கடந்த டிசம்பரில் சமூக ஊடகச் செயற்பாட்டாளரான சேபால் அமரசிங்க என்பவர் யூரியூப் மூலமான தனது கிரமமான நிகழ்ச்சிகளில் ஒரு தடவையல்ல மூன்று தடவைகள் தலதா மாளிகையை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார். அதற்கு கிளம்பிய பாரிய எதிர்ப்பை அடுத்து அவர் கைது செய்ப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பௌத்தர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்திய செயலுக்காக அமரசிங்க மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கேட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.



இரண்டாவதாக, கிறிஸ்தவ மதப் போதகரான ஜெரோம் பெர்னாண்டோ மே மாதம் பௌத்த மதத்தை மாத்திரமல்ல இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களையும் இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு செய்த பிரசங்கம் ஒன்றின் வீடியோ பதிவு சமூக ஊடகங்களில் பெருமளவில் பரவியதையடுத்து சர்ச்சை மூண்டது. துரித விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்த போதிலும், பெர்னாண்டோவுக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னதாக அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.



முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டே தான் வெளிநாட்டுக்கு சென்றிருப்பதாகவும் சில தினங்களில் நாடு திரும்பவிருப்பதாகவும் சமூக ஊடகம் மூலமாக கூறிய அவர் இன்னமும் வெளிநாட்டிலேயே இருக்கிறார். தற்போது சிங்கப்பூரில் இருப்பதாகக் கூறப்படும் போதகர் தனது கருத்துக்கள் பௌத்த, இந்து, இஸ்லாமிய மதத்தவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்பதாக சமூக ஊடகம் மூலம் அறிவித்தார்.

நாட்டுக்கு வெளியே இருந்தவாறே அவர் தனது சட்டத்தரணி ஊடாக தன்னை பொலிசார் கைதுசெய்வதை தடுத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். அதை ஜூலை 28 நீதிமன்றம் விசாரணைக்கு எடுக்கவிருக்கிறது. அவரது மனைவியும் பிள்ளைகளும் கடந்தவாரம் நாடுதிரும்பியதாக செய்திகள் வெளியாகின.

மூன்றாவதாக, கடந்த ஏப்ரில் முதலாம் திகதி கொழும்பின் பிரபலமான பெண்கள் கல்லூரியொன்றின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 'ஏப்ரில் முட்டாள்தின சவால்" என்ற நிகழ்ச்சியில் நகைச்சுவை மேடைப் பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய என்ற இளம்பெண் புத்தர் பெருமானின் குழந்தைப் பராயத்தை கிண்டல்செய்யும் வகையில் தெரிவித்த கருத்துக்களின் வீடியோ பதிவும் சில வாரங்கள் கழித்து சமூக ஊடகங்களில் பரவியது.

அது தொடர்பில் சர்ச்சை தோன்றியதற்கு மத்தியில் அவர் வெளிநாடு செல்வதற்கு விமானநிலையம் சென்ற வேளை அங்கு வைத்து கைதுசெய்யப்பட்டார். முதலில் கடந்த 7ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கொழும்பு நீதிமன்றம் பிறகு அதை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நீடித்திருக்கிறது.

நான்காவதாக, சமூக ஊடகங்களில் பிரபலமானவர் என்றும் மிகவும் ஆவேசமாக தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுபவர் என்றும் அறியப்பட்ட ராஜாங்கன சித்தார்த்தன தேரர் இனங்கள், மதங்களுக்கிடையில் அமைதியின்மையை தூண்டிவிடக்கூடிய முறையிலும் குறிப்பிட்ட சிலரை அச்சுறுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டதாக அவருக்கு எதிராக இன்னொரு பிக்கு செய்த முறைப்பாட்டையடுத்து சில வாரங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டார். அவரின் விளக்கமறியலை கொழும்பு நீதிமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கடந்தவாரம் நீடித்தது.

### சமூக ஊடகங்களின் செயற்பாடுகள்

மதங்களை நிந்தனை செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு அவற்றைப் பின்பற்றும் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தியும் இனங்கள், மதங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடியதாகவும் கருத்துக்களை வெளியிட்ட மேற்படி நால்வரையும் சில மாதங்ளுக்கு முன்னர் நாட்டுமக்களுக்கு பெரிதாக தெரியாது. ஆனால் இப்போது முழு நாடும் மாத்திரமல்ல வெளியுலகமும் அறியும்.

இவர்களில் குறிப்பாக போதகர் பெர்னாண்டோவின் பிரசங்கத்தையும் நடாஷாவின் நகைச்சுவை பேச்சையும் முதலில் அந்த நிகழ்வுகளில் பங்கேற்ற குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மாத்திரமே கேட்டனர். பிறகு சமூக ஊடகங்களே அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை பரந்தளவில் மக்கள் அறியக் கூடியதாக செய்தன. இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்படுவதைப் போன்று மதங்களுக்கிடையில் வெறுப்புணர்வை தூண்டிவிடுவதை அவர்கள் உண்மையில் நோக்கமாகக் கொண்டிருந்தார்களா என்பது முக்கியமான கேள்வி.

அமைதியின்மையை தோற்றுவிக்கக் கூடியவையாக பெர்னாண்டோவினதும் நடாஷாவினதும் கருத்துக்கள் அமைந்திருந்தன என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதானால், அவற்றை ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலமாக பரந்தளவு மக்கள் மத்தியில் கொண்டுசென்றவர்களும் கூட ஒரு விதத்தில் குற்றம் செய்தவர்களாகிறார்கள். இருவருமே பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுவிட்ட போதிலும், அத்துடன் சர்ச்சை முடிவுக்கு வருவதாக இல்லை.

மக்களின் இன, மத உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய வகையிலும் ஒரு சமூகத்துக்கு எதிராக இன்னொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் வெறுப்பும் அவமதிப்பும் கொண்ட கருத்துக்கள் எமது நாட்டில் வெளியிடப்படுவது இது முதற்தடவை அல்ல. காலங்காலமாக இடம்பெற்று வந்திருக்கும் அத்தகைய சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அவை பல கலவரங்களையும் மூளவைத்தன. அவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருந்தவர்களை அடையாளப்படுத்தினால் அதுவும் கூட இன்றைய சூழ்நிலையில் மதவெறுப்பைத் தூண்டும் செயல் என்று குற்றஞ்சாட்டப்படவும் கூடும்.



வெறுப்புப்பேச்சுக்கு எதிராக இன்று பெரிதாக போர்க்குரல் எழுப்பப்படுகிறது. சமூகங்களுக்கிடையில் பகைமையை தூண்டிவிட்ட இனவாத அரசியலின் விளைவாக இலங்கை பல தசாப்தங்களாக சின்னாபின்னப்பட்டதை மறந்தவர்களாக ஏதோ வெறுப்புப்பேச்சு நாட்டுக்கு புதிதாக வந்த ஒரு தோற்றப்பாடு போன்று இன்று அரசியல்வாதிகள் பேசும் விசித்திரத்தைக் காண்கிறோம்.

### சதிக் கோட்பாட்டு புனைவுகள்



இலங்கை வரலாறு கண்டிராத பொருளாதார நெருக்கடியின் விளைவாக கடந்த வருடம் மூண்ட மக்கள் கிளர்ச்சியின்போது மாதக்கணக்காக பொதுவெளிக்கு வராமல் பதுங்கியிருந்த கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் தற்போது தோன்றியிருக்கும் சர்ச்சைகளை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி மீண்டும் நச்சுத்தனமான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு கடுமையாக முயற்சிக்கின்றன. சதிக்கோட்பாடுகள் புனைவதை ஒரு கலையாகவே வளர்த்திருக்கும் இந்த சக்திகள் கற்பனாவாத எதிரிகளிடம் இருந்து இனத்தையும் மதத்தையும் காப்பாற்றுவதற்கு வெளியில் வருகிறார்கள். கிறிஸ்தவ போதகர் மற்றும் நகைச்சுவை பேச்சாளர் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளின் பின்னணியிலும் மேற்குலக சதி இருப்தாக இந்த சக்திகள் கூறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இனக்கலவரம் மூளும் என்று எச்சரிக்கையை விடுப்பதை விடவும் நாட்டு மக்களில் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை தூண்டிவிடும் செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயன்றால் நாடு இதுகால வரையில் காணாத பயங்கரமான இனக்கலவரம் வெடிக்கும் என்று முன்னாள் அமைச்சர்கள் விமல் வீரவன்சவும் சரத் வீரசேகரவும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அடிக்கடி கூறுகிறார்கள். அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் ஜனாதிபதியும் அரசாங்கமும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதை காண்கிறோம்.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான பிரசாரங்கள் மூலமாக பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலைச் செய்து அதன் மூலமாக உச்சபட்ச அரசியல் ஆதாயத்தைப் பெற்ற முன்னாள் ஆட்சியாளர்கள் மீண்டும் தென்னிலங்கையில் ஆதரவைக் கட்டியெழுப்புவதற்கு இனமும் மதமும் ஆபத்துக்குள்ளாவதாக பீதியை சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பவேண்டிய தேவை இருக்கிறது. மத நிந்தனை செய்யும் வகையில் அமைந்த கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக கடும் ஆரவாரம் செய்யும் சக்திகள் அந்த தேவைக்கு வசதியான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கத்தொடங்கியிருக்கின்றன என்ற வலுவான சந்தேகமும் எழுகிறது.

இதனிடையே, வெறுப்புப் பேச்சுக்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைககளை எடுப்பதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக அரசியல் சமூக செயற்பாட்டளர்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிடமிருந்து விமர்சனங்கள் வருகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

### சந்திரிகாவின் கேள்வி

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரும் வேற பலரும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கு எதிராக பரப்பிய வெறுப்புணர்வு புத்தபெருமானை அவமதித்ததாக கைது செய்யப்பட்டிருக்கும் நடாஷாவின் பேச்சை விடவும் மோசமானவை என்று ருவிட்டர் தளத்தில் கடந்த வாரம் பதிவிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேள்வியெழுப்பினார்.

'இஸ்லாமிய மதத்தை நிந்தனை செய்து பள்ளிவாசல்களுக்கும் தேவாலயங்களுக்கும் தீவைத்த ஞானசாரவுக்கும் ஏனையோருக்கும் என்ன நடந்தது? நடாஷாவின் பேச்சை விடவும் நச்சுத்தனமானவை இவர்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக பரப்பிய வெறுப்புப்பேச்சுக்கள்.

'டாக்டர் ஷாபி சிகாப்தீன் மீது குற்றஞ்சுமத்தி அவரை அவதூறு செய்தவர்களுக்கு எதிராக இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. அவ்வாறு செய்வதே உண்மையான ஜனநாயக ஆட்சிமுறையாக இருக்கும்.

'உண்மையான பௌத்த கோட்பாடுகளை இலங்கை பின்பற்றியிருந்தால், இன்றைய நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கவேண்டி வந்திருக்காது. உண்மையில் பௌத்த மதத்துக்கு அதியுயர் மதிப்புக் கொடுக்கப்படவேண்டும். ஆனால் ஏனைய மதங்களுக்கும் சமமான மதிப்பை அளிக்கவேண்டும். விரும்புகின்ற மதத்தைப் பின்பற்றுவதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கும் புனித உரிமை இருக்கிறது. மற்றவர்களுடைய நம்பிக்கைகளை மதித்து நடக்கவேண்டும் என்பது பௌத்த கோட்பாடாகும்" என்று திருமதி குமாரதுங்க கூறியிருக்கிறார். இன்று இருக்கும் சிங்கள அரசியல் தலைவர்களில் அவராவது இவ்வாறு கருத்துவெளியிட்டிருக்கிறார் என்பது ஒருவித திருப்தியை தருகிறது.

அதேவேளை, இலங்கை தேசிய

(18ஆம் பக்கம் பார்க்க)

# சம்பந்தனுக்கு வந்தது பொல்லாத கோபம்! ரணிலுக்கு எச்சரிக்கை; குககதாசனுக்கு கல்தா!

பனங்காட்டான்



நாய்க்கு எங்கு அடித்தாலும் அது காலைத் தூக்கிக் கொண்டுதான் ஊளையிடும். அது போன்று இலங்கையில் சரத் வீரசேகர என்ற அரசியல்வாதி இப்போது காணப்படுகிறார்.

பொலிசாரின் அத்துமீறல், படையினரின் காணி அபகரிப்பு, தமிழர் பிரதேசங்களில் சட்டத்தை மீறி புதிய விகாரைகளை நிர்மாணித்தல் என்பவற்றைக் கண்டித்து எவர் கருத்துக் கூறினாலும் அதை இனவாதமாக்கி ஊதிப் பெருப்பிப்பது இவர் வேலை.

கடற்படைத் தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற இவர் கோதபாயவின் வியத்மக வட்டத்தினூடாக அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர். எஜமான் காணாமல் போனபின்னரும் அந்த எஜமான் விசுவாசத்தில் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்க விரும்புபவர் இவர். கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்ட கே.எம்.பி.ராஜரட்ண, சிறில் மத்தியு, காமினி திசநாயக்க போன்ற இனவாதிகளின் ஒட்டுமொத்த வடிவமாக தம்மைக் காட்டிக் கொள்ள முனையும் இவரது நிகழ்கால எறிகல்லின் இலக்கு கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ.

கடந்த மாத முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு கனடிய பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் இனஅழிப்பு என்று குறிப்பிட்ட வார்த்தைப் பிரயோகத்தை இவரால் ஜீரணிக்க முடியவில்லை. கனடிய பிரதமரின் அரசியல் உள்நோக்கம் கொண்ட பொய்யை எதிர்கொள்ள உடனடியாக இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென உரத்துக் குரல் கொடுத்துள்ளார் சரத் வீரசேகர. இதனை செய்யத் தவறினால் பல உலக நாடுகள் இனப்படுகொலை பிரகடனத்தை ஆதரிக்கும் என்பது இவர் விடுக்கும் பயமுறுத்தல்.

இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்குட்பட்ட வடமாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியதை இவர் மறந்துவிட்டார். ஒன்ராறியோ சட்டசபை 2021ல் இதே பிரேரணையை நிறைவேற்றியரதையும், அதனை எதிர்த்து சிங்கள அமைப்புகள் தாக்கல் செய்த வழக்கை ஒன்ராறியோ உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ததையும் இவர் மறந்துவிட்டார்.

மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச உள்ளிட்ட ஆறு பேருக்கு போர்க்குற்ற அடிப்படையில் கனடா பயணத்தடை விதித்ததையும் இவர் மறந்துவிட்டார். ராணுவ உயர் அதிகாரி சவேந்திர சில்வா உட்பட சில படை அதிகாரிகளுக்கு போர்க்குற்ற காரணத்தால் அமெரிக்கா தடை விதித்ததையும் இவர் மறந்துவிட்டார். ஜெனிவா மனித உரிமைகள் பேரவை போர்க்குற்றத்தை மையப்படுத்தி அங்கத்துவ நாடுகளின் ஆதரவுடன் தீர்மானங்களை நிறைவேற்றுவதையும்கூட இவர் மறந்துவிட்டார்.

தமது அரசியல் இருப்புக்காகவும் சிங்கள பௌத்த தலைமைக்காகவும் கனடிய பிரதமரை இவர் இலக்கு வைத்திருப்பது எந்தவகையிலும் பயனளிக்காது என்பதை தெரிந்துகொள்ள அதிக காலம் தேவைப்படாது.

இது ஒருபுறமிருக்க, தமிழரசுக் கட்சியினருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மீண்டும் ஆரம்பித்திருக்கும் சுத்துமாத்துப் பேச்சுவார்த்தையும், தமிழரசுக் கட்சிக்குள் இடம்பெறும் குத்துவெட்டு காய்நகர்த்தல்களும் அண்மைய நாட்களின் முக்கிய சமாசாரங்கள்.

ரணிலுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளின்போது திரு. சம்பந்தன் கோபத்தின் உச்சியில் கொதித்து கொப்பளிக்கக் காணப்பட்டார். “ரணில் அவர்களே! இனியும் எங்களை பேய்க்காட்ட வேண்டாம். உங்களின் செப்படி விளையாட்டை நாங்கள் அறிவோம்” என்பதை, அரசியல் நாகரிகமாக “பொறுமையை நாங்கள் இழந்துவிட்டோம். தொடர்ந்தும் நாங்கள் ஏமாறத் தயாரில்லை” என்று நேருக்கு நேர் நெற்றியடியாக சம்பந்தன் கூறியது கொஞ்சமும் எதிர்பார்க்காதது.

ஆனால், இதனை ஆச்சரியமாகவோ கோபமாகவோ ரணில் காட்டிக் கொள்ளவில்லை. மிகவும் அமைதியாக யூலை மாத இறுதிக்குள் இரண்டு நாட்கள் பேசி முக்கியமான விடயங்களுக்கு தீர்வைக் காண்போம் என்று கூறியவர், அதன் அடிப்படையில் அதற்குப் பின்னரும் தீர்வு காணாவிடின் என்னை நீங்கள் எப்படியும் பேசலாம் என்று கூறி விவகாரத்துக்கு முடிவு கட்டினார்.

இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணப்படும் என்று கடந்த மாதம் தெரிவித்த ரணில், இப்போது யூலை மாதத்தில் தீர்வு எட்டும் என்று கூறி சம்பந்தனை ஷகூல்; பண்ணியுள்ளார்.

இதனை எழுதும்போது, 1980களில் சாவகச்சேரி எம்.பி.யாகவிருந்த வி.என்.நவரத்தினம் அவர்களுக்கும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் இடம்பெற்ற ஓர் உரையாடல் நினைவுக்கு வருகிறது. இதனை இப்பத்தி எழுத்தாளரிடம் நவரத்தினம் அவர்களே கூறியிருந்தார்.

“நீங்கள் தமிழர்களுக்கு எதிராக பல தடவை தொடர்ந்து கருத்துகளை தெரிவித்து வருவதால் எங்கள் மக்கள் உங்கள் மீதான நம்பிக்கையை இழக்கிறார்கள். உங்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை” என்று திரு. நவரத்தினம் தெரிவித்தபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அளித்த பதில் பின்வருமாறு இருந்தது.

“நீங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழில் ஆற்றும் உரைகளை சிங்கள பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது. அதுபோன்று நான் சிங்களத்தில் சிங்கள மக்களுக்கு ஆற்றும் உரைகளை தமிழ் பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது. நாங்கள் இருவரும் எங்கள் கட்சிகளின் வாக்கு வங்கியை காப்பாற்றவும், அதிகரிக்கச் செய்யவுமே இவ்வாறு பேசுகிறோம்” என்று ஜே.ஆர் சொன்னபோது தாம் வாயடைத்துப் போனதாக நவரத்தினம் எம்.பி. சொன்னார்.

**தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் நீண்ட துயில் நீங்கி எழுந்துவிட்டார். இது அவரது கோப காலம் போலும். தொடர்ந்து தமிழரை ஏமாற்ற வேண்டாமென்று ரணிலை எச்சரித்துள்ளார். திருமலை மாவட்டத்தில் தமது வலதுகரமாக இயங்கிய கனடா குககதாசனுக்கு கல்தா கொடுத்துள்ளார். எய்தவன் இருக்க அம்பை மட்டும் வீழ்த்தி என்ன பயன்?**

தமிழரசுக் கட்சிக்கும் ரணிலுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது சம்பந்தன் சண்டமாருதமாக வீசிய எச்சரிக்கையையும் சவாலையும் ஜே.ஆர். கூறியது போன்று நோக்கினாலும் அதில் பிழையிருக்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டு, தமிழரசுக் கட்சி தலைமைப் போட்டியில் பல கூறுகளாகி, தமிழரசின் வாக்கு வங்கி சிதறுண்டு போகும் நிலையில் அதனை காப்பாற்றுவதற்காகத்தான், பொறுமையை இழந்துவிட்டோம், தொடர்ந்து ஏமாறத் தயாரில்லை என்று சம்பந்தன் கூறியது தமிழர்கள் மத்தியில் பரப்பப்பட்டுவிட்டது. சம்பந்தன் எதிர்பார்த்ததும் நிறைவேறியிருக்கலாம்.

பசுத்தோல் போர்த்த சிங்கமான ரணிலையும் அவரது சாமர்த்திய ராஜதந்திர நகர்வையும், அவருக்கே இயல்பான செயற்பாட்டையும் அறிந்தவர்களுக்கு ஒன்று நன்கு புரியும். சிங்களத் தரப்பை மீறி, பௌத்த பீடத்தை எதிர்த்து தமிழருக்கு எந்தத் தீர்வையும் அவர் வழங்கப்போவதில்லை. இதனை அறிய வேண்டுமெனில் அண்மைய நாட்களில் சிங்களத் தரப்பில் வெளியான சில தகவல்களை உற்று நோக்க வேண்டும்.





வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் எதனையும் வழங்கும் தீர்மானம் இல்லையென்று அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் கட்டுவதை நிறுத்துவதாக எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லையென தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அநுர முனதுங்க அறிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டுமென மகிந்த ராஜபக்ச அணியின் முக்கியஸ்தரான ரோஹண அபயகுணவர்த்தன கோரியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு இப்போது தேர்தல் இல்லை. இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படலாமென அரச தரப்பிலிருந்து மெதுவாக ஒரு தகவல் கசிய விடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புகள் அன்று ஜெ.ஆர். சொன்னதுபோல சிங்கள மக்களுக்கானதல்ல. இது முற்றுமுழுதாக தமிழ் மக்களுக்கானது. இதுதான் ரணிலின் அரசியல்.

அடுத்து, திருமலையின் எதிர்கால எம்.பி. என்று பரவலாகப் பேசப்பட்டு வந்த கனடா குககதாசனுக்கு நேர்ந்த கதி - கடந்த சில மாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. இதனால் பலருக்கும் இது ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை.

கனடாவில் நீண்டகாலம் வாழ்ந்து வந்தவர் குககதாசன். இங்குள்ள தமிழர் அமைப்பொன்றில் பணி புரிந்தவாறு தமிழ் ஆசிரியராகவும் இருந்தவர். தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பிரதானியாக கனடாவில் செயற்பட்டவர். இக்கட்சிகளின் தேர்தலுக்கும் வேறு பணிகளுக்கும் நிதி சேகரித்து வழங்கி அந்த வட்டத்துள் முக்கியமானவராக தம்மை உயர்த்திக் கொண்டவர். ஆனால் கனடிய தமிழர் சமூகத்தில் இவருக்கு பெருமளவில் நற்பெயர் இருந்ததில்லை.

கடந்த பொதுத்தேர்தலில் எவ்வாறாவது எம்.பி.யாக வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் இலங்கை திரும்பி சம்பந்தனின் ஆசீர்வாதத்தோடு திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டவர். தேர்தலில் வெற்றி கிடைக்கவில்லையாயினும் சம்பந்தனின் வலதுகரமாக அதன் பின்னர் செயற்பட்டவர்.

திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் பட்டியலில் இரண்டாம் இடத்தில் வந்ததால் சம்பந்தனின் பின்னர் (?) தாமே எம்.பி. என்ற நினைப்பில், சம்பந்தனின் சுகவீனத்தை தமக்கு வசதியாக்கி சம்பந்தனுக்கு எதிரான சூழ்ச்சிகளில் ஈடுபட்டவர் குககதாசன் என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு.

இவ்விடயங்களை நன்கு தெரிந்து கொண்டும் இதுவரை பொறுத்துப் பார்த்த சம்பந்தன், இனி முடியாதென்ற நிலைமையில் குககதாசனுக்கு கல்தா கொடுத்துவிட்டார். தமது பிரத்தியேக இணைப்பாளராகவும், திருமலை மாவட்டத்தில் தமது கடமைகளை முன்னெடுக்கவும் திருமலை நகராட்சி மன்ற முன்னாள் தலைவர் என்.இராசநாயகத்தை சம்பந்தன் இப்போது நியமித்துள்ளார்.

குககதாசனை இப்போது பற்கள் பிடுங்கப்பட்ட பாம்பாக தமிழரசுக்காரர்கள் பரிதாபத்தோடு பார்க்கின்றனர். சம்பந்தன் இப்போது தம்மீது வீசப்பட்ட அம்பை மட்டும் பிடுங்கி எறிந்துள்ளார். இந்த அம்பை எய்தவர் மீது எப்போது சம்பந்தன் கை வைப்பார்? அந்த நாளையே தமிழரசின் உள்வட்டத்தினர் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

# சாதி பாகுபாட்டிற்கு எதிராக

## மசோதா நிறைவேற்றிய அமெரிக்க மாகாணம்: செனட் உறுப்பினருக்கு கொலை மிரட்டல்!

சாதி பாகுபாட்டை சட்டவிரோதமாகக் கருத வகை செய்யும் மசோதா, கலிபோர்னியா மாகாண சட்டமன்றத்தின் கீழ் அவையில் இந்த வாரம் விவாதத்திற்கு வர உள்ளது.

கலிபோர்னியாவை சேர்ந்த பத்திரிகையாளர் சவீதா படேல் இந்த மசோதா சட்டமாக்கப்படுவதை ஆதரிப்பவர்கள் மற்றும் எதிர்ப்பவர்களிடம் இதுகுறித்து உரையாடினார்.

கலிபோர்னியாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார் சுக்ஜிந்தர் கவுர். நோயாளிகளுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் இரவு, பகல் பாராமல் உழைத்து வரும் இவர், 'தாம் மிகுந்த அடக்குமுறைக்கு ஆளாகிறோம் என்ற எண்ணம், ஓய்வு நேரங்களில் எல்லாம் தமக்கு எழுகிறது" என்கிறார்.

தலித் சமூகத்தைச் சேர்ந்தவரான இவர், தெற்காசியாவை சேர்ந்த சக பணியாளர்களிடம் சாதிரீதியான அவமானங்களை அடிக்கடி சந்திக்க நேரிடுவதாகக் கூறுகிறார்.

சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளாகும் கலிபோர்னியர்கள் வீடு, கல்வி, வேலை போன்ற அடிப்படை விஷயங்களைப் பெறுவதில் சிக்கல்களைச் சந்திப்பதோடு, சமூகத்திலும் பாரபட்சமாக நடத்தப்படுவதாகக் கூறுகின்றனர் தலித் உரிமைகளுக்காகப் போராடி வரும் ஆர்வலர்கள்.

### மேலவையில் நிறைவேறிய மசோதா

குடியரசு கட்சியைச் சேர்ந்த செனட் அவை உறுப்பினரான ஆயிஷா வஹாப், தான் வடிவமைத்த மசோதா ஒன்றை கடந்த மார்ச் மாதம் அவையில் அறிமுகப்படுத்தினார்.

பாலினம், இனம், மதம் மற்றும் மாற்றுத்திறன் ஆகியவற்றுக்கு எதிரான பாகுபாடுகள் சட்டவிரோதமாகக் கருதப்படுவதைப் போன்று, சாதிப் பாகுபாட்டையும் சட்டவிரோதம் என்று அறிவிக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது.

முப்பத்தி நான்கு செனட் (மேலவை) உறுப்பினர்களின் ஆதரவுடனும், ஒரேயோர் உறுப்பினரின் எதிர்ப்புடனும் இந்த மசோதா கடந்த மாதம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண சட்டமன்றத்தின் கீழ் அவையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், அமெரிக்காவில் சாதிப் பாகுபாட்டிற்கு சட்டரீதியாகத் தடை விதித்த முதல் மாகாணம் என்ற பெருமையை கலிபோர்னியா பெறும்.

"நாங்கள் மிகவும் அழுக்காக இருப்பதாக, உயர் சாதிகளைச் சேர்ந்த செவிலியர்கள் அவதூறு பரப்புகின்றனர்" என்று வேதனையுடன் கூறுகிறார் இந்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்கும் திருமதி கௌர்.



### தூண்டுதலாக இருந்த சியாட்டில்

தெற்காசியாவுக்கு வெளியே, சாதி பாகுபாடுகளுக்கு எதிரான சட்டத்தைக் கொண்டு வந்த முதல் நகரம் என்ற பெருமையை அமெரிக்காவின் சியாட்டில் பெற்றுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் அங்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதே, கலிபோர்னியா மாகாணத்திலும் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான தூண்டுதலாக அமைந்தது.

கலிபோர்னியாவில் இயங்கும் தலித் உரிமைகளுக்காகப் போராடி வரும் அமைப்புகளின் தலைமையில், அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட தலித் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆர்வலர்கள் சேர்ந்து இந்தச் சட்டத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர்.

தெற்காசியாவில் இருந்து புலம்பெயர்ந்தோர் அதிகம் வாழும் இடமாக உள்ள கலிபோர்னியா, உலகின் மிகப் பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சிலவற்றின் தாயகமாகவும் திகழ்கிறது.

### சீக்கியர்களின் ஆதரவு

அமெரிக்காவில் மொத்தமுள்ள 5 லட்சத்திற்கும் அதிகமான சீக்கிய சமூகத்தினரில், பாதிக்கும் மேற்பட்டோர் கலிபோர்னியாவில்தான் வசிக்கின்றனர்.

இங்குள்ள சீக்கியர்களின் கோவில்களான குருத்வாராக்கள், சாதிப் பாகுபாட்டிற்கு எதிரான சட்டத்திற்கு முழுவீச்சில் ஆதரவு திரட்டி வருகின்றன.

சீக்கிய கூட்டணி மற்றும் சீக்கிய அமெரிக்க சட்ட பாதுகாப்பு மற்றும் கல்வி நிதி அமைப்பு ஆகிய சீக்கிய சமூகத்தின் மிகப்பெரிய அமைப்புகள் இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

கலிபோர்னியாவில் உள்ள சீக்கியர்கள் மத்தியில், மிகப்பெரிய தலித் சமூகமாக விளங்குகிறது, ரவிதசியா. இந்த சமூகத்தைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் வரை இங்கு வசித்து வருகின்றனர். இவர்களும் இந்த மசோதாவை அதன் அடிமட்ட நிலையிலிருந்து ஆதரிக்கின்றனர்.

சாதி பாகுபாடுகள் தொடர்பான தங்களது சொந்த அனுபவங்களையும், தங்களைச் சுற்றி நிகழும் சாதிய ஒடுக்குமுறைகள் குறித்தும் பெண்கள் பேச வேண்டும் என்று ரவிதசியா சமூக பாரம்பரியத்தைப் பின்பற்றும், பெண்களின் உரிமைக்காகப் போராடி வரும் ஆர்வலரான ரேணு சிங் வலியுறுத்துகிறார்.



### புள்ளிவிவரங்கள் சொல்வது என்ன?

தலித் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்பின் ஒரு புள்ளிவிவரப்படி, தெற்காசியாவில் இருந்து அமெரிக்காவிற்கு புலம் பெயர்ந்தவர்களில் சாதிய அடக்குமுறைகளுக்கு ஆளாவோரில் நான்கில் ஒருவர் உடல் மற்றும் வாய்மொழி வன்முறைக்கு ஆளாகிறார்.

மூன்றில் ஒருவருக்கு கல்வியில் பாகுபாடு காட்டப்படுகிறது. மூன்றில் இருவர் பணியிடத்தில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

### சாதியை சொல்ல பயம்

சாதியை பற்றிய பகிர்வு மற்றும் அதன் விளைவுகள் குறித்து சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு 1,500க்கும் மேற்பட்டோரிடம் நடத்தப்பட்டது. அதில் கண்டறியப்பட்ட முக்கிய அம்சங்கள் 2018இல் வெளியிடப்பட்டன.

அதில் குறிப்பாக, கீழ் சாதியினராகக் கருதப்படுவர்கள் தங்களின் சாதிய அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டால், அதன் விளைவாகத் தாங்கள் பழிவாங்கப்படுவதுடன், இங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிடுவோமோ என்றும் அஞ்சினர்.


இந்த அச்சம் காரணமாக அவர்கள் தங்களின் சாதி அடையாளத்தை வெளிப்படுத்துவதைத் தவிர்த்தனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்களில் கணிசமான பிரிவினர், சாதி பாகுபாடு குற்றச்சாட்டை நிராகரிக்கின்றனர்.

### மசோதாவுக்கு எதிராக ஒலிக்கும் குரல்கள்

'நான் இங்கு 35 வருடங்களாக வாழ்ந்து வருகிறேன். எந்த இந்துவும் நான் என்ன சாதி என்று என்னிடம் கேட்டதில்லை," என்கிறார் சான் பிரான்சிஸ்கோவை சேர்ந்த தலித் செயற்பாட்டாளரான தீபக் ஆல்ட்ரின்.

இந்திய- அமெரிக்க தனிநபர்கள், மதம் மற்றும் பல்வேறு பணிகளைச் சார்ந்த குழுக்களின் மத்தியில் இந்த மசோதாவுக்குக் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.





இந்த மசோதா குறிப்பிட்ட ஒரு மதத்தைக் குறிக்கவில்லை. எனினும், இது இந்துக்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டுக்கு எதிராக பாரபட்சமான போக்கை உருவாக்கும் என்பதுடன், பணி அமர்த்துவதற்கான அவர்களின் தகுதியையும் குறைக்கும் என்பன போன்ற வாதங்களை அவர்கள் முன்வைக்கின்றனர்.

'சாதி பாகுபாடு பிரச்னைகளைக் களைய கலிபோர்னியாவில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களே போதுமானவை. எனவே இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென்று மக்கள் பிரதிநிதிகளை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தரப்பினரின் ஆதரவை திரட்டி வருகிறோம்" என்கின்றனர் அவர்கள்.

இந்து கொள்கை ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை அமைப்பின் கீழ் இயங்கும் பல்வேறு அமைப்புகள், கோவில்களின் நிர்வாகிகளும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

"இந்த மசோதா முற்றிலும் குறைபாடுள்ள, தவறான நோக்கம் கொண்டது" என்கிறார் இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அஜய் ஷா.

"இந்திய துணைக் கண்டத்தில் இருந்து இங்கு வரும் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இந்து தர்மத்தைப் பின்பற்றுபவர்களை இலக்காகக் கொண்டுள்ள இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டாம் என்று கலிபோர்னியாவின் மக்கள் பிரதிநிதிகளுக்குக் கோரிக்கை விடுக்கிறோம்," எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த மசோதா ஏற்கெனவே சாதியைப் பற்றித் தேவையற்ற கவனத்தை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த, குறிப்பாக தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலை செய்யும் பணியாளர்களிடம், தெற்காசிய பகுதிகளைச் சாராதவர்கள், அவர்களின் சாதி தொடர்பாக முறையற்ற கேள்விகளை எழுப்புவதைக் கேட்க முடிகிறது.

இந்த நிலையில் இது ஒரு நடைமுறையானால், அதுவே இன உணர்வு அடிப்படையிலான துன்புறுத்தலுக்குக் காரணமாக அமையலாம் என்று எச்சரிக்கிறார் இந்து அமெரிக்க அமைப்பின் இணை அமைப்பாளரும், செயல் இயக்குநருமான சுஹாக் சுக்லா.




மேலும் இதுதொடர்பாக கலிபோர்னியா மாகாண அரசுக்கு எதிராகத் தங்களது அமைப்பின் சார்பில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது மிகவும் சிக்கலான பிரச்னை என்பதால், தனிநபர்களின் சாதியை அடையாளம் காண அரசு எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பதில் தங்களுக்குக் குழப்பம் உள்ளது என்கின்றனர் இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள்.

"இது வெறும் பாகுபாடுகளுக்கு எதிரான மசோதாவாக உள்ளதே தவிர, சாதி எப்படி நிர்ணயம் செய்யப்படும் என்பது குறித்து இதில் எந்தவொரு தெளிவான விளக்கமும் இடம்பெறவில்லை," என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### கொலை மிரட்டல்

இப்படி, சாதிப் பாகுபாட்டிற்கு எதிரான இந்த மசோதாவுக்கு ஆதரவும், எதிர்ப்புக் குரல்களும் ஒலித்து வருகின்றன.

இந்த நிலையில், இந்த மசோதாவை முன்மொழிந்ததற்குப் பிறகு தமக்கு கொலை மிரட்டல்கள் வருவதாக வருத்தத்துடன் கூறுகிறார் கலிபோர்னியா மாகாண சட்டமன்ற மேலவை உறுப்பினரான ஆயிஷா வஹாப்.

இந்த மசோதாவுக்கு எதிர்வினை தம்மை அதிருப்தி அடைய செய்துள்ளதாகக் கூறும் அவர், கலிபோர்னியா மாகாண மக்கள் இந்த மசோதாவை ஆழ்ந்து படிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"நீங்கள் உயர் சாதியைச் சேர்ந்தவரா, தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவரா என்பது விஷயமல்ல. இந்தச் சட்டம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்," என்கிறார் அவர்.

# வெள்ளி, ஞாயிறு தனியார் வகுப்புக்கள் தடை மாணவர் சமுகத்தை முன்னேற்ற உதவுமா?

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து தனியார் கல்வி நிலையங்களில் தரம் 1 தொடக்கம் தரம் 9 மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் இடைநிறுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டு அது உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படும் என அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின் சாதக, பாதக நிலைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் வெளியிடும் கருத்துக்கள் இவை.




**ஆ.சிவபாலசுந்தரன்,**
*மாவட்ட அரச அதிபர்*




ஜூலை முதலாம் திகதி முதல் யாழ். மாவட்டத்தில் தரம் ஒன்பதுக்குட்பட்ட மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் தனியார் வகுப்புக்களை நடத்துவதை நிறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது யாழ். மாவட்ட அரச அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகளும் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் தொடர்பாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதில் சுகாதாரம், கல்வி, மதத் தலைவர்கள், பொலிஸ், தனியார் கல்வி நிலைய நிறுவனங்கள், பெற்றோார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் கீழ்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

1 . பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வு கருத்தமர்வுகளை தனியார் கல்வி நிலையங்களையும் இணைத்து மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு பிரதேச செயலக மட்டங்களில் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

2 . ஜ/லை மாதம் முதலாம் திகதி முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கான பிரத்தியேக கல்வி நடவடிக்கை முற்றுமுழுதாக ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமை மாலையும் நிறுத்தப்படவேண்டும்.

3 . தனியார் கல்வி நிலையங்கள் சுகாதார வசதி, வகுப்பறை பிரமாணம் கட்டடங்கள் போன்றவற்றுக்கமைய அமைந்திருக்கவேண்டும்.

4. தனியார் கல்வி நிலையங்கள் உள்ளூராட்சி நிறுவனம், பிரதேச செயலகத்தில் பதிவு செய்தல் கட்டாயமாகும்.

5 . தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மிகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களை போதிக்க வேண்டும்.

6 . இந்த செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுதை அவதானித்து பிரதேசமட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் குழு உருவாக்கப்படவுள்ளது.

இத் தீர்மானங்களை பின்பற்றாத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**வ,பார்த்தீபன்,**
*சமூக ஆர்வலர்*

தனித்துவமிக்க ஆளுமை மிக்க பல்திறன் கொண்ட ஒரு மாணவ சமூகமாக எமது மாணவச் செல்வங்கள் வளரந்து மிளிரவேண்டும் என்றால் கல்வியில் மட்டுமின்றி ஆன்மீகம் மற்றும் விளையாட்டு போன்ற பல் துறைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் மாணவர்கள் கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அவர்கள் மனதளவில் விரும்பினாலும் அதற்குரிய களச்சூழல் அமையவில்லை என்பதை விட யாராலும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் தற்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், கல்வியாளர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன உரிமையளார்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் கல்வி தவிர்நத ஏனைய செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கான களச்சூழல் ஒன்றை உருவாக்கிக் கொடுத்திருப்பது என்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

உண்மையில் மாணவர்களுக்கு கல்வி சுமை அவர்களது விருப்பத்திற்கு மாறாக மிகப் பாரியளவில் தற்போது சுமத்தப்படுகின்றது. அதனை அவர்கள் விரும்பியோ விரும்பமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. அதிகரித்துவிட்ட கல்விச்சுமையால் அவர்களுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தங்களை போக்கிக் கொள்வதற்கும் வேறு சமூகப் பிறழ்வான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தத் தூண்டும் மனநிலையை மாற்றிக் கொள்வதற்கும் வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றல் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஓய்வு பயனுள்ளதாக அமையும்.

மாணவர்களில் கல்விச் செயற்பாடுகளில் தனியார் கல்வி நிலையங்களின் பங்கு அளப்பெரியது. அதனை ஓதுக்கி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது இயலாத காரியம். யாழ்ப்பாணத்து தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பதற்காக இலங்கையின் வேறு மாவட்டங்களில் இருந்தும் வந்து க.பொ.த. உயர்தர மாணவர்கள் சனி மற்றும் ஞாயற்றுக்கிழமைகளில் வருகை தருகின்றார்கள். அதையும் கருத்திற் கொண்டும் தரம் 10, க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கல்விச் செயற்பாட்டில் முக்கியத்துவம் வழங்கியும் ஏனைய வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வெள்ளி மற்றும் ஞாயற்றுக் கிழமைகளில் ஓய்வு அளிக்கப்பட்டமை என்பது சிறப்பாகும்.

மாணவர்களின் கல்வியுடன் கூடிய உளவளத்தை மேம்பாடுத்தும் முகமாக ஏற்படுத்தப்பட்ட இச் செயற்றிட்டத்திற்கு அவைவரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் இதன் மூலம் பல் திறமைமிக்க நல் ஒழுக்கமுள்ள மாணவர் சமூகத்தினை உருவாக்குவதற்கு இணைந்து பயணிக்கவேண்டும்-என்றார்.

## தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களின் கருத்து

மாணவரின் கல்வியே வாழ்வை உயர்த்தும். ஆன்மீகமும், பொழுதுபோக்குகளும் இன்று அர்த்த மற்றவையாக மாறிவிட்டது எற யாழ்ப்பாண மாவட்ட தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மாணவர்களின் கல்வி என்பது இலங்கை நாட்டில் காணக்கூடிய கனியே தவிர இலகுவாகப் பெறக்கூடியது அல்ல.

இது காலம் காலமாக அனுபவித்த உண்மை. அதனாலேயே பல்லாயிரம் உயிர்களைப் பறிகொடுத்தோம். அதன் பின்னரும் விடிவு கிடைத்ததா என்பதற்கு இன்றைய உயர்நிலை அதிகாரிகளே பதில் சொல்லட்டும். ஏனெனில் அவர்களில் பலர் அத்துன்பங்களை அனுபவித்தவர்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழரின் கல்விக்கான களஞ்சியசாலை. இதனை சீர்குலைக்க / அழிக்க பல அழிவுகள் அட்டூழியங்கள் நடந்தேறின. அக்காலங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் எத்தகைய பங்கு வகித்தன என்பதனை எல்லோரும் அறிவர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களைப் பூட்டி ஆன்மீக உணர்வுக்கும் பொழுதுபோக்குகளுக்கும் மாணவர்களை அனுமதிக்கவேண்டும். இல்லையேல் கடும் நடவடிக்கை என ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பல விடயங்களை விட்டுவிட்டு ஆன்மீகத்தையும் பொழுதுபோக்கையும் பெருக்கவேண்டுமென்பது எழுத்து மூலமான அல்லது பேச்சு மூலமான நடவடிக்கை மட்டுமே.

“தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவிகள் சுதந்திரமாக சென்று திரும்ப முடிகின்றதா”

“பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருட்கள் திணிக்கப்படுகிறதே.”

“சிறு பராயத்தினர் விபத்துக்களில் மாண்டு போகின்றனரே” இவற்றுக்கு கடும் நடவடிக்கை எடுக்க முடியாதா?

இதைவிட ஆன்மீக சிந்தனை என்பது குடும்ப ரீதியாக பெற்றோர்களால் ஊட்டப்படவேண்டியது என்பதற்கு அப்பால் ஆன்மீகக் காப்பகங்களின் காப்பாளர்களின் செய்திகள் எமக்கு எத்தகைய எண்ணங்களை ஏற்படுத்துகின்றன. இவை குழந்தைகள் மனதில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது குறித்து ஆராயவேண்டும்.

குடாநாட்டில் சிறார்களின் மன அழுத்தங்களைக் குறைக்கும் பொழுதுபோக்கு மையங்கள் எத்தனை உள்ளன. எங்கு உள்ளன. அங்கு குழந்தைகளோடு செல்லலாமா? உதாரணமாக யாழ். பண்ணையில் அமைந்துள்ள ஆறுதல் அமர்விடத்திற்கு செல்லலாமா?

மாணவர்களிடையே ஆன்மீக சிந்தனைகளைப் பெருக்கி மன அழுத்தங்களைக் குறைத்து நல்மனிதர்களாக ஆக்கலாம் என்பது ஆன்மீகவியலாளர்களின் அன்றைய வாக்கு. அது அன்று பலனளித்தது.

ஆனால் இன்று அப்படியல்ல. ஒவ்வொரு பெற்றோரும் கல்வி ஒன்றே வாழ்வின் ஆதாரம் எனப் பெரும் குறியாக உள்ளனர். அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்தத் தொழிலுக்கும் எப்பொழுதும் வாய்ப்பே இல்லை.

இன்று இத்தகைய கல்வி நிறுவனங்களை மூடவேண்டும் என்ற முடிவுகளை எடுப்பவர்கள் கல்வியை மட்டும் கருத்தில் வைத்திருந்தவர்கள்.

தனியார் கல்வி நிலையங்களை மூடி ஆன்மீக பொழுதுபோக்கிற்கு விட வேண்டும் என்பதில் உடன்பாடு இருந்தாலும்.

பணமுள்ளவர்கள் இந்த வெள்ளி, ஞாயிறு நாட்களில் பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்புவதை நிறுத்த முடியுமா?

பாடசாலைகளில் மாலை நேர வகுப்புகளையும், சனி, ஞாயிறு வகுப்புகளையும் நிறுத்தமுடியுமா?

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை என்பது விமர்சனங்களுக்கு அப்பால் பலரின் சந்ததி வாழ்க்கையை உயர்த்தியுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களின் நிலை என்ன?

கல்வியியலாளர் என்போர் இன்று வெறும் சொல் வளவாளர்களே! அவர்கள் தங்களை கல்வியியலாளர்களாக உயர்த்தி தங்கள் பிள்ளைகளையும் உயர்த்திக் கொண்டு வெறும் கல்வித் தத்துவங்களை மற்றையோர் மீது திணிப்பது எத்தகை பொருத்தமுடையது?

கடுமையான நடவடிக்கை என செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் இந்த நியாயமான கேள்விகளையும் பிரசுரிக்க வேண்டும்-என்றனர்.

# அம்மா வேடத்தில் சமந்தா

முன்னணி நாயகிகளிடம் கொஞ்சம் வயது அதிகமான பாத்திரத்துக்குக் கேட்டாலே முகத்தில் அடித்தாற் போல் ஒதுங்கிக்கொள்வார்கள். ஆனால், சமந்தா, தன்னைவிட வயது மூத்த பிரியங்கா சோப்ராவுக்கு அம் மாவாக நடிக்க சம்மதித்திருக்கிறார்.

'சிட்டாடெல்' இணையத் தொடரின் இந்திய பதிப்பில்தான் இந்த துணிச்சல் முடிவை எடுத்திருக்கிறார் சமந்தா. "கதாபாத்திரம் பிடித்திருந் தால் நான் எதுவும் செய்வேன். அதற்கு முன்னுதாரணம் தான் இந்த முடிவு" என கெத்தாக சொல்கிறார் சமந்தா.




# மீண்டும் வந்த பாவனா

நடிகை பாவனா 13 வருடத்துக்குப் பிறகு தமிழில் நடிக்கும் படத்துக்கு 'தி டோர்' என்று பெயர் வைத்துள்ளனர். பாவனாவின் 86ஆவது படமான இதன் முதல் தோற்றம் வெளியாகியுள்ளது.

படத்தை பாவனாவின் சகோதரர் ஜெய்தேவ் இயக்கியுள்ளார். ஜூன் ட்ரீம்ஸ் சார்பில் பாவனாவின் கணவர் நவீன் ராஜன் தயாரிக்கிறார். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் படம் வெளியாக இருக்கிறது.



# தமிழுக்கு பின்னடிக்கும் சிறீ லீலா



தெலுங்கில் இளம் நடிகையாக வலம் வருபவர் சிறீ லீலா. கன்னடத்தில் 'கிஸ்' என்ற படத் தின் மூலம் அறிமுகமானவர். அதன் பிறகு தமாகா படத்தின் மூலம் தெலுங்கு திரையுலகில் நுழைந்தார். தற்போது தெலுங்கில் 6 படங்களில் நடித்து வருகிறார்.


இந்த நிலையில் தமிழ் படங்களில் சிறீ லீலாவை நடிக்க வைக்க பலரும் அவரை அணுகியபோது நடிக்க மறுத்து விட்டார். சமீபத்தில், இயக்குனர் ஹரி இயக்கத்தில் நடிகர் விஷால் நடிக்கும் புதிய படத்துக்கு அவரை கதாநாயகியாக நடிக்க கேட்டபோதும் அவர் மறுத்து விட்டாரெனக் கூறப்படுகிறது.



**திரைப்படம் - போர் தொழில்**
**இயக்கம் - விக்னேஷ் ராஜா**
**நடிப்பு - அசோக் செல்வன், ஆர். சரத்குமார், நிகிலா விமல்**
**இசை -ஜேக்ஸ் பிஜோய்**

திருச்சியில் பெண்களை குறிவைத்து ஒரே வடிவத்தில் தொடர் கொலைகள் நிகழ்த்தப்படுகின்றன. எந்தவித தடயமும் கிடைக்காததால் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளூர் காவல்துறை திணறுகிறது. இதனால், இந்த வழக்கு குற்றவியல் பிரிவு எஸ்.பி.லோகநாதனிடம் (சரத்குமார்) ஒப்படைக்கப்படுகிறது. அவரிடம் புதிதாக சிறப்பு ஆய்வாளர் பணி நியமனம் பெற்ற பிரகாஷ் (அசோக் செல்வன்) பயிற்சிக்காக இணைகிறார். சைக்கோ கொலைகாரனை கண்டுபிடிக்கும் முயற்சியில் இருவரும் விசாரணையை தொடங்குகின்றனர்.

இறுதியில், கொடூர கொலைகளை அரங்கேற்றும் தொடர் கொலையாளி யார்? எதற்காக அவர் இப்படியான கொலை




களை செய்கிறார்? பின்புலம் என்ன? - இதையெல்லாம் மர்மம் நிறைந்த த்ரில் பாணியில் சொல்லியிருக்கும் படம்தான் 'போர் தொழில்'.

முறையான குழந்தை வளர்ப்புக்கான தேவையையும் திருமண உறவுச் சிக்கல்களில் எழும் முரண்களை களைய வேண்டியதற்கான அவசியத்தையும் முன்வைத்து ஓர் அழுத்தமான தொடர் கொலையாளி கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் ராஜா. அவர் கட்டமைக்கும் அந்த உலகம் வெறும் மர்மம் - த்ரில் என்று சுருங்காமல் குற்றங்களுக்கும் குற்றவாளிகளுக்கும் பின்னாலிருக்கும் சமூக உளவியல் காரணிகளை அலசி விடை தேட எத்தனிக்கிறார். அத்துடன், இரண்டு வெவ்வேறு குணாதிசயம் கொண்ட முதன்மைக் கதாபாத்திரங்களை 'விசாரணை' என்ற ஒற்றைப்புள்ளியை நோக்கி நகர்த்திச் செல்லும் வகையிலான திரைக்கதை பார்வையாளர்களுக்கு சுவாரஸ்யத்தை கூட்டுகிறது.

உதாரணமாக தங்க பதக்கம் வென்று வெறும் படிப்பை மட்டுமே வைத்துக்கொண்டு களத்துக்குகு வரும் அசோக் செல்வன் கதாபாத்திரத்தை அனுபவம் வாய்ந்த உயர் அதிகாரியான சரத்குமார் அணுகும் விதமும், இரண்டு கதாபாத்திர முரண்களும் கதையை உற்சாகப்படுத்துகிறது. அவர்களுக்கு இடையேயான உரையாடல்கள் நகைச்சுவை கலந்து எழுதியிருப்பது ஈர்ப்பு.

குறிப்பாக தொடர் கொலைகள் குறித்து சரத்குமார் விவரிக்கும் காட்சி, கொலைகாரனை நெருங்கும் காட்சியும் இடைவேளை என விறுவிறுப்புக்கு பஞ்சமின்றி கடக்கும் முதல் பாதி முத்திரை பதிக்கிறது. வசனங்களும் கவனம் பெறுகின்றன.

எதுவும் அறியாத இளைஞராக அசோக் செல்வன் நகைச்சுவை கலந்த உடல்மொழி, ஆங்காங்கே சில ஒரு வரியாக-அறிவுஜீவியாக காட்டிக் கொள்ள செய்யும் செயல்கள் என படம் முழுக்க ஈர்க்கிறார். துப்பாக்கியை வைத்து அவர் காட்டும் வித்தை கவர்கிறது. கடுகடுப்பான முகத்துடன் கறார் காட்டும் உயர் அதிகாரியாகவும், உணர்ச்சிபூர்வமான காட்சி ஒன்றில் முகத்திலிருந்து முழு நடிப்பை கடத்தும் இடத்திலும் 'மூத்த' நடிகர் என்ற முத்திரையைப் பதிக்கிறார்.

நிகிலா விமலுக்கு முக்கியத்துவம் இல்லை என்றாலும், தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தில் நேர்த்தி காட்டுகிறார். மறைந்த நடிகர் சரத்பாபுவின் இன்ப அதிர்ச்சி கதாபாத்திரமும், அதற்கான அவரின் நடிப்பும் யதார்த்தம். ஹரீஷ்குமார் எதிர்மறை கதாபாத்திரத்தில் மிரட்டியிருக்கிறார்.

ஜேக்ஸ் பிஜாயின் பின்னணி இசை காட்சிப்படுத்தப்படாத கதாபாத்திரமாகவே படம் முழுக்க பயணிக்கிறது. காட்சிகளைத் தாண்டி சில இடங்களில் தனது இசையால் பயமுறுத்துபவர் சில இடங்களில் அமைதியை பரவ விட்டது படத்துக்கு பெரும் பலம். கலைச் செல்வன் சிவாஜியின் ஒளிப்பதிவில் இரவுக் காட்சிகள் தனித்து தெரிகின்றன.

முடிந்த அளவு தான் எடுத்துக்கொண்ட கதையை மர்மம் குறையாமல் அதே வேகத்தில் இரண்டாம் பாதியிலும் கடத்த முயன்றிருக்கிறார் இயக்குநர். ஆனால், சைக்கோ த்ரில்லர் படங்கள் என்றாலே பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டும் தொடர்ந்து கொலைக்குற்றவாளிகளாக சித்தரிப்பதற்கான நியாயம் மட்டும் புரிவதில்லை. மற்றபடி, விறுவிறுப்பாக க்ரைம் த்ரில்லர் விரும்பிகளுக்கான விருந்தை 'போர் தொழில்' மசாலா குறையாமல் பரிமாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.



# இதுதான் மெகா கூட்டணி


ஞானவேல் இயக்கத்தில் ரஜினி தனது 170ஆவது படத்தில் நடிக்கிறார். லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

இந்த நிலையில் இப்படத்தில் ரஜினிக்கு இணையான கதாபாத்திரத்தில் பொலிவூட் நடிகர் அமிதாப் பச்சன் நடிக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 1991ஆம் ஆண்டு ஹிந்தியில் வெளிவந்த ஹம் படத்திற்கு பிறகு கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்கு கழித்து ரஜினிகாந்த், அமிதாப்பச்சன் இருவரும் இணைந்து நடிக்க உள்ளனர். மேலும் இது நடக்கும் பட்சத்தில் இதுதான் அமிதாப்பச்சன்க்கு முதல் நேரடி தமிழ்ப்படமாகவும் அமையும்.

அதுமட்டுமல்ல இது தான் உண்மையான மெகா கூட்டணி படமாகவும் அமையும். விரைவில் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்கிறார்கள்.

# திரைப்படமாகும் சக்திமான்



90களில் அனைவரையும் கவர்ந்த சாகச நாயகன் சக்திமான் தொடர் தூர்தர்ஷனில் சில ஆண்டுகள் ஒளிபரப்பாகி வரவேற்பை பெற்றது. இதில் சக்திமான் கதாபாத்திரத்தில் முகேஷ் கண்ணா நடித்திருந்தார். சில வருடங்களுக்கு முன்பு சக்திமான் தொடரை பிரமாண்டமான படமாக தயாரிக்க இருக்கிறோம் என்றும், அது இந்த காலத்துக்கு பொருத்தமான கதையாக இருக்கும் என முகேஷ்கூறியிருந்தார். ஆனாலும் அடுத்த கட்டத்துக்குப் படம் நகரவில்லை.

தற்போது இந்த படத்தை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இது குறித்து சமீபத்தில் முகேஷ் கண்ணா கூறுகையில் "சக்திமான் தொடர் இப்போது ரூ. 300 கோடி செலவில் சர்வதேச தரத்தில் திரைப்படமாக உருவாக இருக்கிறது. அதேபோல் சக்திமான் கதாபாத்திரத்தில் நான் நடிக்கவில்லை. தேவையில்லாமல் எந்த ஒப்பிடும் இருக்க கூடாது என்பதற்காக சிறப்பு தோற்றத்திலும் நான் நடிக்க வில்லை - என்றார்.

# அயோத்தி இயக்குநரின் புதிய படம்




சசிகுமார், ப்ரீத்தி அஸ்ரானி உட்பட பலர் நடிப்பில் உருவான படம், 'அயோத்தி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் மந்திரமூர்த்தி இயக்கி இருந்தார். இந்தப் படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் வரவேற்பை பெற்றது.

இதையடுத்து நிறுவனத்துக்கே அடுத்த படத்தையும் இயக்குகிறார், மந்திரமூர்த்தி. மதுரை பின்னணியில் 'அயோத்தி'யை உருவாக்கிய அவர், இப்போது திருநெல்வேலி பின்னணியில் அடுத்தப் படத்தை இயக்கவுள்ளார்.

# டோனி...! கிரிக்கெட் காட்டின் ஒற்றை யானை...



ரயிலின் யன்னலோர இருக்கைமீது நமக்கு ஏன் இவ்வளவு காதல்? வாஞ்சையும் வாடையுமாய் நம்மை அணைக்கும் தூரத்து மலை, வெறுமையையும் ஏக்கத்தையும் பிரதிபலிக்கும் தரிசுப் பாலை, இதமும் குளிர்ச்சியுமாய் கம்பி தாண்டி நம்மீது இறங்கும் மழை, கசகசப்பும் கனவுகளைத் துரத்தும் கண்களுமாய் நகரங்கள் என அடுத்தடுத்த நொடி அந்த இருக்கை நமக்குப் பரிசளிக்கும் ஆச்சரியங்களே இந்தக் காதலுக்குக் காரணம். இதே போலத்தான் மனிதர்களும். அந்தந்த நேரத்து ஆச்சர்யங்கள். இதை எழுதிக்கொண்டிருக்கும் ஜூன் முதல் வாரத்தில் அந்த மனிதர் 'டோனி.' பறந்து களைத்து வீழ்வது போல இறங்கி சட்டென இரையைக் கௌவி அதனினும் வேகமாய் மேலேறும் கழுகைப் போல, ஒன்பதாம் இடத்திலிருந்து மீண்டெழுந்து சம்பியனாகும் ஆச்சரியம் அவருக்கும் அவர் வழிநடத்தும் அணிக்கும் மட்டுமே சாத்தியம்.

2015இன் கோடை. ஐ.பி.எல் போட்டி நடக்கும் நாள்களில், சேப்பாக்கத்தைச் சுற்றி வருவதும் அங்கு உலவும் மனிதர்களை கவனிப்பதும் பிடித்தமான பொழுதுபோக்காக மாறியிருந்தது. சென்னையில் இருந்தாலும் ஊரை, அதன் திருவிழாக்களை வட்டமிடும் மனதுக்கான சின்ன சால்ஜாப்பு அது. பொருளாதார அடுக்கின் அடுத்த கட்டத்தை எட்ட எத்தனிக்கும் நடுத்தர தொழில்நுட்ப இளைஞர்கள், அந்தக் கட்டத்தை ஏற்கெனவே எட்டிவிட்ட மக்கள் ஆகியோரை பெரும்பான்மையாகக் கொண்ட கூட்டம் அது. ஐ.பி.எல் அந்தக் காலகட்டத்தில் ஒரு மாலை நேரத்துக் கொண்டாட்டம்.

சி.எஸ்.கே அந்த ஆண்டு சேப்பாக்கத்தில் கடைசியாகக் களம் கண்ட மே 10, 2015 போட்டிக்கும் அதன்பின் களம் கண்ட ஏப்ரல் 10, 2018 ஆட்டத்திற்கும் இடையே நிறைய மாறியிருந்தது. சென்னை அணிமீதான தடை, 2015இல் இந்திய அணியின் தலைமை பொறுப்பி லிருந்து டோனி விலகல் - இப்படி நிறைய... கூடவே டோனியை நேரில் காணத் துடிக்கும் மனங்களின் எண்ணிக்கையும்! 2018-ல் கொல்கத்தாவுடனான முதல் போட்டி. வெளியே அரசியல் சூழல் மோசமாக இருக்க, உள்ளே 'கேப்டன் டோனி', 'கேப்டன் டோனி' என இரைந்துகொண்டிருந்தது கூட்டம். 'கேப்டனாய்' அவரை இங்கு மட்டுமே இனி காணமுடியும் என்பதால் கூடிய கூட்டம் அது. சின்னப் புள்ளியாய் மைதானத்தின் ஒரு கோடியிலிருந்து மெதுவாய் நுழைகிறது அந்த உருவம். ஆர்ப்பரிப்பு உச்சம் தொடுகிறது. கூட்டம் மறைக்குமென்பதால் கேலரியின் படிகளில் நின்று இடுக்குகளின் வழியே கம்பியைப் பிடித்தபடி இறுதி வரை டோனி கோஷத்தை எழுப்பிக்கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ஒருவகையில் அந்தச் சிறுவனின் வழியே, பின் நிகழவிருப்பவைக்கான முன்னோட்டத்தை நிகழ்த்துகிறது காலம்.

2019இன் கோடை. சேப்பாக்கத்தின் கடல்காற்றில் உப்போடு சேர்ந்தே கலந்திருந்தது டோனி ஓய்வு குறித்த யூகங்களும். பட்டறிவோ, பட்டங்களினால் பெற்ற அறிவோ, நிதர்சனத்தை எதிர்கொள்ள முடியாமல் அடம்பிடிக்கும் குழந்தை மனநிலைக்கு முன்னால் அவையெல்லாம் ஒன்றுமே இல்லை. அப்படித்தான் அந்தத் தொடர் முழுவதும் கூடியது கூட்டம்.

சரியாய் 1,427 நாள்கள் கழித்து சென்னை. மீண்டும் சேப்பாக்கத்தில் இந்த ஆண்டு களம் கண்டபோதும் நிறைய மாறியிருந்தது. ரெய்னா மொத்தமாக கிரிக்கெட்டுக்கே முழுக்கு போட்டிருந்தார். பிராவோ வீரர் முகாமிலிருந்து பயிற்சியாளர் முகாமுக்கு மாறியிருந்தார். டோனி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஆனால், இவை எல்லாவற்றையும்விட அதீதமாக மாறியிருந்தது ரசிகர் கூட்டம்தான். டோனியை இனி இங்கு மட்டுமே காணமுடியும், அதுவும் இப்போது மட்டுமே காணமுடியும் என்பதான பரிதவிப்பின் கூட்டம் அது.

2015ஐப் போல ஒரு சாராருக்கானதாக இல்லை இந்தக் கூட்டம். டோனியை தங்கள் ஆதர்ஷமாய் நினைக்கும் இளையோர் பால்பேதமின்றி இருந்தார்கள். கைகோத்து 'ஊழரிடந புழயடள' என தங்கள் செக் லிஸ்ட்டில் ஒன்றை டிக் செய்துவிட முனையும் இளம்ஜோடிகள் இருந்தார்கள். அம்பாரியாய் மாறி குழந்தைகளைத் தூக்கிவைத்து டோனியைக் காட்டும் அப்பாமார்கள் இருந்தார்கள். நெளிய தோளோடு தோள் அணைத்து வந்தமரும் தாத்தா - பாட்டிகள் இருந்தார்கள். வட இந்தியாவிலிருந்து விமானமேறி சென்னையில் டோனி ஆடுவதைப் பார்க்க வந்த அநேகம் பேர் இருந்தார்கள். டிக்கெட் கிடைக்குமோ கிடைக்காதோ என்கிற பதற்றத்தோடு முன்பதிவின்றி தென் தமிழகத்திலிருந்து இரவோடு இரவாகக் கிளம்பி வந்த வெறியர்கள் இருந்தார்கள். காலங்காலமாய் கிரிக்கெட்டே வேலையாகிப் போய்விட்டாலும் இறுதியாக ஒரு முறை டோனி ஆடுவதை சேப்பாக்கத்தில் அமர்ந்து பார்க்க வந்த பத்திரிகையாளர்கள் இருந்தார்கள். கணவர், குழந்தைகளுக்காக டோனியை ரசிக்கத் தொடங்கிய முதல் தலைமுறைப் பெண்கள் இருந்தார்கள். இப்படி சமூக, பொருளாதாரக் கட்டமைப்பின் அனைத்து மட்டங்களில் இருந்தவர்களும் பாரபட்சமின்றி 'டோனி' மந்திரத்தை உச்சரித்தார்கள். இத்தனை இலட்சம் இதயங்களும் டோனிமீது காதலில் விழக் காரணங்கள் இல்லாமலில்லை.

வெற்றிக்காக ஓடி ஓடிக் களைத்துச் சோர்ந்து, 'வாழ்க்கை இப்படியே போயிடுமா ?' என சலிப்பில் உழலும் எத்தனையோ உள்ளங்களுக்கு, 'இல்லை. இறுதிநொடியில்கூட நிகழும் ஒரு மாயம். ஆட்டம் உனக்கானதாக மாறும்' எனப் பாடமெடுக்கிறது அவர் தலைமையிலான அணி. வற்சன், ராயுடு, மொயின், தூபே, ரஹானே ஆகியோரின் வழியே, 'புறக்கணிப்பே முற்றுப்புள்ளியில்லை. இரண்டாம் வாய்ப்பில் ஒளிந்திருக்கிறது ஒரு மாபெரும் தொடக்கம்' என்கிற உண்மையைக் கண்டடைகிறார்கள் இளைஞர்கள்.

டோனி ஒரு நினைவுகளின் தொகுப்பு. 2007 உலகக்கிண்ண வெற்றியின்போது பள்ளியில், 2011 வெற்றியின்போது கல்லூரியில், 2013 சம்பியன்ஸ் கிண்ண வெற்றியின்போது வீட்டில், 2018 ஐ.பி.எல் வெற்றியின்போது பரிச்சயமில்லாத நாடோடிகளோடு மேற்குத் தொடர்ச்சி மலையின் ஓர் இடுக்கில், 2021 வெற்றியின்போது அலுவலகத்தில் என இடமும் களமும் மாறிக்கொண்டே இருந்திருக்கிறது. யோசித்துப் பார்த்தால், கிரிக்கெட் பார்க்கச் சொல்லிக்கொடுத்த பின் வரும் முதல் வெற்றி என்பதால் 2007இல் உடனிருந்து கொண்டாடிய அப்பா, அதுநாள் வரையில் அதிகம் பேசாமலிருந்து 2011 வெற்றிக்குப் பின் வெடித்து அழுத கல்லூரிக்கால பியூன், 2018-ன் வெற்றியின்போது உடனிருந்து இப்போது இல்லாமலேயே போய்விட்ட நண்பன் என எண்ணற்ற முகங்கள் இன்று நினைவுக்கு வருகின்றன. உங்களுக்கும் வரலாம். டோனி நமக்குப் பரிசளித்திருப்பது இப்படியான அழிக்க முடியாத நினைவுகளையும் அவற்றில் என்றென்றைக்குமாய் உலவும் மனிதர்களையும்தான். பழுத்த மரத்தின் இலைகளில் ரேகைகள் வேறுபடலாம். மூலம் ஒன்றுதானே!

மனிதர்கள் அந்தந்த நேரத்து ஆச்சர்யங்கள் மட்டுமல்ல, அவஸ்தைகளும்கூட! முன்னெப்போதோ எழுதியதுதான். பிடித்தமானவர்களுக்கு இறுதி விடைகொடுப்பதைவிட இயலாத விஷயம் என்ன இருக்கிறது மனித மனதிற்கு? தனக்குப் பிடித்த தலைவனுக்கு விடைகொடுக்க முடியாமல் அவஸ்தைப்படுகிறது இதே கூட்டம். பஞ்சாப் உடனான போட்டியில் இறுதிப்பந்தில் நிகழ்ந்த தோல்வியை எதிர்கொள்ளமுடியாமல் அப்படியே உறைந்துபோய் நின்ற 32,000 உயிர்கள் சாட்சி. இறுதிப்போட்டியில் டக் அவுட்டான பின் நொறுங்கிய நெஞ்சங்கள் சாட்சி. முன்னது, வெற்றியோடு வழியனுப்ப வேண்டுமே என்கிற ஆதங்கம். பின்னது, வெற்றியே ஆனாலும் இனி களத்தில் காணமுடியாதோ என்கிற ஏக்கம். மனித மனம் விந்தையானது!

களத்தில் சட்சட்டென பீல்டிங்கை மாற்றுவது, சடாரென ஒரு சிக்ஸர் அடிப்பது, சடுதியில் ஒரு ஸ்ரொம்பிங் செய்வது (இறுதிப்போட்டியில் அவர் செய்த ஸ்ரொம்பிங்தான் அவரின் தொழில் வாழ்வில் சிறந்தது எனலாம்) என நம்மட்டில் டோனி இன்னமும் சிங்கம்தான். ஆனால், அவர்மட்டில் வாழ்க்கை ஒரு முழுவட்டம் போய்வந்துவிட்டது. ரன் அவுட்டில் தொடங்கி ரன் அவுட்டிலேயே முடிந்த சர்வதேச பயணம் போல கோப்பையில் தொடங்கி கோப்பையிலேயே முடிந்திருந்திருக்கிறது அவரின் கிரிக்கெட் வாழ்க்கை. வென்றதற்குப் பின்னான அந்தக் கண்ணீரும் தழுவலும் 2019இல் கைவிட்டுப்போன கோப்பைக்கும் சேர்த்ததாய் இருக்கக்கூடும் என்றே தோன்றுகிறது. **'One Last Dance'** என்கிற விளையாட்டுலகின் பெருமைமிகு பதத்தை அவரும் ஆடிமுடித்துவிட்டார். செல்லும் வழியெங்கும் மைதானமெங்கும் நாமும் கூடி இதுவரை நிகழாத விடைகொடுத்தலை 2019இல் முடிந்த சர்வதேசப் பயணத்துக்கும் சேர்த்தே நிகழ்த்தியாகிவிட்டது.

காரக்பூரின் புழுதி படிந்த ஸ்டேஷனில் தன் கனவைத் துரத்தத் தொடங்கியவருக்கு அதே ரயிலை வைத்து முடிவுரை எழுதுவதுதானே பொருத்தமாய் இருக்க முடியும். டோனி அடுத்த தொடரில் ஆடுவாரா இல்லையா என எதுவும் நிச்சயமில்லை. ரயிலின் யன்னலோர இருக்கை நமக்காகப் பொதித்து வைத்திருக்கும் ஆச்சர்யம் அது. ஆனால் அதே ரயில் அடுத்த முறை ஒரு கானகத்தைக் கடக்கும். வளமும் செழிப்புமாய் ஓங்கி நிற்கும் அந்தக் காட்டை தன் ஊன் கொண்டு உருவாக்கிவிட்டு ஒரு மூலையில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும், அதே கானகத்தின் மூத்த குடியான யானை. நினைவில் காடுள்ள அக்களிற்றின் இருப்பிலேயே என்றென்றும் தழைத்திருக்கும் அப்பரப்பு. கிரிக்கெட் எனும் காட்டைப் பொறுத்த மட்டில் டோனிதான் அந்த யானை. மாமத யானை!



# கனடாவில் நடந்த தமிழ் இலக்கியத்தோட்டத்தின் இயல் விருது விழா









ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் சிறந்த தமிழ் இலக்கிய சேவையாளர் எனக்கருதும் ஒரு வருக்கு, 'இயல் விருது" எனும் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப் பினால் வழங்கப்படுகிறது.

இம்முறை இந்த விருது விழா கனடா டொரன் டோவில் The Estate Banquet and Event Centre மண்டபத்தில் கடந்த 04 ஆம் திகதி நடந்தது.

பெருந்திரளானோர் கலந்து கொண்ட இவ்விழாவில் பிரதம விருந்தினராக தமிழ் இலக்கிய ஆர்வலர் அறிஞர் தோமஸ் ஹிடோஷி ப்ருக்ஸ்மாவும், பிரபல எழுத்தாளரும் நாவலா சிரியையுமான கிம் எச்லினும் விசேட விருந்தினராக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங் கரியும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பின் தலைவர் சட்டத்த ரணி மனுவேல் ஜேசுதாசன், காப்பாளர் அருட்திரு சந்திர சாசன் ஆகியோரின் உரைகளை யடுத்து விருதாளர்கள் பற்றிய அறிமுகத்துடன் விருதுகள் வழங் கப்பட்டன.

2022 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருதினை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இலக்கிய படைப்பாளியும் தற்போது அவுஸ்திரேலியாவில் வதிபவருமான எழுத்தாளர் லெ. முருகபூபதியும், இந்தி யாவில் பெங்களூரில் வதியும் பிரபல எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர் பாவண்ணனும் பெற்றார்கள்.

புனைவு எழுத்துக்கான விருது 'மன்னார் பொழுதுகள்" நாவல் எழுதிய வேல்முருகன் இளங்கோவுக்கும் அபுனைவு விருதுக்கு 'மூவந்தியில் சூலுறும் மர்மம்" என்ற படைப்புக்காக சாம்ராஜூக்கும், கவிதைக்கான விருது கவிஞர் சுகிர்தரா ணிக்கும், இலக்கிய ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கான விருது எழுத்தாளர் சிவசங்கரிக்கும் இலக்கியச் சாதனைக்கான விருது கனடாவிலிருந்து நீண்டகாலமாக பதிவுகள் இணைய இதழை நடத்திவரும் வ.ந.கிரிதரனுக்கும் வழங்கப்பட்டது.

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ். சஞ்சித், உவர்மலை, திருகோணமலை.**

**கேள்வி:** இலங்கை தமிழரசு கட்சிக்குள் தடாலடியாக சில மாற்றங்களை அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் மேற்கொண்டுள் ளார். அவசரமாக அர சியல் குழு கூட்டத்தை கூட்டிய அவர், திருகோணமலை மாவட்டத்துக்கென நியமித்த தனது பிரத்தியேக இணைப் பாளரையும் மாற்றியுள்ளாரே. அவருக்கு திடீரென்று என்ன நடந்திருக்கும்?

**வியுக்தியார்:** இன்னமும் அது ஏன் என்று அறிய முடியவில்லை. கட்சிக்குள் ஒருவரை பலரின் விருப்பத் திற்கும் மாறாக கனடாவிலிருந்து இறக்குமதி செய்து, தனக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து அழகுபார்த்தவர் சம்பந்தன். ஆனால் உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர் தெரிவின்போது தனது சிபார்சுகளை அவர் கண்டுகொள்ள வில்லை என்பது ஐயாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக் கும் என்பதும் தெரிந்ததுதான். ஆனால் இத்தனை நாட்க ளாக அமைதியாக இருந்த சம்பந்தன் ஐயா, ஏன் திடீரென்று பொங்கி எழுந்தார் என்பதுதான் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரிகின்றது. அடுத்த தேர்தல் ஒன்றை சம்பந்தன் ஐயா எதிர்கொண்டால், அந்தத் தேர்தலில் கனடாவிலிருந்து வந்து அரசியல் செய்யும் அவரது பழைய பிரத்தியேக இணைப்பாளருக்கு சீட் கிடைக்குமோ தெரியவில்லை. அதுவல்ல இங்கே முக்கியமானது, அவர் பாவம் அம்புதான். எய்தவரை ஏன் சம்பந்தன் இன்னமும் விட்டுவைத்திருக்கிறார் என்பதுதான் தெரியவில்லை.

**கேள்வி:** மருதங்கேணியில் விளையாட்டுக்கழகத்தி னரை சந்திப்பதற்காக சென்றிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், துப்பாக்கியைக் காட்டி பொலிசார் தன்னை அச்சுறுத் தியதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அதுதொடர்பான காணொளிக்காட்சிகளும் சமூகவலைத்தளங்களில் வலம் வந்தன. ஆனால் அந்தக் கட்சிகளைப் பார்த்தபோது கஜேந்திரகுமார் தனது கண்ணியத்தை காத்திருக்க லாமோ என்று எண்ணத் தோன்றியது. ஆனால் அதற் குப்பின்னர் அவரை பாராளுமன்றம் சென்றபோது கைதுசெய்து கிளிநொச்சிக்கு ஒரு குற்றவாளியைப்போல கொண்டுவந்தது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.?

**வியுக்தியார்:** கடந்த இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு, முதல்முதலாக வடக்கு மாகாணசபைக்கு தேர் தல் நடைபெற்றபோது வேட்பாளராக களம் இறங்கிய அனந்தி சசீதரன் வீட்டுக்குச்சென்ற ராணுவத்தினர் அவரை அச்சுறுத்தியது உங்களுக்கு ஞாபகம் இருக்க லாம். அந்த சம்பவமே அவரை பல ஆயிரம் வாக்குகள் பெற்று வெற்றியடைய் செய்தது. தாம் அப்படி நடந்து கொண்டால் அவர் பிரபல்யமடைவார் என்பது படையி னருக்கு தெரியாததல்ல. ஆனாலும் அவர்கள் அப்படிச் செய்தது எதற்காக என்பது ஒரு சிலருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. அவர் பிரபல்யமடைய வேண்டும் வெற் றியடைய வேண்டும் என்று படையினர் விரும் பியிருந்தார்களோ தெரிய வில்லை. அந்தச் சம்பவம் தான் இப்போது கஜேந்திரகுமார் கைதுசெய்யப்பட்ட போது இந்த வியுக்தியாருக்கு ஞாபகத்திற்கு வந்தது. அதற்காக பொலிசார் வேண்டும் என்று செய்ததாக அல்ல. அவருக்கு பிரபல்யத்தை தேடித்தந்திருக்கின்றது என்றேன்.

---

**கே. கிருசாந்தன், நவாலி, மானிப்பாய்.**

**கேள்வி:** எரிபொருள் விற்பனையை முன்னனர் அரச நிறுவனமான பெற்றோலிய கூட்டுத்தாபனம் மாத்தி ரமே செய்துவந்தது. பின்னர் எரிபொருள் விற்பனையில் இந்திய ஐஓசி நிறுவனம் ஈடுபடத் தொடங்கியது. இப் போது சினாவின் சீனாபெக் நிறுவனமும் அமெரிக்கா வின் செல் நிறுவனமும் ஈடபடவிருக்கின்றன. இந்த நிறு வனங்கள் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங் கியதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூறப் படுகின்றதே. அவர்கள் வந்தால் தட்டுப்பாடு இல்லாமல் கொடுக்கமுடியும் எனில் ஏன் நமது பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் அதனைக் கொடுக்கமுடியாது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே உங்களுக்காவது புரிந்ததா?

**வியுக்தியார்:** இதில் புரிவதற்கு என்ன இருக்கின்றது. அவர்கள் தனியார் நிறுவனங்கள். வர்த்தகத்தில் ஈடுபடு வார்கள். சரியாக செய்யாவிட்டால் நஷ்டமடைய வேண்டிவந்துவிடும். ஆனால் நமது பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் ஊழல் இல்லாமல் விசயம் எதுவும் நடக்காது அல்லவா? அதனை திருத்தமுடியாது என்ற முழு நம்பிக்கை அரசுக்கு இருப்பதால்தானே அதனை தனியாரிடம் ஒப்படைக்கின்றார்கள். இனி என்ன நாட் டில் முக்கிய வர்த்தகமான எரிபொருள் வர்த்தகத்தால் மக்களிடம் சுரண்டப்படும் பணமும் வெளிநாடுகளுக்கு செல்லப்போகின்றது அவ்வளவுதான்.

---

**த. காண்டீபன், இருபாலை, கோப்பாய்**

**கேள்வி:** தமிழரசு கட்சியின் அரசியல் குழு கூட்டம் அண்மையில் சம்பந்தனின் இல்லத்தில் அவரின் அழைப் பின் பேரில் நடைபெற்றது.

கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி பூசல்கள், தலைமைக் கான போட்டி என்பவை தொடர்பில் ஆராயப்படும் என்ற எதிர்பார்ப்புடன் நடந்த இந்தக் கூட்டம் வெறும் தமிழரசு கட்சியின் வரலாறை மட்டும் நினைவு கூர்ந்ததுடன் நிறைவடைந்திருக்கின்றதாமே?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமல்ல, கட்சியிலுள்ள பலருக்கு தமிழரசு கட்சியின் வரலாறே தெரியவில்லை என்பது சம்பந்தன் ஐயாவுக்கு இப்போதுதான் தெரிய வந்திருக்கின்றது போலும். அதுதான் அவர் முதலில் வரலாற்றைச் சொல்லி அனுப்பியிருக்கிறார். இனி மேலாவது கோஷ்டிப் புசல், தலைமைத்துவப்போட்டி என்பது இருக்காது என்று நினைக்கின்றார் போலும். தமிழரசின் வரலாற்றில், செல்வநாயகம் இருக்கும்வரை அவர் நினைத்ததுதான் நடந்தது. இப்போது தான் நினைப்பதுதான் நடக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ?

---

**ரி. பரமசிவன், கிளிநொச்சி.**

**கேள்வி:** வடக்கு கிழக்கு மாகாணசபைகளில் இடைக் கால நிர்வாக சபைகளை அமைப்பது என்ற தனது யோச னைக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பாக பிரதமரிடமி ருந்து சாதகமான சமிக்ஞை கிடைத்திருப்பதாக தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரும் யாழ். மாவட்ட எம். பி.யுமான சிவி விக்கினேஸ்வரன் தெரிவித்திருக்கிறாரே. அது நல்ல யோசனை தானே?

**வியுக்தியார்:** முதலில் அது இடைக்கால நிர்வாக சபை என்பது ஒரு மாயை. அது வெறும் ஆலோசனைச் சபை மாத்திரமே. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின்படி மாகாணசைப ஒன்று இயங்க முடியாத நிலை ஏற்பட்டால் அதனை ஒரு ஆலாசனை சபை ஒன்றை நியமித்து ஆட்சிசெய்யலாம். ஆனால் ஒட்டுமொத்த தமிழ் கட்சிகளும் மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து வரும் இவ்வேளையில், இப்படியொரு யோசனையை முன்வைத்ததன் மூலம் விக்கினேஸ்வரன் ஐயா, ரணில் அரசுக்கு உதவியிருக்கிறார் என்றே தெரி கின்றது. அதாவது தேர்தலை ஒத்திப்போடுவதற்கு.

# பாடம்


**கே.எஸ்.சுதாகர்**

சூரியகுமாருக்கு நாளை காலை பத்திற்கும் பன்னிரண்டுக்கும் இடைப்பட்ட சுப வேளையில் திருமண எழுத்து நடைபெற இருந்தது.

சூரியகுமாரின் அக்காவும் அத்தானும் மகள் ஆரபியும் நான்கு நாட்கள் முன்பதாகவே வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அக்கா தான் வீட்டிற்கு மூத்தவள். அதற்கடுத்து வரிசைக்கிரமமாக ஐந்து ஆண்கள். சூரியகுமார் கடைக்குட்டி.

அப்பா துரை சாய்வனைக்கதிரைக்குள் ஒருக்களித்துச் சரிந்தபடி எல்லாவற்றையும் அவதானித்தபடி இருக்கின்றார். அவரால் முன்னையைப்போல ஓடியாடி வேலைகள் செய்ய முடிவதில்லை. அவர் தனது மகளுக்கும், மூத்த மருமகளுக்கும் துரோகம் இழைத்துவிட்டதாக நினைத்து இன்று மனம் மறுகுகின்றார். மூத்தவள் இன்று எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாகக் கணவருடன் குடும்பம் நடத்துகின்றாள் என எண்ணுகின்றார்.

மறந்துவிடக்கூடிய சாதாரண நிகழ்வா அது! அவரின் மனம் அங்கே தாவுகின்றது.



பள்ளியால் வந்த மகள் புத்தகப்பொதியைத் தொப்பென்று போட்டுவிட்டு, வீட்டு வளவிற்குள் வேலிக்கரையோரமாக ஓடுகின்றாள். அவளது அவசரத்தை அவதானித்த அப்பா, வீட்டைவிட்டு வெளியேறி வீதிக்கு வந்து எட்டிப் பார்க்கின்றார். வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் கிடுகுவேலியுடன் கதை பேசியபடி நிற்கின்றான். துரையைக் கண்டவுடன் வேலிக் குள் எதையோ மறைத்துவிட்டு மாயமாக அந்த இடத்தைவிட்டு நழுவிவிட்டான். வேலிக்குள் சொருகியிருந்த கடிதத்தை எடுத்து வந்தார் துரை. மகளைக் கூப்பிட்டார்.

“இதை முற்றத்திலை போட்டு என் கண் முன்னாலே எரி” தீப்பெட்டியை நீட்டினார் அப்பா. கடிதத்தில் என்ன எழுதப் பட்டிருக்கின்றது என்பதை அவளும் அறியாள், அப்பாவும் அறியார்.

அத்துடன் மகளின் படிப்பு இடையில் நின்று போயிற்று. பதிலுக்கு திருமணம் என்ற பேச்சு ஆரம்பித்தது.

மகளுக்கு அழகிருந்தும் சீதனம் போதாமையால், திருமணம் பல வருடங்கள் தள்ளிப் போயிற்று. கடைசியில் அவளைப் போலவே வயதில் முதிர்ந்த ஒரு இராஜகுமாரன் வந்து கரம் பிடித்தார். அவர் சீதனமாகக் கேட்டது ஐம்பதினாயிரம். ஆனால் அது இன்னமும் நிலுவையில் இருக்கின்றது.

துரை நிறைஞ்ச சைவ பக்தர். சரியான கோபக்காரன் என்று ஊரில் பெயர் எடுத்தவர். எந்தத் தெய்வங்களினாலும் தணிய வைக்கப்படாத கோபம், மனைவியின் கட்டுக்குள் அடங்குமா? அவருக்கு அடங்கிப் போவதைத் தவிர மனைவி பார்வதிக்கு வேறு வழி தெரியவில்லை.

ஆனால் மூத்த மகனின் விடயத்தில் எல்லாமே தலைகீழாகிப் போனது. அவனின் செயலால் குடும்பமே ஆட்டம் கண்டிருந்தது. ஆனந்தகுமார் படிக்கவுமில்லை, பண்பாக நடந்து கொள்ளவும் இல்லை என்பார் அப்பா.

தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றுகொண்டிருந்த ஆனந்தகுமாருக்கும், பள்ளியில் படிப்பிக்கச் சென்றுகொண்டிருந்த மேரிக்கும் ஹஅது’ என்று காத்துவாக்கில் விழ ஆரம்பித்ததும், அப்பா துரை ஆடிப்போனார். தான் ஒரு ஆண்டியாகப் போய்விட்டதாக உணர்ந்தார்.

மருமகள் வேதம். அது அவருக்குப் பிறகுதான் தெரிய வந்தது. தெரியவந்தபோது கோபம் தலைக்கேறி, போக வழி தெரியாமல் வாய் வழியே பிதுங்க, தேவாரம் எல்லாம் தூஷணமாக வந்து விழுந்தது.

அதிகாலையில் ஐந்து மணிக்கு விழித்தெழுந்து, ஸ்நானம் செய்து, முற்றத்தில் பூக்கள் கொய்து, சுவாமிக்கு முன்னால் நின்றார் என்றால் தேவாரங்கள் ஆற்றொழுக்காகப் பாய்ந்து வரும். சமீப காலங்களாக அவரது தேவாரத்தின் சுருதி கூடிக் குறைவதை நித்திரைத் தூக்கத்திலும் அவதானித்து வந்தான் சூரியகுமார். ஒருநாள் விழித்திருந்து பார்த்தபோது, தந்தையார் தேவாரங்களைப் பாடியபடியே பிள்ளைகளின் சட்டை கழிசான் பொக்கற்றுகளைச் சல்லடை போடுவதைக் கண்டுகொண்டான். தினமும் துரை பொக்கற்றுகளைச் சல்லடை போடுவதும், சூரியகுமார் கண்ணை இடுக்கி இடுக்கிப் பார்ப்பதும் ஒரு ஹகேம்’ போலாகிவிட்டது. ஒருநாள் ஆனந்தகுமாரின் சட்டைப் பொக்கற்றுக்குள்ளிருந்து ஒரு புதையலைக் கண்டெடுத்த அப்பா, அதையே உற்றுப் பார்ப்பதைக் கண்டுகொண்டான் சூரியகுமார். அவர் பார்த்துவிட்டு வைத்துவிட்டுப் போனதும் சூரியகுமாருக்கும் அதைப் பார்க்கவேண்டும் போல ஒரு ஆசை வந்தது. அது ஒரு பெண்ணின் படம். அதுவே மேரி என்று அவன் மனம் சொன்னது. சேலையில் அழகான பதுமையாக இளவயதில் எடுத்த புகைப்படம் அது.

துரையின் கடும் பிடிவாதத்தால் ஆனந்தகுமாரும் மேரியும் தங்கள் பாட்டில் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள். மேரியின் பெற்றோருக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், அவர்கள் இருவரையும் அரவணைத்துக் கொண்டார்கள்.

மூன்று வருடங்களாக கடும்பிடியாக நடந்துகொண்ட துரை, ஆனந்தகுமாரையும் மனைவியையும் வீட்டிற்குள் நுழையவே விடவில்லை. தூது வந்தவர்கள் எல்லாரையும் தூரத்திலே வைத்துக் கொண்டார்.

துரைக்கு துப்பி விளையாடுற பழக்கமொண்டு உண்டு. பொழிச்செண்டு எதையும் பாராமல், எவரையும் வஞ்சனை இல்லாமல் காறாப்பிச்சு சிங்காரித்து விடுவார். அப்படித்தான் ஆனந்தகுமார், தனது மனைவியுடன் முதன் முதலாக வீட்டிற்கு வந்து அவர்களின் இரும்புக்கதவைத் தட்டியபோது, கதவைத் திறந்த துரை மருமகள் மீது பொழிச்சென்று துப்பினார். வேணுமெண்டு செய்தாரோ, தெரியாமல் தான் செய்தாரோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். இந்த ஜல அபிஷேகத்தின் மகிமை தெரிந்தோ என்னவோ மனைவியை முன்னிறுத்தி தான் பின்னாலே ஒளிந்துகொண்டான் ஆனந்தகுமார். அப்பா அம்மாவுக்கு விருப்பமில்லாமல் நடந்த கலியாணம் என்பதால் ஏற்பட்ட பயம் காரணமாக, தன்னை முன்னே தள்ளிவிட்டு பின்னாலே கணவன் ஒளிந்து கொண்டான் என மேரி நினைத்துக் கொண்டாள்.

துரைக்கு மருமகளைப் பார்த்த மாத்திரத்தில் முதலில் குதிரை தான் நினைவுக்கு வந்தது. அதற்குக் காரணம் மருமகளின் பின் தலையிலே இறுக வரிந்து தொங்கிய குதிரைவால் குஞ்சம்.

“நான் அவனைப் படியடா எண்டு சொல்லி ரியூசனுக்குக் காசைக் குடுத்தா, அவன் சினிமா பாத்து குடியும் கூத்துமா திரிஞ்சான். இப்ப ஃபக்டரியிலை பரிசுகெட்ட லேபர் வேலை செய்யுறான்.

அவன் தான் அப்பிடி எண்டா, உமக்கு எங்கை மூளை போச்சு. நீர் ஒரு ரீச்சர் பெம்பிளையல்லே! நீ ஒரு ஆள்மயக்கி.”

‘ஆள்மயக்கி’ என்றதும் மேரி திகைத்துப் போனாள். ஹமாமா’ என்று வாயெடுக்கும் முன்னர்,

“நான் உங்கள் இரண்டு பேரையும் வீட்டுக்குள்ளை எடுக்க மாட்டன்”

இரும்புக் கேற்றை அடித்துச் சாத்தினார் துரை. உள்ளுக்கு நின்றபடியே, “அங்குசம் இல்லாத யானையும் கடி வாளம் இல்லாத குதிரையும் அடங்காது” என மருமகளுக்குக் கேட்கும் வண்ணம் சொன்னார்.

காலத்துடன், மூத்தவன் போன வழியில் அடுத்தவர்களும் போனார்கள். முதல் கோணல் முற்றிலும் கோணலானது. மூத்தவன் மீது கடும் கோபம் கொண்டிருந்த துரை, அவர்கள் வீட்டில் நடந்த எந்தவொரு காரியத்திற்கும் ஆனந்தகுமாரைத் தள்ளியே வைத்தார்.

ஒவ்வொரு திருமணத்தின் போதும் மூத்தவள் வந்து ஹதனது ஐம்பதினாயிரத்தையும் தரவில்லையே’ என மூக்கால் சிணுங்கிவிட்டுச் செல்வார்.

ஒரு தடவை வரும்போது, “இது போக்கிரித்தனமான செயல். இவ்வளவு காலமும் பேக்காட்டக்கூடாது” என அத்தான் புறுபுறுத்தார். மருமகன் தன்னைப் போக்கிரி என்று சொல்லிவிட்டதாக மனம் குமுறிக்கொண்டு திரிந்தார் துரை. அது முதற்கொண்டு அவர் மருமகனுடன் முகம் குடுத்தும் பேசுவதில்லை.

“நல்ல காலம் - மருமகன் நல்லவர் எண்டபடியாலை இவ்வளவு காலமும் பொறுத்துக் கொண்டிருக்கிறார். இல்லாட்டி இம்மட்டுக்கு மகளைக் கொண்டுவந்து தள்ளிவிட்டுப் போயிருப்பார்” என்பார் பார்வதி.

எல்லாம் ஒரு புள்ளியில் முடியத்தானே வேண்டும். முடித்து வைக்க ஒரு பேத்தி பிறந்தாள்.

ஆனந்தகுமாரும் மேரியும் குழந்தையுடன் வந்து நிற்கின்றார்கள் என அறிந்ததும், துரை பின் வளவிற்குள் ஓடிப் போய் விட்டார். சும்மா நின்ற மாமரம் ஒன்றிற்கு நீர் இறைக்கத் தொடங்கிவிட்டார். பார்வதி அப்போதுதான் தனது மருமகளை முதன்முறையாகப் பார்க்கின்றார். நிமிர்ந்துதான் பார்க்கவேண்டியிருந்தது. ஆசிரியருக்குரித்தான மிடுக்கான தோற்றம். ‘பொல்லாதவராக இருப்பாளோ? என்ன இருந்தாலும் ஹோம்ஸ்சயன்ஸ் ரீச்சர் தானே!’ மனதிற்குள் எண்ணிக் கொண்டார்.

குழந்தையை வாங்கிக் கொஞ்சிவிட்டு, “என்ன பெயர்?” என்று கேட்க “கௌசி மாமி” எனப் பதில் தந்தார்.

“அப்பப்பா பின் வளவுக்குள்ளைதான் நிக்கிறார். அவரிட்டையும் ஒருக்காக் குழந்தையைக் காட்டும்.”

மருமகள் பின் வளவிற்குள் தயங்கித் தயங்கிப் போனார்.

“மாமா குழந்தையைப் பாருங்கோ ” துப்பல் விழாத தூரத்தில் நின்றாள் மேரி.

அவர் வேண்டா வெறுப்பாக முகத்தை வேறுபுறம் திருப்பி ஒரு மூசு மூசினார். மருமகள் குழந்தையைக் கிள்ளிவிட அது வீறிட்டு அழுதது. கல்லினைக் கரைக்கும் குரலுக்கு உருகாதோர் யாருமுண்டோ? அவர் ஓடிவந்து குழந்தையை வாங்கி நெஞ்சினில் சரித்துக் கொண்டார். மயிர்க்கால்கள் கீச்சுமூட்ட, குழந்தையின் பன்னீர் சூடாக அவர் மார்பில் இறங்கியது. அத்தனை வருடப் பகை அந்தப் பன்னீரின் வாசனையில் கரைந்தது.

இன்று ஆனந்தகுமார் தம்பதியினருக்கு பெண்ணும் ஆணுமாக இரண்டு பிள்ளைகள் பிறந்துவிட்டார்கள்.

வார இறுதி வந்துவிட்டால் சூரியகுமார், ஆனந்தகுமார் வீட்டுக்குப் போய் விடுவான். இரண்டு குழந்தைகளிலும் அவனுக்குக் கொள்ளை ஆசை. எந்த நேரமும் அவர்களுடன் விளையாடியபடியே இருப்பான். பின் வளவிற்குள் மாமரத்தில் தொங்கும் ஊஞ்சலில் குழந்தைகளை இருத்தி ஆட்டி விடுவான். அண்ணி - அண்ணி - என்று தேன் ஒழுகக் கூப்பிடுவதும், மச்சான் என்று பாச மழை பொழிவதிலும் வீடு கலகலத்துப் போய்க் கிடக்கும்.

ஆனந்தகுமார் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஓமானிற்கு வேலைக்குப் போன பிற்பாடு, அடுகிடை படுகிடையாக அவர்கள் வீட்டில் ஒட்டிக்கொண்டான் சூரியகுமார். அண்ணியின் சாப்பாட்டில் ஒரு சுற்றுப் பெருத்தும் விட்டான்.

இப்போது சூரியகுமாருக்குக் கலியாணம்.

“தம்பியின்ரை கலியாண எழுத்துக்கு நானும் வரப்போறன்” என்றான் ஓமானில் இருந்து ஆனந்தகுமார்.

“உங்களுக்கென்ன விசர் பிடிச்சுப் போயிட்டுதா? எவ்வளவு கடன் பட்டு உங்களை ஓமானுக்கு அனுப்பி வைச்சிருக்கிறன். பிறகு தம்பியின்ரை கலியாணவீட்டுக்கு வாருங்கோ - நான் இஞ்சை என்னத்துக்கு இருக்கிறன். நான் போவன் தானே!” என்றாள் மேரி.

“ஏன் நானும் வந்தா நல்லா இருக்குமெண்டு”

“ஏன் உங்கடை கடைசித்தம்பி செல்லத்தம்பி சூரியகுமாரும் எங்கடை கலியாணத்தை எதிர்த்தவன் தானே! அதை மறந்து போனியளோ?”

“அப்ப அவனுக்கு ஒரு பத்துப் பன்னிரண்டு வயது இருக்கும். அவன் அப்பா அம்மாவின்ரை சொல்லுத்தானே கேட்டு நடப்பான். அக்காவின்ரை சீதனக்காசு குடுபடாமல், அவா மூக்காலை அழுது கொண்டிருந்தா அவன் என்ன செய்வான்?”

சரி- அடுத்தமுறை வரேக்கை பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு வாரும். அதுகளின்ரை குரலைக் கேட்கவும் ஆசையாக் கிடக்கு.”

“நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ- நாங்கள் எல்லாரும் தம்பியின்ரை கலியாண எழுத்தை நல்ல சிறப்பாக நடத்தி முடிப்பம். நான் தானே கலியாண எழுத்துக்கு கேக் செய்யப்போறன்.”

“ஒகோ- ஹோம்சயன்ஸ் ரீச்சரின்ரை திறமையை ஊருக்குக் காட்டப் போறீர் போல.”

அவர்களின் தொலைபேசி உரையாடல் முடிந்தது.

“அம்மா - அண்ணி வீட்டை கேக் எடுக்கப் போறன்.”

“அவா நாளைக்கு வரேக்கை கொண்டு வருவா தானே!”

“இனி எத்தினை மணிக்கு வாறாவோ தெரியாது. சைக்கிளிலை தான் வருவா. இரண்டு பிள்ளையளோடை அவாவுக்கு கஸ்டத்தை ஏன் குடுப்பான். அதுகள் கேக்கை கவனமா சைக்கிளிலை வைச்சுக் கொண்டு இருக்காதுகள்.”

“விடிஞ்சாக் கலியாண எழுத்து. எனக்கெண்டா நீ வெளியிலை போறது விருப்பம் இல்லை. ஆரையாவது துணைக்குக் கூட்டிக் கொண்டு போ.”

சூரியகுமார் அக்காவின் மகள் ஆரபியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். இந்தத் தடவை அக்காவின் முகம் புன்சிரிப்பால் விரிந்திருந்தது. சுளையாக சீதனக்காசு கிடைக்கவிருக்கின்றது.

சூரியகுமார் அண்ணியின் வீட்டிற்குச் சென்றபோது, அவர் குசினிக்குள் சமைத்துக் கொண்டிருந்தார். பிள்ளைகள் வளவிற்குள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

“அண்ணி - நான் கேக் எடுக்க வந்திருக்கிறன்.”

“இன்னும் கொஞ்சம் டெக்கறேஷன் இருக்கு. ஒரு மணித்தியாலம் போதும். முடிச்சிட்டுத் தாறன்.”

“அண்ணி - எனக்கு நிறைய வேலையள் இருக்கு. நீங்கள் நாளைக்கு வரேக்கை கொண்டு வாருங்கோவன்.”

“நான் நாளைக்கு வருவன் எண்டு சொல்லவில்லையே!”

மேரி, சூரியகுமார் மீது வெடியைக் கொழுத்திப் போட்டார். அக்காவின் மகள் ஆரபி பேயடித்தது போல ஏங்கி நின்றாள்.

“என்ன? நீங்கள் நாளைக்கு கலியாண எழுத்துக்கு வரமாட்டியளா?”

“இல்லை.”

“ஏன் அண்ணி?”

மேரி ஒன்றும் சொல்லவில்லை. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்தார்கள்.

“என்ரை செல்லத் தம்பியல்லே! கொஞ்ச நேரம் பிள்ளையளைப் பிராக்காட்டிக்கொண்டிரு. நான் டக்கெண்டு முடிச்சிட்டுத் தந்திடுவன்.”

சூரியகுமாருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மூளை கிறுகிறுத்துச் செயலிழந்தது போல இருந்தது. மனம் சிந்தனையில் இருக்க பிள்ளைகளை மாறி மாறி ஊஞ்சலில் வைத்து ஆட்டினான். ஹகேக் வேண்டாம்’ என்று சொல்லிவிட்டுப் போய்விடலாமா? மனம் ஊஞ்சல் போல் ஆடியது.

கேக் றெடியாகிவிட்டது. சூரியகுமார் சைக்கிளில் ஏறிவிட்டான். அண்ணி ஆரபியின் கைகளில் கேக்கைக் குடுத்து, “பத்திரமாகப் பிடிச்சுக் கொள்.” என்றார்.

“சூரி - என்ன கேக் எண்டு பாக்கேல்லை-”

“என்னவெண்டாலும் எனக்குச் சரிதான்-”

“சும்மா பாரன்-”

ஆரபி கேக்கை மெதுவாகத் திறந்து சூரியகுமாருக்குக் காட்டினாள்.

குதிரையின் கால்களுக்குப் போடப்படும் லாடங்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று கொழுவிக் கொண்டு நின்றன.

‘இதுவா றிஜிஸ்ரேஷன் கேக்’ சூரியகுமாரின் மனம் திக்கென்றது. முகத்தைச் சுருக்கிக் கொண்டான். அவனின் முக வேறுபாடுகள் அண்ணியின் முகத்தில் மலர்ச்சியை உண்டு பண்ணியது.

அன்றொருநாள் ஹஆள்மயக்கி’ என்று சொன்னதும், குதிரைக்குக் கடிவாளம் போட்டதும் மேரியின் மனதில் ஆழப் பதிந்து கிடந்தது. ஹகுதிரைக்குக் கடிவாளம் போட்டா மட்டும் போதுமா? அதுக்கொரு லாடம் அடிக்க வேண்டாம்!’ மேரி மனதிற்குள் கறுவிக் கொண்டாள்.

“நான் போட்டு வாறன் அண்ணி. நாளைக்குக் கட்டாயம் வந்திடுங்கோ-” சொல்லிவிட்டு சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான்.

“மாமா- ஒரு கலியாண எழுத்துக்குச் செய்யக்கூடியதாக எத்தனை விதம் விதமான அலங்காரங்கள் இருக்கு. படபடக்கிற வண்ணாத்துப்பூச்சி, அழகழகான பூக்கள், ஹார்ட் ஷேப்- இது என்ன குதிரை லாடம்? எனக்குச் சத்தியமாப் பிடிக்கேல்லை மாமா-” என்றாள் ஆரபி.

‘உறவின் சாட்சியாக இந்தக் குதிரை லாடங்களே இருக்கட்டும்’ நினைத்துக் கொண்டான் சூரியகுமார்.

‘அண்ணி கலியாண எழுத்துக்கு வரமாட்டாவாம். ஆனா றிஜிஸ்ரேசன் கேக் செய்து தருவாவாம். இது என்ன ஒரு புதுவிதமான எதிர்ப்பு?’ சூரியகுமாருக்குப் புரியவில்லை.

வீட்டில் இரவு முழுவதும் மேரியைப் பற்றியே கதையாக இருந்தது.

“அவள் நல்லவள், கெட்டிக்காரி. நான் தான் கொஞ்சம் அப்பிடி இப்பிடியா நடந்து போட்டன்.” அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார் துரை.

காலை ஆறு மணி இருக்கும். வெளித்துவிட்டது. வீட்டிற்கு முன்னால் சைக்கிள் பெல் சத்தம் கேட்கின்றது. அண்ணி நிலத்திலே ஒரு காலை ஊன்றியபடி ஆடாமல் அசையாமல் சைக்கிளில் வீற்றிருக்கின்றார். பின்னாலே கரியரில் சுட்டிப்பையன் அம்மாவின் இடுப்பை இறுக வரிந்தபடி தம் அடக்கி இருக்கின்றான். முன் சைக்கிள் பாரில் இருக்கும் மகளைத் தெரியாதவாறு மூடி மறைத்து அடுக்கடுக்கான கோபுரம் போல எழுந்து நிற்கின்றது கேக்.

# ஆபிரகாம் லிங்கன் முதல் ஜார்ஜ் ஃப்ளாய்டு வரை: அமெரிக்காவில் நீண்டு தொடரும் நிறவெறி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கருப்பின மக்களின் வாழ்வும் - வரலாறும் அமெரிக்காவின் உண்மையான ஜனநாயகம் என்பதனை சோதனைக்கு உட்படுத்தும் விடயமாகும். அமெரிக்க காவல் துறைக்கும், கருப்பினத்தவருக்கும் இடையிலான மோதல்கள் அமெரிக்க சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவியியுள்ள ஆழமான, அமைப்பு ரீதியான இன ஏற்றத்தாழ்வுகளின் அடையாளமாகவும் விளங்குகிறது.

முன்னைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் முதல் 2020 மே இறுதியில் உலகின் கவனத்தை ஈர்த்த "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" பிஎல்எம் ஜார்ஜ் ஃப்ளாய்டு வரை அமெரிக்காவில் தொடரும் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுள்ளது. 3 வருடங்கள் கடந்தும், "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) பிஎல்எம் ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை, ஓயவும் இல்லை.

முதன்முதலாக ஆப்பிரிக்கர்கள் அமெரிக்க நாட்டின் கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்ட 1619-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரையிலான 349 ஆண்டு காலத்தில், கருப்பின மக்கள் தங்கள் முழுமையான குடியுரிமை உரிமைகளை கொள்கையளவில் 1968-ம் ஆண்டுதான் சமத்துவ வீட்டு வசதிச் சட்டத்தின் (Fair Housing act) மூலம் பெற்றனர்.

**2020 மே மாத இறுதியில் அமெரிக்காவில் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுச் சென்ற "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை, மூன்று வருடங்கள் கடந்தும் இப்போரட்டம் இன்னமும் ஓயவும் இல்லை**

**சுட்டுக் கொல்லப்பட்ட ஆபிரகாம் லிங்கன்:**

அமெரிக்காவில் கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான நிறவெறி என்பது பல நூற்றாண்டுகளாக நிலவி வருகிறது என்பதை அந்நாட்டின் வரலாறு தெளிவு படுத்துகிறது.

அமெரிக்காவின் மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களை வந்தேறிகளான ஐரோப்பியர்கள் கூலி வேலை செய்வதற்காக ஆப்பிரிக்காவில் இருந்து கறுப்பின மக்களை அழைத்து வந்து அடிமைகளாக வேலை வாங்கி வந்தனர்.

அமெரிக்க வெள்ளையர்களால் சொல்லொணாக் கொடுமைகளுக்குக் கறுப்பின மக்கள் உள்ளாக்கப்பட்டனர். அதை எதிர்த்து ஆபிரகாம் லிங்கன் (1809 - 1865) குடியரசுத் தலைவரான பிறகு, 1865-ஆம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் 1860ம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரின் தேர்வுக்கு முன் வரை அமெரிக்காவில் அடிமை முறை நீண்ட காலமாக இருந்தது.

கறுப்பினத்தவரை மனிதச்சமூகமாக அங்கீகரிக்காமல் உழைப்புக்காக விற்கப்படும் முறைமையை அமெரிக்கா வைத்திருந்தது.

ஆபிரகாம் லிங்கனின் தலைமையிலான அரசு அடிமை முறையை ஒழிக்க முதன்முறையாக முன்னெடுப்புகளை எடுத்த போது பெரும் கண்டனங்கள் எழுந்தன. இதன் காரணமாகவே ஜான் வில்சு பூத் எனும் வெள்ளையின வெறியனால், லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பிறகு நிறவெறி சற்றுத் தளர்ந்ததே தவிர, முற்றிலும் ஒழிந்து விடவில்லை.

ஆபிரகாம் லிங்கனின் தலையை துளைத்த தோட்டாவுக்கு பின்னால் நிறவெறி ஒடுக்குமுறையின் பாரிய வரலாறு இருக்கிறது. அந்த தோட்டாவை உமிழ்ந்த துப்பாக்கி இன்னும் புகை தணியாமல் இருப்பதற்கு இன்னும் பல சாட்சிகள் அச்சமூகத்தில் நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

**கறுப்பின உரிமைக்காக போராடிய மார்டின் லூதர் கிங்:**

கறுப்பினப் பாதிரியாரான மார்டின் லூதர் கிங் (1929






- 1968) கறுப்பின மக்களின் உரிமைக்காக அறவழியில் போராடினார். அவரும் வெள்ளை அமெரிக்கனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்பின் மால்கம் ஓ (1925 - 1965) எனும் கறுப்பினப் போராளி நிறவெறிக்கு எதிரான மிகத் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தார். அவரும் இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மார்ட்டின் லூதர் கிங் படுகொலை செய்யப்படுவதற்கு சரியாக 7 மாதங்களுக்கு முன்பு, 1967-ம் ஆண்டு வாசிங்டனில் உள்ள அமெரிக்க உளவியல் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பேசிய உரை முக்கியமானது.

அங்கு அவரது உரையில், வெள்ளை அமெரிக்கா தனது ஆன்மாவிலேயே இனவெறியால் நஞ்சூட்டப்பட்டுள்ளதை அது புரிந்துகொள்ள வேண்டும். அந்த புரிதல்கள் கவனமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்றும், கலகங்கள் தான் புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழியாக எழுகிறது என்பது டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் வார்த்தையாக முக்கியத்துவம் பெற்றது.

**கலகங்களே புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழி :**

கலகங்கள்தான் புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழி என்பது டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் வார்த்தை. பகலில் அமைதியாக நடக்கும் அணிவகுப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள், இரவில் மட்டும் ஏன் வன்முறை வெறியாட்டங்களாக, பொதுச் சொத்தை சூறையாடுவதாக இருக்கின்றது என்பதை வெளிக்காட்ட முயற்சிக்கும் மேற்குலக ஊடகங்களில் மார்ட்டின் லூதர் கிங்கின் வார்த்தைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப் படுகின்றன.



**அமெரிக்க இனவெறி இயக்கம்:**

கறுப்பின மக்களை அமெரிக்காவிலிருந்து முற்றிலும் ஒழித்துக்கட்ட வேண்டி, அமெரிக்காவில் தோன்றிய கூ கிளக்ஸ் கான் (Ku Klux Khan - KKK) எனும் வெள்ளை இனவெறி இயக்கம் 1860 ஆம் ஆண்டில் நாதம் பெட் போர்டு பாரஸ்டு என்பவரால் டென்னிசி மாகாணத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது.

அத்துடன் வெள்ளைத் தேசியத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும், நூறு வீதம் 'தூய்மையான" அமெரிக்காவை உருவாக்க வேண்டும் என்பன இந்த நவீன நாஜி இயக்கத்தின் முக்கியக் கொள்கைகளாக இருந்தன.

இந்த வலதுசாரித் தீவிரவாத இயக்கம் தனது நோக்கத்தை நிறைவேற்ற வன்முறையே ஏற்றது என முடிவெடுத்து, கடந்த பல ஆண்டுகளாக எண்ணற்ற கறுப்பின மக்களைப் படுகொலை செய்துள்ளது.

கறுப்பின மக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்துவது, அவர்களது வழிபாட்டிடங்களை நாசப்படுத்துவது, ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் போன்றவற்றை முடக்குவது, அவர்களின் ஓட்டுரிமையைப் பறிக்கும் முயற்சிகளைத் தீவிரமாக முன்னெடுப்பது போன்றவை அவர்களது வழிமுறைகளாக இருந்தது.

கே கே கே இயக்கம், அமெரிக்காவைக் கடந்து கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இப்பொழுது செயல்பட்டு வருகிறது. இதனாலேயே எண்ணற்ற கறுப்பினத் தலைவர்கள், அமெரிக்காவில் நிலவும் வெள்ளையின நிறவெறிக்கு எதிரான தீவிரப் போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர்.

இருப்பினும், 33 கோடி மக்கள் தொகையுள்ள அமெரிக்காவில் 76 வீத வெள்ளை இனத்தவர்கள், 14 வீத கறுப்பு இனத்தவர்கள், ஆசிய நாட்டினர் 6 வீதம், பல்வேறு நாட்டினர் 3 வீதம் எஞ்சியுள்ள 1 வீதம பழங்குடியினர் என்பதான விகிதத்தில் மக்கள் வாழ்வதால், அமெரிக்காவின் மரபணுவிலேயே வெள்ளை இனவெறி ஊன்றிக் கிடக்கிறது.

எனவே கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு, வாழ்விடம், பொதுவெளி என அனைத்துக் கூறுகளிலும் வெள்ளை இனத்தவர்களுக்கும், கறுப்பு இனத்தவர்களுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையேயான வேறுபாடு நிலவுகின்றதை காணலாம்.

**ஜார்ஜ் பிளாய்டு -கறுப்பு உயிர்கள் பொருட்டு:**



அமெரிக்காவின் மின்னபோலிஸ் நகரில் 2020 மே மாதம் 25-ம் தேதி ஆயுதம் ஏதும் வைத்திராத கருப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்ற நபர் போலீஸ் காவலில் இறந்தார். ஃப்ளாய்ட் இறந்த பிறகு, வெள்ளையினத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி டெரக் சாவின் என்பவர் கீழே தள்ளப்பட்ட ஃப்ளாயிட் கழுத்தில் கிட்டத்தட்ட 9 நிமிடங்கள் மிதித்து அழுத்துவதைக் காட்டும் வீடியோ வெளியானது.

இந்தப் பின்னணியில் தான் ஜார்ஜ் பிளாய்டு, நிறவெறிக் காவலர்களால் ஈவு இரக்கமின்றிக் கொல்லப்படும் காணொலியைக் கண்டு உலகெங்குமுள்ள மக்கள் கடுங் கோபத்திற்கு உள்ளாகினர்.

உலகெங்கும் இந்தப் படுகொலைக்கு எதிராக வெள்ளை இனத்தைச் சார்ந்த எண்ணற்றோர் வீதியில் அணிதிரண்டது பெரும் திருப்பு முனையாக அமைந்தது. அமெரிக்காவில் கறுப்பினத்தவராகப் பிறப்பது, கொல்லப்படுவதற்கான தகுதி அல்ல என இப்படுகொலையைக் கண்டித்து மினியோ பொலிசு நகரவைத் தலைவர் ஜேகப் பிரே எனும் வெள்ளையர் கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறவெறிக்கு எதிராக இன மதம் கடந்த போராட்டம் அமெரிக்காவில் குடும்பம் குடும்பமாக குவிந்த மக்கள் ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்ற கருப்பினத்தவர் அமெரிக்காவில் போலீஸ் காவலில் கொல்லப்பட்டதற்கு எதிராக தொடங்கிய போராட்டம் மூலம் நீண்ட காலமாக தொடர்ந்தது.

**கறுப்பு உயிர்கள் பொருட்டு அமைப்பு: (Black Lives Matter)**

தற்போது கறுப்பு உயிர்கள் பொருட்டாகும் எனும் அமைப்பும், 'பாசிச எதிர்ப்பு" இயக்கமும் நிறவெறிக்கு எதிரான இப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. பிளாய்டின் உயிர்த்தியாகம் வீணாகி விடக் கூடாது என்ற மன உறுதியோடு மக்கள்திரள் போராட்டங்களை இவை ஒருங்கிணைத்தன.

கறுப்பினத்தவர் அடிமைகளாக இருக்க வேண்டியதில்லை என அறிவித்ததற்காகவே ஆபிரகாம் லிங்கன் கொல்லப்பட்டார். அமெரிக்காவில் கறுப்பினத்தவருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும், அதை வழங்கியதற்காகவே ஒரு மாபெரும் தலைவர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதையும் சேர்த்துதான் அமெரிக்க சமூகத்தை அவதானிக்க வேண்டியிருக்கிறது.

ஆபிரகாம் லிங்கனின் தலையை துளைத்த தோட்டாவுக்கு பின்னால் நிறவெறி ஒடுக்குமுறையின் நீண்ட வரலாறு இருக்கிறது. அந்த தோட்டாவை உமிழ்ந்து துப்பாக்கி இன்னும் புகை தணியாமல் இருப்பதற்கு இன்னும் பல சாட்சிகள் அச்சமூகத்தில் நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அமெரிக்காவில் தொடரும் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுச் சென்ற "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை, மூன்று வருடங்கள் கடந்தும் இப்போரட்டம் இன்னமும் ஓயவும் இல்லை.

# காணியை தன் பெயருக்கு எழுதாதமையால் 93 வயதான பாட்டியைத் தாக்கிய மருத்துவர்

கொழும்பு, ஜூன் 11

காணி ஒன்றை தனது பெயருக்கு மாற்றி எழுதி கொடுக்காத காரணத்தினால் ஆத்திரமடைந்து 93 வயதான பாட்டியை தாக்கி காயம் ஏற்படுத்தியமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு தடையேற்படுத்தியமை தொடர்பில் மருத்துவர் ஒருவரை திஸ்ஸமஹாராமை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் கடமையாற்றும் 42 வயதான மருத்துவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான மருத்துவர் காணி பிரச்னையை அடிப்படையாக கொண்டு கடந்த 7 ஆம் திகதி 93 வயதான தனது பாட்டியை தாக்கி காயப்படுத் தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மருத்துவரான தனது பேரன் மூலம் தான் எதிர்நோக்கிய சம்பவம் குறித்து 93 வயதான பெண்மணி திஸ்ஸமஹாராமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் தெபரவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை நடத்த திஸ்ஸமஹாராமை பொலிஸார் மருத்துவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அப்போது விசாரணைகளுக்கு சென்ற பொலிஸாரை கெட்ட வார்த்தைகளால் திட்டி, அவர்களின் கடமைக்கு தடையேற்படுத்தியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர். (அ)

# மன்னார் கப்பலேந்தி மாதா ஆலயம் உடைத்து திருட்டு!



மன்னார், ஜூன் 11

மன்னார் கரிசல் கிராமத்தில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கதவுகள் உடைத்து உண்டியல் உட்பட நற்கருணைக் கிண்ணம் உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலாய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் இனந்தெரியாத விஷமிகளால் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் நேற்று வவுனியா தடயவியல் பொலிஸார் சம் பவ இடத்துக்கு சென்று விசார ணைகளை மேற்கொண்டனர். (அ)

# தெணியானின் சிலை வடமராட்சியில் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 11

கடந்த ஆண்டு மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியானின் (கந்தையா நடேசு) முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வும், உருவச் சிலை திறப்பு நிகழ்வும், "ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் - தெணியான்" நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் - வடமராட்சி பிரதேசத்தின் கரவெட்டி - கொற்றாவத்தையில் அமைந்துள்ள அவர் வாழ்ந்த வீட்டில் நேற்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளரும் கவிஞருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றலை தொடர்ந்து தெணியானின் உருவச் சிலையினையும், கல்வெட்டினையும் மல்லாகம் நீதிமன்றின் பதில் நீதவானும், சட்டத்தரணியுமான சோ. தேவராஜா திறந்து வைத்தார்.

தொடர்ந்து தெணியானின் மனைவி மரகதம் சிலைக்கு மாலை அணிவித்தார்.

சோ. தேவராஜாவின் திறப்புரையினை தொடர்ந்து நூல் வெளியீட்டுரையையும் கருத்துரையினையும் எழுத்தாளர் மு. அநாதரட்சகன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து தெணியான் பற்றிய நினைவுப் பகிர்வினை கலாநிதி ந. ரவீந்திரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிலையை வடிவமைத்த இளம் சிற்பியான கெங்காதரன் இந்துசன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

தெணியானின் குடும்பத்தவர்களுடன் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்த ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

இந்நிகழ்வில் கிராமத்தவர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள், வாசகர்கள், கல்வியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் 1964 ஆம் ஆண்டு முதல் 58 வருடங்கள் இலக்கியப் பணி ஆற்றியுள்ளார்.

ஒரு கல்வியலாளனாக, ஆசிரியராக, சமூக மாற்றத்துக்காக குரல் கொடுத்து செயற்பட்ட சமூகப் போராளியாக விளங்கிய அவர் 14 நாவல்கள் 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 50 க்கும் மேற்பட்ட கட்டுரைகள், 30 க்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்து நாடகங்கள் உள்ளிட்ட பல்வேறு படைப்புகளை படைத்துள்ளார்.

அரசின் உயர்விருதான சாகித்திய ரத்னா விருதைப் பெற்றவர்.

சிறுபான்மை தமிழர் மகா சபையின் தலைவராகவும், ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் சேவையாற்றியதோடு ஒடுக்கப்பட்ட மக்களுக்காக என்றுமே ஓங்கி ஒலித்த குரல் தெணியானின் உடையது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)






# இலங்கையில் இருந்து பனங்கிழங்கு, வெற்றிலை கொண்டு சென்றவருக்கு அவுஸ்திரேலியாவில் பெருந்தொகை தண்டம்!

கொழும்பு, ஜூன் 11

அவுஸ்திரேலியாவிற்குள் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்ட பொருட்களை, கடந்த சில வாரங்களில் மறைத்து எடுத்து சென்ற 4 பேருக்கு, 22,000 டொலர் அப ராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதில் அபராதம் விதிக்கப்பட்டவர்களில் இலங்கையரும் ஒருவர். அவர் மே 16 அன்று சிட்னி விமான நிலையத்தில் சிக்கினார். ஒடியல் மா, வாழைப் பழம், வெற்றிலையுடன், சில தாவர தண்டுகளையும் மறைத்து கொண்டு சென்றுள்ளார்.

சட்டவிரோதமாக தாவரங்களை அவுஸ்திரேலியாவுக்குள் எடுத்து செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு 5,500 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.



கடந்த ஆண்டு இந்தோனேசியாவில் விலங்குகளில் நோய்த் தொற்று கண்டறியப்பட்டதிலிருந்து அவுஸ்திரேலியாவின் உயிரியல் பாதுகாப்பு அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளனர். அவுஸ்திரேலியாவில் விலங்கு வைரஸ் பரவினால் பல்லாயிரக்கணக்கான பில்லியன் டொலர்கள் அழிக்கப்படலாம் என கருதுகிறார்கள். ஆபத்தான் பக்டீரியாக்கள் மூலம் விவசாயத்துறை பாதிக்கப்பட்டால் 11 பில்லியல் டொலர் வரை இழப்பு ஏற்படுமென மதிப்பிடப்படுகிறது.

உயிரியல் பாதுகாப்பு சட்டங்கள் கடந்த ஆண்டு இறுதியில் திருத்தப்பட்டன. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் அதிகபட்ச அபராதம் 5,500 டாலர் ஆக உயர்த்தப்பட்டது.

இலங்கையர் தவிர, வியட்நாம், பிலிப்பைன்ஸை சேர்ந்த மேலும் 3 பயணிகளிடமும் தண்டம் அறவிடப்பட்டது. (அ)

# 19 வயதான யுவதியை கடத்திச்சென்று வல்லுறவுக்கு உள்ளாக்கிய 2 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 11

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் யுவதி ஒருவரை கடத்திச் சென்று தோட்டமொன்றில் உள்ள காவலாளி வீட்டில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்த இரண்டு சந்தேக நபர்களை வரக்காபொல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பின்தெனிய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதி, கடந்த ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வீதியில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

ஓட்டோவில் வந்த இருவர் வழி காட்டுவது போல் பாவனை செய்து ஏமாற்றி அம்பேபுஸ்ஸ வஹாவிட்ட பிரதேசத்தில் உள்ள காணியில் உள்ள காவலர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு இருவரும் சேர்ந்து யுவதியை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு மீண்டும் வீதியில் விட்டுச் சென்றுள்ளனர். யுவதி வரக்காபொல பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் 20 மற்றும் 24 வயதுடையவர்கள். அவர்கள் இருவரும் அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். சந்தேகநபர் ஒருவர் கார் மெக்கானிக் மற்றும் மற்றையவர் ஓட்டோச் சாரதி ஆவார். சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(அ)

# உரிய நேரத்தில் அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு, ஜூன் 11

"உரிய நேரத்தில் உரிய வகையில் அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி மேற்கொள்வார்." - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

அத்துடன், நவீன் திஸாநாயக்க ஆளுநராக பதவியேற்கவுள்ளார் எனவும் அவர் கூறினார். (அ)

# ஊடறு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

கோ. ந. மீனாட்சியம்மாள் படைப்புகள், சங்கமி ஆகிய நூல்களின் வெளியீடும் மலையகம் 200 கடந்த காலமும் நிகழ்காலமும் உரையாடலும் இன்று 3.00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் கலாநிதி சு. குணேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் எம்.எம். ஜெயசீலன், உ. ஜெயலட்சுமி, ச. சத்தியதேவன், சி.ரமேஸ், ஷப்னா இக்பால் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (அ)

# மதநிந்தனைப் பேச்சுக்கள்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா கடந்தவாரம் எழுதிய 'குறிப்பிட்ட சிலரை தெரிவுசெய்து நடவடிக்கை எடுப்பது சட்டத்தின் நோக்கம் அல்ல" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையொன்றில், 'நடாஷா அறகலய போராட்டத்தில் கலந்துகொண்டவர் என்று தகவல் இருப்பதால் அவரது பிரச்சினையை விசேட கவனத்துடன் நோக்குவதாக பொலிசார் கூறியதாக அரசாங்க ஊடகங்களில் வெளியான செய்தி அவருக்கு எதிரான நடவடிக்கை அரசியல் நோக்கம் கொண்டது என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்வதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அந்த சர்வதேச உடன்படிக்கையை (International Convention on Civil and Political Rights - ICCPR ) இலங்கை 1980 ஆண்டில் ஏற்றுக்கொண்டது. அது தொடர்பிலான சட்டம் 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டம் என்று அழைக்கப்படும் அந்த சட்டம் பாரபட்சத்தை, பகைமையை அல்லது வன்முறையை தூண்டிவிடும் வகையில் அமையக்கூடியதாக போர் அல்லது தேசிய, இன,மத வெறுப்புணர்வை பிரசாரப்படுத்துவதை குற்றச்செயலாக கருதுகிறது. அத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படக்கூடிய எவரையும் மேல் நீதிமன்றத்தைத் தவிர அதற்கு கீழ்நிலையில் உள்ள எந்த நீதிமன்றமும் பிணையில் விடுவிக்கமுடியாது.

ஆனால் அந்தச்சட்டம் வியாக்கியானப் படுத்தப்படுகின்ற அல்லது பிரயோகிக்கப்படுகின்ற எதேச்சையான விதம் அரசாங்கங்கள் அதை எதிர்க்கருத்துக்களை கொண்டவர்களை அடக்குவதற்கும் சிறுபான்மை இனத்தவர்களை கொடுமைப்படுத்துவதற்கும் தவறாக பயன்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுக்கிறது.

நடாஷாவின் பேச்சு வெறுப்புப்பேச்சாக அமைந்திருக்கிறது என்ற அடிப்படையில் அதை சட்டவிரோதமானதாக கருதுவதானால் குறிப்பிட்ட ஒரு மதக்குழுவுக்கு எதிராக பாரபட்சத்தையும் பகைமையையும் காட்டுமாறும் வன்முறையில் இறங்குமாறும் மற்றவர்களைத் தூண்டிவிடும் நோக்கில் அவர் செயற்பட்டார் என்பதை தெளிவாகக் காண்பிக்கவேண்டியது அவசியமாகும் என்று மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

**சுதந்திரத்தின் எல்லை**

தற்போதைய சர்ச்சை கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பிலும் வாதப் பிரதிவாதங்களை கிளப்பியிருக்கிறது.

பேச்சுச் சுதந்திரமும் சிந்தனைச் சுதந்திரமும் உலகளாவ அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள். எமது ஏனைய சுதந்திரங்களுக்கான முன்தேவையாக சுதந்திரமாக பேசுவதற்கான உரிமை இருக்கிறது. ஆனால் உரிமைகள் எப்போதுமே பொறுப்புணர்வுடனேயே அனுபவிக்க வேண்டியவையாகும். பொறுப்புணர்வுடன் ஒரு உரிமையை நாம் பயன்படுத்தவில்லையானால் அந்த உரிமைக்கு உண்மையில் நாம் அருகதை உடையவர்களா என்ற கேள்வி நிச்சயமாக எழுவே செய்யும்.

சுதந்திரங்களை விரும்புவது மனித இயல்பு. தலையீடின்றி அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. அதே உரிமையை சமூகத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய முறையில் கருத்துக்களை முன்வைப்பதற்கு எவரும் பயன்படுத்துவதை ஒருபோதும் நியாயப்படுத்தவோ அனுமதிக்கவோ முடியாது. அது அடிப்படையில் வெறுப்புப்பேச்சாகவே கருதப்படும்.

கையை நீட்டுவதற்கு எமக்கு இருக்கும் சுதந்திரம் மற்றவர்களின் மூக்கு நுனியின் முன்னால் முடிவடைகிறது என்று சுதந்திரம் பற்றி கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மூன்று தசாப்தங்களாக அமெரிக்க உச்சநீதிமன்ற நீதியரசராக இருந்த ஒலிவர் வென்டெல் ஹோம்ஸ் ஜூனியர் கூறியதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரையிலும் கூட அதை கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக கருதமுடியாது. சமூகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத முறையில் அந்த சுதந்திரத்தை ஊடகங்கள் நிதானமாக -பொறுப்புணர்வுடன் பயன்படுத்தவேண்டும். ஊடக சுதந்திரம் என்பது காட்டுக்கழுதையின் சுதந்திரம் அல்ல.

**சமூக உடன்பாடு**

கட்டுப்பாடின்றிய முற்றுமுழுதான சுதந்திரம் சமூகத்தில் அராஜகத்தை தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. அத்தகைய அராஜக நிலை உருவாவதை தடுப்பதற்கே சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான சமூக உடன்பாடு (Social Contract) என்ற கோட்பாடு மேற்குலகில் வகுக்கப்பட்டது.

சமூக உடன்பாட்டின் ஜனநாயக அடிப்படையிலான வியாக்கியானத்தின் பிரகாரம் சமூகத்தில் பொது ஒழுங்கையும் பாதுகாப்பையும் உறுதிப்டுத்துவதற்காக மக்கள் தங்களின் உரிமைகளில் சிலவற்றை தங்களால் தெரிவுசெய்யப்படும் அரசிடம் ஒப்படைக்கிறார்கள். அரசு அரசியலமைப்பு ரீதியான தடுப்புகளுக்கும் சமப்படுத்தல்களுக்கும் (Checks and Balances) கட்டுப்பட்டதாக இருக்கும் இருக்கும் அதேவேளை மக்கள் சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அதன் அடிப்படையில் நோக்கும்போது சுதந்திரமாகப் பேசுவதற்கான உரிமை பொது அமைதியைப் பேணுவதற்கு இயற்றப்பட்ட சட்டங்களினால் நெறிப்படுத்தப்படுவதாக அமைகிறது. இது தனி மனிதர்களின் உரிமைகளை விடவும் சமூகத்தின் கூட்டு நல்வாழ்வு முக்கியமானது என்ற கோட்பாட்டின் வழியிலானதாகும்.

இதை மதங்களை விமர்சிக்கமுடியாது என்று அர்த்தப்படுத்தலாகாது என்று சில ஆய்வாளர்கள் வாதிடுகிறார்கள். சுதந்திரமான ஜனநாயக சமூகமொன்றில் மதங்கள் மீதான விமர்சனங்கள் கல்விப்புலம் சார்ந்த அல்லது அறிவுஜிவித்துவ செயற்பாடு என்பதால், மதங்களைப் பின்பற்றுபவர்களின் உணர்வுகளைப் அவமதிக்காமல் அமையும் பட்சத்தில் அவற்றை சகித்துக்கொள்ளவேண்டும் என்பது மாத்திரமல்ல உற்சாகப் படுத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

**அங்கதப்பேச்சு**

இது இவ்வாறிருக்க, தற்போதைய சர்ச்சை கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தின் ஒரு அங்கமான அங்கதப் பேச்சுக்களுக்கு (Satire) அச்சுறுத்தலாக அமைவதாகவும் கவலை வெளியிடப்படுகிறது. ஊடகங்களில் வெளியாகும் கேலிச்சித்திரங்கள் மீது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைச் சட்டம் பாயக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அங்கதப் பேச்சுகள் எப்போதுமே ஒரு சிக்கலான விடயத்தை நகைச்சுவை உணர்வுடன் சுலபமாக விளங்க வைப் பவையாகும்.

எமது இளமைக்காலத்தில் கம்யூனிஸ்ட் தலைவர் காலஞ்சென்ற என் .சண்முகதாசனின் அரசியல் வகுப்புக்களுக்கும் கூட்டங்களுக்கும் நாம் செல்வது வழக்கம். ஆயுதப்போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கு அவர், 'காளிதேவி என்ன கத்தரிக்காய் வெட்டுவதற்கா கத்தி வைத்திருக்கிறா? முருகனின் கையில் வேல் எதற்கு? சிவபெருமான் கையில் எதற்கு திரிசூலம்?" என்று தனது பேச்சில் கூறுவார்.

அவ்வாறான அங்கதப் பேச்சுக்களை மக்கள் அன்று ரசித்தார்கள். அவர் இந்துக் கடவுளரை இழிவுபடுத்தினார் என்று எவரும் குற்றஞ்சாட்டியதாக நாம் அறியவில்லை.

**அரசியல் பின்னணி**

இன்று மதங்கள் தொடர்பிலான அறிவுபூர்வமான அல்லது அங்கத தன்மையான விமர்சனங்கள் தொடர்பில் அளவுக்கு அதிகமான எதிர்ப்பு வெளிப்படுத்தப்படுவதன் பின்னணியில் ஒரு அரசியலும் இருக்கவே செய்கிறது. அதற்காக மதங்களை இழிவுபடுத்தும் பேச்சுக்களை அனுமதிக்கவேண்டும் என்று இங்கு வாதிடுவதாக அர்த்தப்படுத்தலாகாது.

இறுதியாக இன்றைய நிலைவரத்துக்கு மத்தியில் உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி இடி அமீன் தனது ஆட்சிக்காலத்தில் பேச்சுச் சுதந்திரம் குறித்து ஒரு தடவை தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துவது சுவாரஸ்யமாக இருக்கும்.

'உகண்டாவில் பேச்சுச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், பேச்சுக்குப் பிறகு அந்த சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்த முடியும் என்று உறுதியாகக் கூமுடியாது."

## 300 இற்கு...

தார உபகரணங்கள் மற்றும் உணவுப்பொருட்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்ட பண்டங்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## இந்தியாவின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 10 ஆம் திகதி இந்திய பிரதமரை சந்திக்கவுள்ளார் எனவும், இதன்போது மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்படலாம் எனவும் பலில் தகவல் வெளியிட்டுள்ளார். (அ)

## ஜனாதிபதி...

அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல் யாப்பில் ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை பகிர்ந்து, மாகாண சபை தேர்தல் சட்டத்தில் அதற்கான திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்ற அனுமதியை பெற்று மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு எமது கோரிக்கை அமைந்திருந்தது. அதை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டு, அந்த மாகாண சபையில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிலை நிறுத்துவதற்கான சட்ட வரைபுகளை தான் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த சட்ட வரைவுகளோடு தேர்தல் திருத்த சட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற்று மாகாண சபைகளில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிறுத்தி, மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் இதுவரைக்கும் அந்த விடயங்கள் தொடர்பான தெளிவான கருத்துக்கள் எதுவும் ஜனாதிபதியால் கூறப்படவில்லை.

இந்த நிலையிலே ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்து மாகாண சபையை வழி நடத்துவதற்காக ஜனாதிபதி எடுக்கின்ற முயற்சியும், அதை எமது தமிழர் தரப்பினரே அரசியல் கோரிக்கையாக முன்வைத்திருப்பதும் கவலையளிக்கிறது.

ஜனாதிபதியுடைய மாகாண சபை வழிநடத்தல் குழு என்பது அவரால் அமைக்கப்பட வேண்டிய ஒன்று, அதனை நாங்கள் வலிந்து கேட்பது அவசியமற்றது. அது ஏற்கனவே ஒரு நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயம். நாங்கள் கேட்பது அரசியல் நிலைப்பாடு. அதாவது மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும், பறிக்கப்பட்ட அதிகாரங்களோடு ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ஒரு அரசியல் கோரிக்கை.

ஆகவே நாங்கள் இந்த அரசியல் கோரிக்கைக்கு புறம்பான ஒரு நிர்வாக ரீதியான ஆலோசனை சபையை அமைக்கும் விடயத்தை கோரிக்கையாக, அதாவது அரசியல் கோரிக்கையாக முன்வைப்பது அபத்தமானது ஆகும். அது ஜனாதிபதி அவருடைய தேவை கருதி எடுக்க வேண்டிய நடவடிக்கை. ஆகவே நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டில் அனைத்து தமிழ் தரப்பும் உறுதியாக இருக்க வேண்டும்.

மாறாக தனித்து செயற்பட முற்படுகின்றபோது, எமது பிரதான கோரிக்கையான அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்துதல் என்ற விடயங்களுக்கு இவை குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி, தேர்தல்களைப் பிற்போடுவதற்கு இதைப் பயன்படுத்துகின்ற அபாய சூழ்நிலை இப்போது எழுந்திருக்கிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினர் பொறுப்பு கூற வேண்டும் என்பது எங்களது நிலைப்பாடு-என்றுள்ளது. (அ)

## அடுத்த...

வெற்றி பெற வைக்கவேண்டும் என்று மொட்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினரான செஹான் சேமசிங்க விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மொட்டு கட்சி செயலாளர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், மொட்டு கட்சியினர் அமைச்சுப் பதவி கேட்டு அலையப் போவதில்லை எனவும், அமைச்சுப் பதவி கிடைக்காததால் மாவட்டத் தலைவர்கள் சிலர் அதிருப்தியில் உள்ளனர் எனவும் சாகர காரியவசம் தெரிவித்தார். (அ)

## 33 வருடங்...

கொல்லை வைரவர் ஆலயம், அதனை சூழவுள்ள தனியார் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

இதனை அடுத்து அவை மிக விரைவில் மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளன.

இப்பகுதியை விடுவிக்குமாறு கோரி அப்பகுதி மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழர்...

ரணில் விக்கிர மசிங்க அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரை யாடி புதிய அரசியல மைப்பின் ஊடாக அரசியல் தீர்வை காண முனைந்தால் அதற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழர்களின் தீர்வுக்கான கலந்துரையாடலை முன்னெடுத்தால் அந்தக் கலந்துரையாடல் தோல்வியிலேயே நிறைவடையும்.

தீர்வு என்ற பெயரில் தமிழ்க் கட்சிகளை இனிமேல் ஏமாற்ற முடியாது. சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக உள்ளார்கள்-என்றார். (அ)

## கொழும்பு...

உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மிகக் குறைந்த அதாவது 04 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம் - 18 பாராளுமன்ற உறுப்பினர்கள், களுத்துறை மாவட்டம் - 10 பாராளுமன்ற உறுப்பினர்கள், கண்டி மாவட்டம் - 12 பாராளுமன்ற உறுப்பினர்கள், குருநாகல் மாவட்டம் - 15 பாராளுமன்ற உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்டம் - 11 பாராளுமன்ற உறுப்பினர்கள், காலி மாவட்டம் - 09 பாராளுமன்ற உறுப்பினர்கள், மாத்தளை மாவட்டம் - 05 பாராளுமன்ற உறுப்பினர்கள், நுவரெலியா மாவட்டம் - 08 பாராளுமன்ற உறுப்பினர்கள், மாத்தறை மாவட்டம் - 07 பாராளுமன்ற உறுப்பினர்கள், ஹம்பாந்தோட்டை மாவட்டம் - 07 பாராளுமன்ற உறுப்பினர்கள், திகாமடுல்ல மாவட்டம் - 07 பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாவட்டம் - 07 பாராளுமன்ற உறுப்பினர்கள், வன்னி மாவட்டம் - 06 பாராளுமன்ற உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்டம் - 05 பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்தளம் மாவட்டம் - 08 பாராளுமன்ற உறுப்பினர்கள், அனுராதபுர மாவட்டம் - 09 பாராளுமன்ற உறுப்பினர்கள், பொலன்னறுவை மாவட்டம் - 05 பாராளுமன்ற உறுப்பினர்கள், பதுளை மாவட்டம் - 06 பாராளுமன்ற உறுப்பினர்கள், மொனராகல மாவட்டம் - 06 பாராளுமன்ற உறுப்பினர்கள், கேகாலை மாவட்டம் - 09 பாராளுமன்ற உறுப்பினர்கள் 2023ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)



# காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு தீர்வு வேண்டும்

### அமைச்சர் அலி சப்ரியிடம் செஞ்சிலுவை பிரதிநிதிகள்

கொழும்பு, ஜுன் 11

காணாமல்போனோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபத்துவரும் துன்பத்துக்கு உடனடியாகத் தீர்வை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சரிடம் செஞ்சிலுவை பிரதிநிதிகள் இவ்வாறு வலியுறுத்தினர். (அ)

### சர்வதேச நாணய நிதியத்தின்

# 62 முக்கிய நிபந்தனைகளில் இதுவரை 25 மட்டுமே பூர்த்தி

கொழும்பு, ஜுன் 11

சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய 62 நிபந்தனைகளில் இதுவரை இருபத்தைந்து நிபந்தனைகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது தவணையைப் பெறுவதற்கு முன்னர் இந்த ஒப்பந்தங்களை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படவிருந்த புதிய மத்திய வங்கிச் சட்டத்துக்கு பாராளுமன்ற அனுமதி பெற்றுக்கொள்ளப்படாமல் உள்ளது.

மேலும் பந்தயம் மற்றும் கலால் வரிகளை அதிகரிப்பது ஆகிய இரண்டு உடன்படிக்கைகளை இலங்கை அரசாங்கம் இன்னும் நிறைவேற்ற வில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

அத்தோடு நிதி வெளிப்படைத்தன்மைக்கான இணைய முறையை உருவாக்குவது என்ற உறுதிப்பாடும் நிறைவேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்குள், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் 37 நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசியல்...

எமது நாட்டில், பல்வேறு காரணிகளால் தற்போது புத்த சாசனம் சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பௌத்தத்தை ஒரு அரசியல் ஆயுதமாக்குவதால்,மதம் பெறவேண்டிய உயர்வான அந்தஸ்து குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த உன்னதமான சாசனத்தைப் பாதுகாப்பது அனைத்து பக்தர்களினதும் புரோகிதர்களினதும் பொறுப்பாகும். மதமும் ஆட்சியும் ஒன்றாகக் கலக்கக்கூடாது. பௌத்தத்தை ஒரு அரசியல் ஆயுதமாக்குவதில்,மதம் பெறவேண்டிய உயர்வான அந்தஸ்து குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுகிறது.

புத்த சாசனத்தைப் பாதுகாப்பது வெறும் வார்த்தைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் நடைமுறைச் செயல்களால் அமைய வேண்டும்.

புத்தபெருமான் போதித்த தசராஜ தர்மத்தின் பிரகாரம் அரசாட்சி நடத்தப்பட்டால் நாடும்,இனமும்,மதமும்,புத்த சாசனமும் பாதுகாக்கப்படும். அந்த இலக்கை அடைவதற்கு செயற்படுவது அனைவரின் பொறுப்பாகும். தற்போது பொய் கோலோச்சி உண்மைமூடி மறைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## எந்தத்...

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

குறிப்பாக ஜனாதிபத் தேர்தலுக்குக் கூட பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும் மகிந்த கூறினார்.

இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை மற்றும் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் குறித்தும் இதன்போது ஊடகவியாளர்களினால் அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

குறித்த சட்டமூலத்தை தான் இதுவரை பார்க்கவில்லை என்றும் தற்போது நாட்டில் சுதந்திரமான ஊடகம் இருப்பதாகவும் மகிந்த குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# மீண்டும் ஆயுத போராட்டம் நாட்டில் ஏற்படும் அபாயம்!

## எச்சரிக்கிறார் ஹெக்டர் அப்புகாமி

கொழும்பு, ஜூன் 11

**இலங்கையில் தற்போது ஹிட்லர் ஆட்சியே நடைபெற்று வருவதாகவும் இந்த ஆண்டு இனங்களுக்கு இடையிலான முறுகல் நிலை அதிகரித்துள்ள நிலையில் மீண்டும் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலிமுகத்திடல் போராட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை.

ஆனால் மாறியது ஜனாதிபதி ஒருவர் சென்று, இன்னொருவர் மாறியது மட்டுமே.ஜனாதிபதியாக புதிதாக வந்தார், மக்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

அன்று இருந்த பொருளாதார வீழ்ச்சி இன்றுவரை காணப்படுகிறது மாற்றம் என்பது இல்லை.

மக்கள் பிரச்னைகளோடே, குடும்பத்தை நடத்தி வருகின்றனர்

நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு மக்கள் நீதி கேட்டால் உங்களை கைது செய்வோம், என அரசு அச்சுறுத்தல் செய்வது நியாயமா.?

மீண்டும் நாட்டில் சாதி இனபேத உருவாகி வருகிறது. இதன் மூலம் மீண்டும் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை உருவாகும். அரசாங்கமே மக்களுக்கு பிரச்னை வழங்குகின்றது அதற்கு நீதி கேட்டால் அவர்களை கொல்லுவேன் என்று கூறினால் என்ன..? இது ஹிட்லர் ஆட்சி போன்றே உள்ளது-என்றார். (அ)



# பண்ணையில் விபத்து; இரண்டு பேர் படுகாயம்

யாழ்ப்பானம், ஜூன் 11

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்திற்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

யாழ். பண்ணைப் பாலத்திற்கு அருகாமையில் நேற்று முற்பகல் 10மணியளவில் பிக்கப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன எதிர் எதிரே மோதிக் கொண்டதில் அதில் பயணம் செய்த அல்லைப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (அ)

# சங்கரியை பாராட்டுகிறார் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 11

துரோகி என விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் கருத்து தெரிவித்தபோதும், இலங்கையின் அரசியலை துல்லியமாக கணித்து துணிந்து செயற்பட்டவர் ஆனந்த சங்கரி என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரியை பாராட்டும் ருவிட்டர் பதிவொன்றை அலி சப்ரி பதிவிட்டுள்ளார்.

ஆனந்தசங்கரி குறித்து வெளியாகியுள்ள கட்டுரையை பகிர்ந்துகொண்டுள்ள அமைச்சர், சங்கரி குறித்த பதிவினையும் வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியில் தங்களுடன் உடன்பட மறுப்பவர்களையும் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்வதில்லை.

விடுதலைப்புலிகளின் கட்டளைகளுக்கு அடிபணியாத அல்லது அதனை மீறத் துணிந்தவர்கள் இரக்கமற்ற முறையில் கையாளப்பட்டனர்.

விடுதலைப்புலிகளை பல்வேறு கால கட்டங்களில் புண்படுத்திய பல தமிழ் அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளும் அவர்களுடன் இணைந்து பயணித்தவர்களும் ஆனந்தசங்கரியை துரோகி என அவதூறாகக் கண்டித்திருந்தனர்.

ஆனால் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை சரியாக புரிந்துகொண்டவர் ஆனந்த சங்கரி என்றும் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். (அ)

# எச்.ஐ.வி தொற்றுடன் இருவர் வவுனியாவில் அடையாளம்

வவுனியா, ஜூன் 12

வவுனியாவில் வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் எச்.ஐ.வி தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்ட இருவரும் ஆண்களாவர்.

வவுனியா மாவட்டத்தில் எச்.ஐ.வி சிகிச்சைப் பிரிவு 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டத்தில் இருந்து கடந்த டிசெம்பர் வரை 30 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் சிகிச்சைக்கு பிந்திய நிலையில் வந்தவர்கள் மற்றும் சீராக சிகிச்சை பெறாத 7 ஆண்களும் 5 பெண்களுமாக 12 பேர் இறந்துள்ளனர்.

ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# யாழ்.மாவட்டத்தில் 5 மாதங்களில் 277 குற்றச்செயல்கள் பதிவாகின!

யாழ்ப்பாணம், ஜூன் 11

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 5 மாதங்கள் வரை யாழ். மாவட்டத்தில் சுமார் 277 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவான குற்றச்செயல்கள் கதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸார் வழங்கியுள்ள தகவலின் அடிப்படையில் யாழ்.பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் 109 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் 44 குற்றச் செயல்களும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 30 குற்றச்செயல்களும் பதிவாகியுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவு - 17 குற்றச் செயல்கள், ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவு - 26 குற்றச் செயல்கள், மானிப்பாய் பொலிஸ் பிரிவு - 19 குற்றச் செயல்கள், கொடிகாமம் பொலிஸ் பிரிவு - 08 குற்றச் செயல்கள், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவு - 06 குற்றச் செயல்கள், நெடுந்தீவு பொலிஸ் பிரிவு - 18 குற்றச் செயல்களும் 5 மாதங்களில் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 350 ஆசிரியர்களுக்கு வடக்கில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வட மாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 350 கற்பித்தல் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்கு மாகாணத்தில் வெற்றிடம் உள்ள பாடசாலைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு ஆசிரியர் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உமா மகேஸ்வரன் தெரிவித்தார். அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 08.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களை வட மாகாண சபை இணையத்தளம் றறற.லி.பழஎ.டம. வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.cdumin.np.gov.lk ஆகியவற்றில் பார்வையிட முடியும்-என்றுள்ளது. (அ)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 4 மாதங்களில் 3000 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 11

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மூவாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் அதன் தலைவர் உதயகுமார அமரசிங்கவிடம் வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் எண்ணாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில், சிறுவர்களின் செயற்பாடுகள், கல்வி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில் மூவாயிரம் முறைப்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார். (அ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை 2 ஆயிரம் வீதமாக உயர்வடைந்தது

கொழும்பு, ஜூன் 11

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2000 வீதமாக அதிகரித்துள்ளதாக பேராசிரியர் நிலீகா மலவிகே தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தை கூறியுளார்.

கடந்த வருடத்தில் ஜனவரி மாதம் முதல் ஜ/ன் மாதம் 9ஆம் திகதி வரை நாட்டில் 2 ஆயிரத்து 52 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர்.

எனினும், இந்த வருடத்தின் நேற்று முன் தினம் வரையான காலப்பகுதியில் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 184 ஆகும் என அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 10 வருட காலப்பகுதியில், பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில், தற்போது வரையில் அதிக அவதானம் மிக்க 61 சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.